# தங்கச்சியம்மா



நந்தி

100/-

# தங்கச்சியம்மா

(நாவல்)

PUBLIC LIBRARY
JAFFNA

பொது சன நூலகம்
20-11-1993
யாழ்ப்பாணம்

167457

நந்தி

99116

பூபாலசிங்கம் புத்தகசாலை
4A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

184, பிராட்வே : : சென்னை-600 108.

99116 N

தங்கச்சியம்மா (சமூக நாவல்)
குமரன் பதிப்பகம்
முதற் பதிப்பு : ஆகஸ்டு 1993

விலை : ரூ. 20-00

THANGACHIAMMA
A Tamil Social Novel
by NANDI ©

| | | |
|---|---|---|
| First Edition | : | AUGUST 1993 |
| Pages | : | 166 |
| Size | : | 18 × 12.5 Cm. |
| Types | : | 10 Point |
| Paper | : | 11.6 Kg, CREAMWOVE |
| Binding | : | DUPLEX BOARD |
| Price | : | Rs. 20-00 |
| Published by | : | KUMARAN PUBLISHERS<br>27, 2nd Street,<br>Kumaran Colony,<br>Vadapalani, MADRAS-600 026. |
| Printed by | : | ALAIGAL ACHAGAM,<br>36, South Sivan Koil Street,<br>Kodambakkam, MADRAS-600 024. |

நல்லூர் இல நூலகம்
மை.... மன்றம்
யாழ்ப்பாணம்
99116

# அறிமுகம்

நந்தி என்ற புனைபெயரில் சென்ற நாலு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையில் எழுதிவரும் டாக்டர் செ. சிவஞான சுந்தரம் எழுத்துத் துறையில் மட்டுமல்ல மருத்துவத் துறையிலும் புகழ் பெற்றவர். இலங்கையிலும் இங்கிலாந்திலும் மருத்துவம் கற்றவர். யாழ்ப்பாண மருத்துவக் கல்லூரியில் சமூக வைத்திய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியராகக் கடமையாற்றுபவர். ஐ. நா. சபை சார்ந்த உலக சுகாதார கழகத்தின் சார்பில் பயிற்றுநராக வடகொரியா, பங்களதேஷ், மலேசியா, சிம்பாவே, தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலும் கடமை புரிந்தவர்.

கலை, இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட நந்தியின் முதலாவது நாவல் **மலைக்கொழுந்து** 1965-இல் வெளிவந்து இலங்கை சாகித்திய மண்டலத்தின் பரிசு பெற்றது. அதைத் தொடர்ந்து **ஊர் நம்புமா** என்ற சிறுகதைத் தொகுதி, **உங்களைப் பற்றி** என்ற சிறுவர் நூல், **குரங்கு** என்ற நாடகங்களுடன் **அருமைத் தங்கைக்கு, அன்புள்ள நந்தினிக்கு, நந்தினி உன் குழந்தை** ஆகிய எளிய நடையில் எழுதப்பட்ட வைத்திய நூல்களும் வெளிவந்து பிரபல்யம் பெற்றன. அண்மையில் வெளிவந்த **நம்பிக்கை** என்ற நாவலும் இந்து சமய கலாசார அமைச்சின் பரிசும் பாராட்டும் பெற்றது.

**தங்கச்சியம்மா** என்ற இந்த நாவல் பல வகையில் புதுமையானது. கற்பனைச் சம்பவங்கள் குறைந்தது. சலசலப்பு அதிகமின்றி சமவெளியில் ஓடும் சிற்றாறினைப் போல கதை ஓடுகிறது. சமூக சேவையை அடித்தளமாகக்

கொண்டது; சமுதாய உணர்வு மிக்கது; மருத்துவத் துறையிலும் அறிவூட்டுவது இந்த நாவல்,

நந்தியின் எழுத்துகளிலுள்ள தனிச்சிறப்பு, தான் கற்ற அனுபவ மருத்துவ அறிவினை எளிமையாகத் தன் எழுத்துகளில் கூறுவதாகும். இந்நாவலின் அடித்தளமும் அதுவே.

இலங்கையின் செல்வத்தை உருவாக்கும் மலையகப் பகுதியில் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் உழைக்கும் தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக அங்கு கருதப் படுவது வேதனைக்குரியது. அம்மக்கள் போதிய கல்வி வாய்ப்பு, மருத்துவ வசதியின்றி தோட்டத்து லயங்கள் எனக் கூறப்படும் காம்பரா என்ற சிறிய அறைகளில் வாழவும் நேரிடுகிறது.

உயர்ந்த மலைப் பிரதேசத்தில் வாழ்ந்து, தாழ்ந்த மக்களாகக் கருதப்படும் தொழிலாளர் சமூகத்தைச்சார்ந்த தங்கச்சியம்மா என்ற பெண் மருத்துவமாதாவாக, நர்ஸாகப் பயிற்சி பெற்று யாழ்ப்பாணத்துக் குக்கிராம மான பாசக் குளத்திற்கு பணிபுரிய அனுப்பப்படுகிறாள். அங்கும் சாதியில் தாழ்த்தப்பட்டவராகக் கருதப்படும் சமூகத்தில் சேவை செய்வது முரண் நகைச்சுவை கொண்ட தாகும்.

இந்த நாவலின் காலம் 1973; தேசிய விடுதலைப் போராட்டம் வன்முறைப் போராட்ட வடிவம் எடுக்க முந்திய காலகட்டம் :

தங்கச்சியம்மா ஒடுக்கப்பட்ட ஏழை மக்களிடையே சமுதாய உணர்வோடு ஓராண்டு பணிபுரிவதே நாவலின் விரிவாகும். மருத்துவப் பிரிவு சார்ந்த டாக்டர், மருத்து வம்மா, சுகாதார ஊழியர், கிராம சேவகர் ஆகியவர்க ளிடையே தங்கச்சியம்மா சமூகசேவை உணர்வுடன் கடமை ஆற்றுகிறாள். தனக்கு ஒதுக்கப்பட்ட பிரிவிலுள்ள கர்ப்பமுற்றவர்களைக் கண்காணிப்பது, டாக்டரின்

கிளினிக்கிற்கு ஒழுங்காக அவர்களை வரச் செய்வது, பிரசவம் பார்ப்பதே அவளின் முக்கிய கடமையாக இருந்த போதும் சுகாதார முறைகளைக் கிராமத்தவர் கடைப் பிடிக்க வேண்டிய பிரச்சாரத்திலும் பிற தொண்டர்களை யும் சேர்த்துப் பணிபுரிகிறாள். கிராமத்தவரோடு மட்டு மல்ல, தான் வசிக்கும் கிராம சேவகரின் குடும்பத்தோடும் ஒன்றி விடுகிறாள்.

தங்கச்சியம்மாவின் மருத்துவ சேவைகள்சில விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவளது அன்றாட கடமைகள், பணி கள் மூலம் அக்கிராமத்து மக்களின் சமூக அமைப்பு, வாழ்க்கை முறை, நடிப்பற்ற பேச்சு முறைகள், வறுமைத் துன்பம், மூட நம்பிக்கைகள் யாவையும் நாவல் வெளிப் படுத்துகிறது. யாழ்ப்பாணத்துக் கிராமியப் பேச்சு வழக்கும் ஆங்கில மொழி சார்ந்த உரையாடல் வசன அமைப்பும் தமிழ் நாட்டவருக்குப் புதுமையாகத் தோன்றும்.

கிராமத்தில் காலரா நோய் பரவுவதும் தடுப்பு முறைகளும் மரணத் துன்பமும் கூட நாவலின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. சோமசெட்மோம் சீனாவில் கண்ட காலரா கொடுமை பற்றிய நாவலையும் அல்பேட் காமுவின் காலராவையும் இந்நாவலும் நினைவூட்டுகிறது.

கொடிய காலரா பரவும் ஒரு சூழலில் ஆசிரியர் நந்தி டாக்டராகப் பணியாற்றியுள்ளார் என்பது வெளிப்படை. அல்லது இத்தனை விவரமாக காலராவைக் கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வருவதை விரித்திருக்க முடியாது. காலராவைக் கட்டுப்படுத்த இலங்கையின் பிறபாகம் சார்ந்த டாக்டர்கள் மட்டுமல்ல ஐ. நா சபை சார்ந்த உலக சுகாதாரக் கழகத்தில் பணிபுரியும் டாக்டர்களும் அக் குக்கிராமத்துக்கு வந்து பணிபுரியும் முறை நாவலோடு சிறப்பாகப் பின்னப்பட்டுள்ளது.

சாதியில் தாழ்ந்தவராகக் கருதப்படுபவர்களை சிறுபான்மைத் தமிழர் என்று கூறுவதை நந்தி விரும்பவில்லை. இலங்கையில் தமிழரே சிறுபான்மையினர், அதற்குள் ஒரு சிறுபான்மையினரா என, சமத்துவத்திற்கு வழிகாட்டுகிறார். அத்தோடு சாதி அமைப்பு என்ற சாபக்கேடு பற்றி உலக சுகாதாரக் கழக டாக்டர் மூலம் ஆசிரியர் தமது கண்டனத்தைத் தெரிவிக்கிறார்.

"பிறவிக் குருடர் கூடச் செய்யாத தவறை படித்தவர்கள் செய்யலாமா? நிறபேதத்தில் கூட கண்களுக்கு நிற வித்தியாசம் தெரிகிறது. வெள்ளையர்கள் தாங்கள்தான் உயர்சாதி என்று கூறக்கூடும், அப்படியே கறுப்பர்கள் தாங்களே உயர்ந்தவர்கள் என்றும் கூறலாம். ஆனால் இங்கே (சாதியில்) எந்த வித்தியாசத்தையும் காண முடியாதே."

புதுமையான சமூகசேவையை அறிவுறுத்தும் சமுதாய உணர்வு மிக்க நாவல். நந்தியை வாழ்த்துகிறேன்.

செ. கணேசலிங்கன்.

சென்னை.
21-8-93.

PUBLIC LIBRARY
JAFFNA.

# தங்கச்சியம்மா

## 1973

ஒரு பனை உச்சி சூரியனை மறைத்துக் கொண்டிருந்தது. தை மாதப் பனி இன்னும் கலையவில்லை. யாழ்ப்பாணக் குடாநாடு எங்கள் மலைநாடு போல் குளிர்ந்தது.

நான் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கு வந்தபோது, அங்கே பீயோன் கந்தையா மட்டும் நின்றார். அவர் என்னை நன்கு பார்த்துவிட்டு, "நீர் தானா புதிய மிட்வைஃப்?" என்று கேட்டார்.

"ஆம்" என்றேன் நான்.

"அந்த வாங்கிலே இருந்து கொள்ளும். ஐயா எட்டு மணிக்கு வருவார், ஜோசப் அம்மா இப்ப வருவா" என்று கூறினார் கந்தையா.

சிறிது நேரத்தில் ஒரு 'கன்வஸ்' பையுடன் வந்தார் அவர். "உம்முடைய பெயர் என்ன பிள்ளை?" என்று வினவினார்.

'தங்கச்சியம்மா'.

"அப்ப தங்கச்சி என்று கூப்பிடவா". அவருடைய வெற்றிலைக் காவி படிந்த அலங்கோல பல் வரிசைகள் இரண்டும் சிரித்தன.

"நீர் கலியாணம் ஆனவரா?"

''இல்லை''—வாய் திறவாமலே தெரிவித்தேன்.

தெரு வரையில் போய்விட்டு, எதையோ மறந்து போனவர் போல் திரும்பி வந்தார் கந்தையா. அவர் கூறினார்:

''தங்கச்சி, இரண்டு மருத்துவ மாதுக்களின் வட்டாரங்கள் காலியாக இருக்கு. ஒன்று டவுண் வட்டாரத்தில் ஒரு பகுதி; மற்றது பாசக்குளம் கிராமம். நீர் டவுண் வட்டாரத்தில் வேலை செய்யக் கேளும். பாசக்குளம் பகுதியிலை வேலை செய்து கொள்ள மாட்டீர். அது குறைஞ்ச சாதிக்காரரின் பகுதி. எல்லாரும் நட்டாமுட்டியள். நான் அறிய, ஒரு மருத்துவப் பெட்டையும் அங்கே போனது இல்லை. இருக்கக்கூட நல்ல வீடு எடுக்க முடியாது.''

கந்தையா இவ்வளவும் கூறி விட்டு எந்தவித பதிலையும் உடனே எதிர்பாராதவர் போல்போய்விட்டார். அவருடைய தோற்றம் என் கண்களில் சில வினாடிகள் நிழலாடியது. அடர்த்தியான நரைக்கும் முடி; ஆனால் கத்தோலிக்க குருமாருக்கு இருப்பது போலத் தலை உச்சியில் ஒரு வெற்றிடம். குறிகள் இடாது பூசப்பட்ட திருநீறு; அதன் மையத்தில் அயறு வெடிக்கும் புண்போல் குங்குமம் கலந்த ஒரு சந்தனப் பொட்டு. வலது காதில் தாமரைப் பூவின் ஓர் இதழ்...

அலுவலகத்து டெலிபோன் மணி அடித்தது. உள்ளே டெலிபோனை எடுத்து யாரோ ஒருவர் பேசும் குரல் கேட்டது. ஏற்கனவே அங்கே ஒருவர் வந்திருக்கிறார். கந்தையா இவரைப் பற்றி எனக்குக் கூறவில்லை. டெலிபோன் பேச்சு முடிந்ததும், அலுவலக அறைக்குள் எட்டிப் பார்த்தேன். அங்கே வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் என்னைப் பார்த்தார். அவர் அலுவலகத்தின் கிளாக் என்று ஊகித்துக் கொண்டேன். அவர் கேட்டார்: ''நீங்கள் தான் தங்கச்சியம்மா அண்ணாமலையா?''

"ஆம் சேர்"

அவர் கைகூப்பி வணங்கினார்; நானும் வணங்கினேன். "நான்தான் கிளாக், எனது பெயர் கறீம். சொந்த ஊர் நாவலப்பிட்டி. நீங்களும் மலைநாடு தானே?"

"ஆம் சேர், கொத்மலை. படித்தது நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில்."

கறீம் ஐயா சில ஃபைல்களைப் புரட்டிவிட்டு, ஒரு ஃபைலை எடுத்தார். "நீங்கள் இந்தச் சுகாதார வட்டாரத்திற்கு நியமிக்கப்பட்டதாக சுகாதார அத்யட்சகர் கந்தோரில் இருந்து, போன கிழமை கடிதம் வந்தது. நீங்கள் இதற்கு முன் ஓர் இடத்திலும் சேவை செய்யவில்லை அல்லவா." என்று கேட்டார் அவர்.

"ஆம் சேர்; இதுதான் என்னுடைய முதலாவது நியமனம்."

"நல்லது; உமக்கு இங்கே எந்த விதமான கஷ்டமும் இருக்காது. எங்கள் சுகாதார வைத்திய அதிகாரி மிகவும் நல்லவர். எங்கள் பொதுச் சுகாதார தாதி அம்மா திருமதி ஜோசப்; அவவும் மிகவும் நல்லவ. இப்படிக் கூறியவாறு கறீம் ஐயா நடு ஹோலில் இருந்து ஒரு மேசை ஓரமாக ஒரு கதிரையை இழுத்துப் போட்டார். "இதில் உட்காரும்," என்றார். சில வினாடிகளில் கறீம் ஐயா மிக வேகமாக ஏதோ டைப் அடிக்கும் ஓசை கேட்டது.

அந்த ஹோலின் சுவர்களில். சுகாதார வாசகங்கள் எழுதிய பல படங்கள் தொங்கின. ஒரு படம் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்து இருந்தது. கைரேகைச் சாஸ்திரம் கூறுவோர் மாட்டி வைப்பது போல வலது கை ஒன்றின் பெரிய படம். எல்லா ரேகைகளும் அதில் மிகத் துலாம்பரமாக வரையப்பட்டு இருந்தன. கையின் சுட்டு விரலுக்கும் நடு விரலுக்கும் இடையே ஒரு சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. படத்தின் கீழே—ஆயுள்

ரேகையைக் குறைக்காதீர்—என்று மட்டும் சுருக்கமாக ஒரு வாசகம் இருந்தது. எழுந்து போய்ப் படம் வரைந்த வரின் பெயரைப் பார்த்தேன். மிகச் சிறிய எழுத்துக் களில் 'பாலு' என்று இருந்தது.

''இது போன வருஷம் சுகாதார விழாவில் முதலாம் பரிசு பெற்ற படம். பாசக்குளத்து நளப்பெடியன் ஒருத்தன் கீறின படம்'' கந்தையா படத்தையும் சைத்திரி கனையும் எனக்கு அறிமுகப்படுத்தியவாறு வந்து கொண் டிருந்தார். தபால் கத்தோருக்குப் போனவர், சுகாதாரக் கந்தோர் விலாச மிட்ட கடிதங்களை அந்தக் 'கன்வஸ்' பையில் கொண்டு வந்தார்,

அலுவலக அறையில், கறீம் ஐயா, கந்தையாவை ஏசும் சத்தம் கேட்டது. அந்த வேளையில் ட்ராக்டர் போன்ற ஓசையுடன் ஒரு கார் வந்து நின்றது. 'கந்தையா, எம். ஓ. எச். ஐயா செய்ய வேண்டிய வேலையை நீ பார்க்க வேண்டாம்,' என்று எச்சரிக்கை செய்தவாறு ஹோலுக்கு வந்த கறீம் ஐயா. 'டாக்டர் காசிநாதன் எம்.ஓ.எச். வந்திட்டார்' என்று எனக்கு அறிவித்தார்.

எனது நெஞ்சுக் கூட்டுக்குள் இதயம் அடிப்பதை உணர்ந்தேன். வயதுடன் விளைந்த ஓர் உருவம்; வழுக்கு விழுந்த தலையுடன், மொத்தையான முகத்தசைகளுடன் தள தளத்த கோட்டு, களிசானுடன் வரும் என எதிர் பார்த்தேன். ஆனால், நான் படம் போட்ட உருவ மனிதனின் மகனுக்குச் சமானமான ஒருவர்—என் அண்ணாவைப் போல் ஓர் இளைஞர்—விறு விறு என வந்து 'சுகாதார வைத்திய அதிகாரி' என்று வாசலில் குறிக்கப்பட்ட அறைக்குள் நுழைந்தார். என்னை அவர் கண்டாரோ, கண்டும் காணாதது போல் போனாரோ தெரியவில்லை. கறீம் ஐயா அவரை நல்லவர் என்று சொன்னார்.

''ம்ம்; நல்லதும் கெட்டதும் பலரகம்!''

டாக்டரைத் தொடர்ந்து ஃபைல்களை ஏந்தியவாறு நேர்ஸ் அம்மா வந்தாள்.

''ஜோசப் அம்மா, உங்களுடைய ஆள் வந்திட்டா'' என்று என்னை அறிமுகப்படுத்தினார் கந்தையா.

''தங்கச்சியம்மாவா?''

''ஆம் அம்மா'' என்றேன் நான்.

''வாரும்.''

என்னைத் தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்றா ஜோசப் அம்மா. அவவிடம் இருந்து, அந்தச் சுகாதார அதிகாரியின் வட்டாரத்தைப் பற்றிச் சில தகவல் களை நான் அறிந்து கொண்டேன். அங்கே, பத்துச் சுகாதார பரிசோதகர்களும், இருபது மருத்துவ மாதுக் களும் வேலை பார்த்தனர்; ஜோசப் அம்மாவே ஒரே ஒரு சுகாதார தாதி. கந்தையா கூறியதுபோல் டவுணில் ஒரு பகுதியிலும் பாசக்குளம் கிராம வட்டாரத்திலும் மருத்துவ மாதுக்கள் இல்லை. ஆனால், டவுணில் ஓர் அரசாங்க பிரசவ விடுதி இருந்தது; அங்கே ஒரு மருத்துவ மாது பணியாற்றினாள்.

ஜோசப் அம்மா என்னைச் சுகாதார வைத்திய அதிகாரியின் அறைக்கு அழைத்துச் சென்றாள். அப்போ தாவது, டாக்டர் காசிநாதன் ஐயா என் முகத்தைப் பார்ப் பார் என்று எண்ணினேன். அவர், புகைத்துக் கொண்டி ருந்த குறைச் சிகரெட்டைப் பார்த்தே பேசினார்:

''இந்த மருத்துவ மாதைப் பாசக்குளம் வட்டாரத் துக்கு நியமிப்போம். அவ அங்கே வசிக்க வேண்டும். இங்கே டவுணில் இருந்து கொண்டு தனது வட்டார மக்களுக்குச் சேவை செய்ய முடியாது. அவவுக்கு வேண்டிய உபகரணங்களைக் கொடுத்து அனுப்புங்கள்.''

'ஓம் சேர்' என்றாள் ஜோசப் அம்மா. ஐயா அப்போது என்னைப் பார்த்தார். 'சரி' என்றார். நான் என் கை களைக் கூப்பி வணக்கம் தெரிவித்தேன். அவர் புதிய சிகரெட்டைப் பற்ற வைத்தார்.

அவருடைய அறையில் இருந்து வெளியே வந்தபோது எனது இருதயம் இனம் தெரியாத இன்னல் பட்டது. ஜோசப் அம்மாவும் சறீம் ஐயாவும் எனக்கு ஒருமருத்துவப் பையும் உபகரணங்களும் மருத்துவ மாதுக்கள் அணியும் இரு சேலைகளும், ஒரு குடையும் தந்தார்கள். நான் இவற்றைப் பெற்றுக் கொண்டதாகக் கைச்சாத்திட்டேன்.

பெரிய ஐயாவின் அறையிலிருந்து, பெரியவர் கந்தையாவை உரத்த குரலில் கண்டிக்கும் உறுமல் கேட்டது.

நான் அலுவலகத்தை விட்டு வெளியே வந்த போது கந்தையா என் பின்னால் கேற் வரையில் வந்தார். தனக்குள்ளே கோபத்துடன் புறுபுறுத்தார்:

''அந்தக் காலத்திலை எம். ஓ. எச். என்றால் அனுபவமுள்ள வயது போனவர்கள் வருவார்கள். இப்ப எல்லாம் இந்த வேலைக்குப் பொடியன்களைப் போட்டுப் பெரிய கரைச்சல்.''

அவர் தொடர்ந்து எனக்குச் சொன்னார்: ''பாசக்குளத்திலை நீ என்ன செய்யப் போறாய்? டவுண் வட்டாரம், என்றால், என்னுடைய வீட்டிலேயே ஒரு அறை தந்திருப்பேன்.''

நான் தெருவுக்கு வந்ததும், அவர் கேற்றைச் சாத்தினார்.

நான் பஸ் நிலையத்தை நோக்கி நடந்தேன். சூரியன் எல்லாப் பனை உச்சிகளுக்கும் மேலே எவ்வளவோ போய் விட்டான். வெயிலின் வெப்பம் கூடிக்கொண்டு வந்தது.

## 2

அடுத்த நாள் தன்னைச் சுகாதார அலுவலகத்தில் சந்திக்குமாறு, ஜோசப் அம்மா எனக்குக் கூறியிருந்தா.

ஆனால். நான் பஸ் நிலையத்திலேயே அவவிற்காகக் காத்து நின்றேன். அவவின் கார் வரும்போது கைகாட்டி நிறுத்தினேன். 'வணக்கம் அம்மா', என்றுகூறியபடி காரில் ஏறினேன். ''தங்கச்சியம்மா, பாசக்குளம கிராமத்திற்குப் போய், நீ இருப்பதற்கு ஒரு வீடு பார்க்கும் படலத்தைத் தொடங்குவோம்'' என்றா அம்மா. அவ தொடர்ந்து கூறினா: 'பாசக்குள கிராம சேவகர் சண்முகமணியுடன் வீடு விஷயமாக நேற்றுப் பேசினேன். அவர் இப்போது தனது கந்தோரில் காத்துக்கொண்டு நிற்பார். அவருடைய உதவியுடன் தான் உனக்கு ஒரு வீட்டில் தகுந்த அறை எடுக்கலாம். நீ தனி ஆள்; இருக்கும் வீட்டிலேயே சாப்பாட்டையும் வைத்துக் கொள்வது சௌகரியம். உண்மையில், உனக்கு இரண்டு அறைகள் தேவை; ஒன்று வசிப்பதற்கு, மற்றது கந்தோராக உபயோகிப்பதற்கு.''

பெரிய வீதியில் சுமார் ஐந்து மைல்கள் கார் ஓடியதும், ஓர் ஆலமரம் நின்ற சந்திக்கு வந்தோம். ஆலமர நிழலில் ஒரு சிறு சந்தை கூடியது. அம்மா காரில் இருந்தபடியே ஒரு கிழவியை அழைத்து நண்டும் இறாலும் வாங்கினா. காரைச் சுற்றிச் சுற்றி ஐந்து ஆறு காகங்கள் கரைந்தன. மேகத்திலே ஒரு பருந்து வட்டமிட்டுக் கொண்டிருந்தது. 'பாசக்குள கிராமம் இவ்விடத்தில் தான் தொடங்குகிறது' என்றா அம்மா.

மேலும் அரை மைல் சென்று இன்னும் ஒரு சந்திக்கு வந்தோம். சிறிது தூரம் போன பின், ஓர் ஓலை வீட்டின் முன்னால் காரை நிறுத்தியபடி, 'இந்த வீட்டில் ஒரு பெறுமாதக் கர்ப்பிணி இருக்கிறாள்; பார்த்து விட்டுப் போவோம்' என்றா அம்மா. இரு சிறுவர்கள் அந்த வீட்டுப் படலையை நீக்கிப் பார்த்தார்கள். ஒரு குட்டி நாய் படலையின் கீழே தலையை நுழைத்துக் குரைத்தது.

ஜோசப் அம்மா வீட்டின் முற்றத்தில் நின்று கொண்டு 'ரேவதிப்பிள்ளை' என்று உரத்த குரலில் அழைத்தா.

வீட்டின் தாழ்வாரத்தில் ஒரு குழந்தையுடன் இருந்து சுருட்டுப் புகைத்துக் கொண்டிருந்த ஒரு கிழவி, 'எடி பிள்ளோய்' என்று சத்தினா. அடுக்களையில் இருந்து வெளிவந்த ஒரு குமர்ப்பிள்ளை 'அம்மா ஆ...' என்று கூவினாள். 'கூய்' என்ற குரல் அடுத்த வளவில் இருந்து வந்தது.

ஒரு மூன்று வயதுப் பையன் நிர்வாணமாக ஓடி வந்தான். அவனைத் தொடர்ந்து, தென்னம்பாளைக் கட்டைத் தலையில் காவியபடி ஒரு கர்ப்பிணி வந்தா.

'ரேவதிப்பிள்ளை, மாதம் சரிதானே?' ஜோசப் அம்மா கேட்டா.

'மாசம் சரி, மாசம் சரி' என்று கத்தினான் தாய்க்கு முன்னால் ஓடி வந்த பையன்.

கிழவி துப்பினபடி சிரித்தா.

அடுக்களையில் இருந்து வெளிவந்த எட்டு வயது மதிக்கத்தக்க ஒரு பையன் 'மாசம் சரி' என்றவனுக்குக் குட்டினான்.

ரேவதிப்பிள்ளை சொன்னா: "ஓம் அம்மா, இதுதான் மாசம்."

"அம்மா நான் சொன்னா இவள் கேட்க மாட்டாள். பிள்ளை பெற ஆசுப்பத்திரிதான் நல்லது." கிழவி கூறினா.

"இல்லை அம்மா ஆசுப்பத்திரி வசதிப்படாது. கிழவி சொல்லும். நான் அங்கே போனால் பிள்ளைகளைப் பார்க்க ஆள் இல்லை. அந்தப் பெட்டைக்குச் சமைய லோடை இதுகளைப் பார்க்க முடியுமோ?" பதிலுக்குக் கூறினாள் ரேவதி.

"போன முறை ஆர் பார்த்தது?" என்று கேட்டா கிழவி.

"ஏன் இந்தக் கண் கெட்டுப் போற கதை" என்று சீறி விழுந்தா ரேவதி.

கிழவி சைகையால் ஜோசப் அம்மாவுக்கு ஏதோ தெரி விக்க, அம்மா கேட்டா... "ரேவதி, வீரகத்தி தொழி லுக்கே போய்விட்டாரா?"

''ஓம் அம்மா. சீவலாலை வந்து கோப்பரேசன் கடைக்குக் கள்ளுக் குடிக்கப் போய்விட்டார்; அதுக்கு ஆசுப் பத்திரிக்கு அலைய நேரம் இல்லை.'' ரேவதி தொடர்ந்து சொன்னா —,,எனக்குக் குத்துத் துவங்கினதும் பிள்ளை பிறக்கும் அம்மா; கடவுளே என்று இதுவரை எந்தப் பிள்ளைக்கும் வில்லங்கம் இல்லை. இதையும் வீட்டிலை வைக்கலாம்.''

''இல்லை ரேவதி, உன்னுடைய அம்மாவைப் போலவே நானும் நினைக்கிறேன். இந்த முறை ஆசுப்பத் திரிக்குப் போ'' என்று கூறிவிட்டு, ஜோசப் அம்மா என்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினா :

''இவதான் இப்போது உங்கள் கிராமத்து மருத்துவ அம்மா. கிராம சேவகரைக் கேட்டால் இவ இருக்கும் வீட்டைக் காண்பிப்பார்; தேவைக்கு அழையுங்கள.''

நான் கை கூப்பி வணக்கத்தைத் தெரிவித்தேன்.

ரேவதி புன்னகை புரிந்தா. குமர்ப்பிள்ளை எனக்கு அருகில் வந்து நின்றாள். அவளிடம் ''என்ன பெயர், தங்கச்சி?'' என்று கேட்டேன்.

''பவளம்மா'' என்றாள்.

ஆரம்பத்தில், படலையை நீக்கி எங்களை வரவேற்ற பையன்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் மல்லுப்பிடித்து விழுந்து உருண்டனர். குட்டி நாய் இருவரையும் சுற்றிச் சுற்றி நடுவர் வேலை பார்த்தது.

நாங்கள் படலையைத் திறந்து வந்து காரில் ஏறினோம். 'மருத்துவப் பெட்டையாமோ'? என்று ரேவதியின் தாய்க் கிழவி வினாவும் குரல் கேட்டது. 'ஓமாம்' என்று ரேவதி பதிலளித்தா. 'நல்ல வடிவான பொம்பிளை; ஏனம்மா?' என்று பவளம்மா சொன்ன அபிப்பிராயமும் என் காதில் விழுந்தது. நானும் ஜோசப் அம்மாவும் ஒரே நேரத்தில் சிரித்தோம்,

ரேவதியின் குழந்தையைத் தவிர்த்த நான்கு பையன்கள் தெருவுக்கு வந்து. காரைத் தடவிப் பார்த் தனர். காரை ஸ்டார்ட் பண்ணும் போது அம்மா

கூறினா: "பிள்ளை பெறுவதற்கும் ஒரு அளவு உண்டு. பண்டி குட்டி போட்டது போலை..."

கார் ஸ்டார்ட் பண்ணாது தொல்லை பண்ணியது. 'தள்ள வேண்டும்' என்று அங்கலாய்த்தா அம்மா. இதைக் கேட்டதும் நாலு பயல்களும் தள்ள, ஓடிவந்து பவளம் மாவும் சேர்ந்து தள்ள, கார் ஸ்டார்ட் பண்ணிற்று. அவர்களுடைய குட்டி நாயும் காரின் பின்னால் சிறிது தூரம் ஓடி வந்தது.

அம்மா கூறினா: "இந்தக் கிராமத்து மக்கள் மிகவும் நல்லவர்கள். ஆனால், வறுமை, அறியாமை இவற்றினால் அவர்களுக்குப் பல கஷ்டங்கள் வருவது உண்டு. ஒவ்வொரு குடும்பமும் ஒரு தனிப் பிரச்சினை. மருத்துவ வேலையுடன், ஓரளவு சமூக சேவையும் சுகாதார போதனையும் கலந்தால்தான், எங்கள் பணி முழுமை அடையும். டாக்டர் காசிநாதன் இதைத்தான் திரும்பத் திரும்பக் கூறுவார்."

அம்மா காரை நிறுத்தினா.

அந்தச் சிறு வீட்டின் முகப்பில்— கிராம சேவகர் பாசக்குளம்— என்ற பெயர்ப் பலகை தொங்கியது. வாசலுக்கு ஓர் இளைஞர் வந்து 'வாருங்கோ அம்மா' என்று கைகூப்பி வரவேற்றார்.

"நாங்கள் பிந்தி விட்டோம். நீங்கள் எங்கேயாவது போய் விடுவீர்கள் என்று கூட நினைத்தேன்" என்று ஜோசப் அம்மா கூறினா.

"இல்லை அம்மா, நான் அப்படிச் செய்ய மாட்டேன் தானே" என்று கனிவாகப் பதிலளித்தார் அவர். அவருடைய தோற்றத்தைப் போலவே குரலிலும் ஒரு விதமான கவர்ச்சி இருந்தது. 'சண்முகமணி' இவதான் எங்கள் புதிய தோழி' என்று என்னை அறிமுகப்படுத்தினா அம்மா. அவர் இன்னும் ஒரு தரம் கை கூப்பியவாறு கூறினார்: 'நேற்றுப் பின்னேரம் உங்களைப் பற்றி அம்மா கூறினா —என்னாலான உதவிகளைச் செய்வேன் தானே?"

நானும் அவரை தலை குனிந்து வணங்கினேன். எங்கள் இருவரையும் விறாந்தையில் இருந்த ஒரு வாங்கில் உட்காரச் செய்து விட்டு, 'கிளி' என்று கிராம சேவகர் குரல் கொடுத்தார். வீட்டிற்கு உள்ளே இருந்து 'வாறன்' என்று பதில் எதிரொலித்தது.

பழைய காலத்து விதானைமாரைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சிறு கதைகளிலும் படித்திருக்கிறேன். அதிகாரம், ஆணவம், கண்டிப்பு, பாரம்பரிய நாட்டாண்மைத் தனம்; இப்படியான இலட்சணங்களோடு தான் அவர்கள் வாழ்வையும் தொழிலையும், சேர்த்து என்னால் சிந்திக்க முடிந்தது. அதற்கு மாறாக விதானை ஒழிப்பிற்குப் பிறகு வந்த கிராம சேவகர் முறைக்கு ஒரு நல்ல உதாரண சேவகராகச் சண்முகமணி விளங்குகிறார் என்பதை, அந்தச் சில நிமிடங்களில் என்னால் உணர முடிந்தது.

ஒரு குமரிப் பெண், ட்ரேயில் பிஸ்கட்டும் கப்பல் வாழைப்பழமும் ஒரேன்ஸ் பார்லியும் கொண்டு வந்தாள். அவளைக் கண்டதும். 'ம்ம்; செல்வராணி, எப்படி?' என்று ஜோசப் அம்மா விசாரித்தா. 'சுகம்' என்றாள் அந்தப் பெண்.

'அம்மா எங்கே?' என்று கேட்டார் சண்முகமணி. தங்கையிடம், 'வருவா' என்று கூறியவாறு அவள் உள்ளே போய் விட்டாள்.

சிறிய வீடு போல் தோன்றிய அந்த வீட்டில் ஒரு நீண்ட விறாந்தை இருந்தது. விறாந்தையின் ஒரு பாகத்தைப் பலகையால் அடைத்துத்தான், சண்முகமணி தனது அலுவலக அறையை அமைத்திருந்தார். விறாந்தையில் இருந்து உள் வீட்டிற்கு வழிவிட்ட ஒரே வாசலில், ஒரு திரைச் சீலை தொங்கியது.

செல்வராணி மீண்டும் அங்கே வந்து ஜோசப் அம்மாவிடம் "உங்களை ஒருக்கால் அம்மா வரட்டுமாம்" என்றாள். சண்முகமணி என்னிடம் கூறினார்: "உங்கள்

விஷயமாகத்தான், நீங்களும் உள்ளே போய் அம்மாவோடு பேசுங்கள்.''

நாங்கள் உள்ளே சென்றோம். அங்கே சண்முக மணியின் தாயார் விஷயத்திற்கு உடனடியாக வந்தா.

''அம்மா, இந்தப் பிள்ளை இருக்க அறை விஷயமாக தம்பி இரண்டொரு வீடுகளில் விசாரித்தார்; வசதி இல்லை என்கிறார்களாம். உங்களுக்குத் தெரியும் தானே அம்மா, பாசக்குளத்து வீடுகளைப்பற்றி. இராத்திரி, நாங்கள் இதைப் பற்றி யோசித்தோம். இந்தப் பிள்ளைக் குச் சம்மதம் என்றால் எங்களோடேயே தங்கலாம்.'' இப்படிக் கூறியவாறு அந்த அம்மா, அந்த வீட்டில் உள்ள ஒரே ஒரு அறையைக் காண்பித்தா. ''இந்த அறையிலை தானம்மா நானும் கிளியும் படுக்கிறது. எனக்கு அறை வேண்டாம். கிளியோடை இந்தப் பிள்ளையும் இதைப் பாவிக்கலாம். தம்பி சொன்னார், முன் விறாந்தையிலை மற்றப் பகுதிக்கும் அடைப்புப் போட்டு பிள்ளைக்கு கந்தோர் சரிகட்ட முடியுமாம்.''

ஜோசப் அம்மா என்னிடம் ஒன்றுமே கேட்கவில்லை. அவர் சொன்னார்:

''அம்மா, தங்கச்சியம்மா பாக்கியசாலி. அவ இங்கே இருப்பதையே விரும்புவா. உங்களுடைய பிள்ளை போலப் பார்த்துக் கொள்ளுங்கோ.''

செல்வராணி வெளியே நழுவிச் சென்றாள்.

தான் மட்டுமா பாக்கியசாலி? இப்படியான ஒரு கிராம சேவகரையும், அவர் தாயையும் பெற்றிருக்கும் இந்தக் கிராம மக்கள் அத்தனை பேரும் பாக்கியசாலிகள் தானே!

''தங்கச்சியம்மா, என்ன யோசனை?'' என்று கேட்டா ஜோசப் அம்மா.

கலங்கிய கண்களுடன் சிரித்தேன்.

147545

# 3

பெரிய பிள்ளையான ஒரு வருடத்திற்குள்ளேயே தாயையும் தகப்பனையும் இழந்த அபாக்கியசாலி நான். அம்மாவுக்கு அப்போது முப்பத்தெட்டு வயது. அப்பாவுக்கு ஐம்பதுக்கு உள்ளே. இருவரும் எங்களுடன் எத்தனையோ வருடங்கள் வாழ்ந்திருக்க வேண்டியவர்கள்.

நித்திய குடிகாரனான அப்பா, அம்மாவைச் சாகடித்து விட்டார் என்ற வதந்தி தேயிலைத் தோட்டத்தில் பரவியதால், அம்மாவின் உடல் மரண சோதனைக்கு ஆனது. அம்மாவின் வயிற்றில் அப்பெண்டிக்ஸ் நோயுற்று, அது வெடித்து மரணம் சம்பவித்தது என்பது மரண சோதனையின் தீர்ப்பு. உண்மையில், அப்பா அம்மாவை அடிப்பது இல்லை. காசைச் சாராயத் தவறணையில் நாசமாக்கி விட்டு, லயத்திற்கு வந்து ஒரு மூலையில் படுத்துக் கொள்வார்; தானாகச் சாப்பிட மாட்டார். அம்மா சிறு பிள்ளைக்குத் தீற்றுவதுபோல் உணவு ஊட்டி அவர் உடலில் உயிரை ஒட்ட வைத்தாள். அம்மா இறந்து ஐந்து மாதங்களில் அப்பா ஈரல் கரியானதால் இறந்து போனார். அவர் தன்னைத் தானே சாகடித்தாரே தவிர அம்மாவைக் கொல்லவில்லை.

அண்ணா இப்போதும் கூறுவார்: "எங்கள் அம்மாவைக் கொலை செய்தவர் தோட்டத்துடிஸ்பென்சர் ஐயாதான், என்று. அம்மா இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன், நானும் அண்ணாவும் அம்மாவை அழைத்துக் கொண்டு தோட்ட டிஸ்பென்சரிடம் சென்றோம். அம்மாவுக்கு வயிற்றில் தொப்புளைச் சுற்றி வலி இருந்தது; வாந்தி வருவதாகவும் கூறி அவதிப் பட்டா. டிஸ்பென்சர் ஐயா பேதி மருந்து என்று கூறிப் பால் போல் ஒரு மிக்சர் தந்தார். அம்மா லயத்துக்குத்

திரும்பிப் போகமுடியாது வலியால் கஷ்டப்பட்டா. அண்ணா டிஸ்பென்சர் ஐயாவிடம் கேட்டார் 'சேர்! அம்மாவை நாவலப்பிட்டி ஆசுப்பத்திரிக்குக் கூட்டிப் போவது நல்லதா?' அவர் பதில் தரவில்லை. அவருக்கு இப்படியான கேள்விகள் பிடிப்பதில்லை. ஆனால் அண்ணாவோ எதையும் கேட்டு அறிந்து கொள்ளும் சுபாவம் உள்ளவர். அவர் மேலும் கேட்டார் 'சேர்! அம்மாவுக்கு ஆபரேசன் தேவைப்படுமா?' டிஸ்பென்சர் ஐயா, அப்போது அவருடன் இருந்த டீ மேக்கர் ஐயாவைப் பார்த்து கண் சிமிட்டிச் சிரித்தார். டீ மேக்கர் ஐயா சொன்னார் "இந்தா சேவுகப்பெருமாள் பேய்த் தனமாய் பேசாதே.போய், டாக்டர் ஐயா தந்த மருந்தைக் கொடு."

"வாடா பெருமாள்" என்று முனகினா அம்மா' "சச்சரவு செய்யாதேடா."

நாங்கள் டிஸ்பென்சரியை விட்டு வெளியே வந்தோம், அப்போது டிஸ்பென்சர் ஐயா டீ மேக்கர் ஐயாவுக்குக் கூறியது எனக்குத் தெளிவாகக் கேட்டது:"இஞ்சை பாரும் ஐசே, இந்தத் தோட்டக் காட்டுச் சனங்களோடை மாரடிப்பதிலும் பார்க்க, ஊரிலை பொயிலைக் கண்டு நட்டுஒரு வேளையானாலும் சாப்பிடுவது நல்லது" அவர் தொடர்ந்து கூறியதும் கேட்டது. "இவங்களிலை கொஞ்சம் பேரை இந்தியாவுக்குக் கலைச்சு விட்டால் தான் நாடு உருப்படும்."

டிஸ்பென்சர் ஐயா கூறியது, ஆறு மாத காலத்துக்குள் மிக அவசரமாக நடைபெறும் என்று நான் அப்போது எண்ணவில்லை. சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் பேரில், எங்கள் தோட்டத்திலே சரிக்கு அரைவாசிக் குடும்பங்கள் இந்தியா சென்றன. அவர்களுக்குப் பதிலாகத் தோட்ட வேலை செய்யச் சிங்களக் குடும்பங்கள் வந்து குடி புகுந்தன. ஒரு நாள், டிஸ்பென்சரியில் ஏதோ சச்சரவில், பலபேர் மத்தியில் ஒரு சிங்கள வாலிபன் டிஸ்பென்சர்

ஐயாவுக்கு அடித்தானாம். அவருக்குக் காயம் இல்லை; அவருடைய மூக்குக் கண்ணாடியும் பொய்ப் பல் சோடியும் தான் உடைந்தன என்றார்கள். ஆனால், அவர் அடுத்த கிழமையே ஊருக்கு, யாழ்ப்பாணம் போய்விட்டார்.

இதனால் எங்களுக்கு எந்தவிதமான சுகமும் இல்லை. அம்மாபோய்விட்டா; திரும்பி வந்து விடுவாவா?.

* * *

சண்முகமணியின் பெற்றோர் எனக்கு அப்பாவும் அம்மாவும் போல் ஆனார்கள். சண்முகமணி எனக்கு ஒரு கட்டில் வாங்கி வந்து கொடுத்தார். செல்வராணி எங்கள் அறையிலே, தரையில் பாய் விரித்துப் படுப்பாள். அவளின் தாயார் அறைக்கு வெளியே,உள்விறாந்தையில் படுப்பாள்.

சண்முகமணியின் அப்பா ஒரு பாரிசவாத நோயாளி; வலதுகையும் காலும் கடந்த ஐந்து வருடங்களாக அவருக்கு வழங்காது. பேசும் சக்தியையும் அவர் இழந்து விட்டார். ஒரு வயதுப் பிள்ளையைப் போல மூன்று நான்கு வார்த்தைகளை மட்டும் பேசுவார். சண்முகமணி என்னை அவருக்கு அறிமுகப்படுத்திய போது, 'ஆ என்று வாய் திறந்தவாறு கேட்டுவிட்டு 'அது நல்லது' என்றார். ஆனால், சொல்வது விளங்கும் சக்தி இருந்தது; எல்லாவற்றையும் மிகக் கவனமாக அவதானிப்பார். எனக்கு உணவு தருவது சிறிது நேரம் தாமதமானாலும், 'சோறு சோறு' என்று சத்தம் ப்பாடுவார். அது எந்த உணவு வேளையானாலும் 'சோறு' தான்!

உள் விறாந்தையில் ஒரு பக்கத்தில் அப்பாவின் கட்டிலும் சாய்மானக் கதிரையும் இருந்தன. மற்றப் பக்கத்தில் எங்களுடைய சிறிய சாப்பாட்டு மேசை இருந்தது. இரவில் சண்முகமணி தகப்பனுக்கு அருகில் பாய் போட்டுப் படுத்துக் கொள்வார். பகல் முழுவதும் கிராம மக்களின் சேவகராக இருப்பவர், இரவில் தந்தையின் சேவைக்கே தன்னை

அர்ப்பணித்துக் கொள்வார். மூன்று தடவையாவது சலப் போச்சி கொடுப்பது, கால்களுக்குத் தைலம் பூசுவது, தேவை ஏற்பட்டால் நித்திரைக் குளிசைகள், வேறு மருந்து கள் கொடுப்பது. இப்படியாக இரவில் பல வேலைகள் அவருடையவை.

செல்வராணி கிராம மக்களைப் பற்றிப் பல விஷயங் கள் அறிந்திருந்தாள். அவள் தமையனுக்கு எழுத்து வேலை களில் உதவி செய்வதுண்டு. அதனால் அவளுக்கு, சில பேருடைய குடும்பப் பிரச்சினைகளையும் சம்பவங் களையும் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருந்தது. சிலவற்றை இரவில் நாங்கள் படுத்திருக்கும் போது உப கதைகளைப்போல் எனக்குக்கூறுவாள். நான்' உம்' போட் டபடி தூங்கி விடுவேன். பியோன் கந்தையாவைப் பற்றி அவள் தந்த தகவல் ஆச்சரியப்படத்தக்கது அல்ல. அவள் கூறினாள்;

''அக்கா, எம். ஒ. எச். கந்தோர் கந்தையா ஒரு ராஸ் கல்.''

''ஏன் ராணி'' என்று வினாவினேன்.

''ஒரு கதை அவரைப் பற்றிச் சொல்லட்டுமா?'' ''ம்ம்''

''உன்னைப் போலை ஒரு பெட்டை டவுணிலை மருத்துவ மாதாவாக வந்து கந்தையா வீட்டிலை இருந்தாள். அவர் அவளோடை கெட்ட முறையில் நடந்து கொண்டாராம். பெட்டை உடனடியாக மாறுதல் எடுத்து திருகோண மலைப்பக்கம் போய்விட்டாள். அவரைப் பற்றி இப்படி எத்தனையோ கதைகள்.''

''ஏன் இந்தக் கந்தையாவுக்கு எதிராக தகுந்த நடவடிக் கை எடுக்காமல் இருக்கிறார்கள்?'' என்று நான் கேட்டேன்.

''அக்கா, கந்தையா மிகவும் கெட்டிக்காரர். முன்னம் இருந்த டாக்டர் மாருக்கு கார் ரிப்பேர்பார்ப்பது தொடக்

நல்லூர் இ... நூலகம் ... யாழ்ப்பாணம்

கம் வீட்டில் கோழி உரிப்பது வரை, சகல விதமான தொட்டாட்டு வேலைகளையும் செய்வது அவர்தான். அதனால் அவருக்குச் சலுகை காட்டியிருக்கிறார்கள். ஆனால் இப்ப இருக்கிற ஐயாவிடம் கந்தையாவின் பருப்பு வேகாது.''

செல்வராணி மேலும் சொன்னாள்;

''அத்துடன் அக்கா, கந்தையா ஒரு பெரிய கடவுள் பக்தன் என்று அனைவரும் நினைக்கிறார்கள். கோயில் களில் தேவாரம் படிப்பது இவர்தான். தேர்த் திருவிழாக் களிலை இவர்தான் முதல் நம்பராய் நிற்பார். வைத்திய ஊழியர் சைவ சங்கம் என்று ஒன்றை வைச்சிருக்கினம் அதிலை பஜனைகளை ஒழுங்கு செய்வதும் இவர்தான்...''

செல்வராணி சிரிப்பது மெல்லியதாகக் கேட்டது. எனக்குத் தூக்கம் வந்தது.

## 4

எங்கள் அறைக்கதவில் யாரோ மெதுவாகத் தட்டும் சத்தம் கேட்டது. எழுந்து போய்க் கதவைத் திறந்தேன்; என் முன்னால் சண்முகமணி நின்றார்.

''ஏதோ அவசர பிரசவ விஷயமாக வந்திருக்கிறாகள். என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''போகவேண்டும்'' என்றேன்,

வந்தவர்களில் ஒருவர் முன் விறாந்தையில் நின்றபடி கூறினார்:— என்னுடைய மனிசிக்குத்தான் பிள்ளை பிறந்திட்டுது, அவள் பேச்சு மூச்சு இல்லாமல் கிடக்கிறாள். நஞ்சுக் கொடி விழவில்லையாம். எங்கடை பெட்டைதான் அம்மா இங்கே இருப்பதாகச் சொல்லி அனுப்பினாள்.''

இப்படியான நேரங்களில் யாராவது ஒரு பெண்ணும் வந்தால் தான் போக வேண்டும் என்று எங்களுக்கு கூறியிருக்கிறார்கள். நான் கேட்டேன்; ''நான் வருவதற்கு உங்களுடன் ஆராவது பெண்கள் வந்தார்களா?''

வந்தவர்களில் இன்னொருவர் பதிலுக்குக் கேட்டார்: 'வரவேண்டியவள் அறிவில்லாமல் கிடக்கிறாள். ஆர் வாறது?''

அவர் குடித்தவர் போல் காணப்பட்டார்.
மற்றவர் அவரை அமர்த்திவிட்டு ''நீ பேசாமல் இரு. நான் போய்ப் பிள்ளையைக் கூட்டிவாறன்'' என்றார்.

நல்ல வேளையாக அம்மாவின் தாராளமான மனம் சமயோசிதமாக வேலை செய்தது.

''கிளி அக்காவோடை போய் வாவன்'' என்று செல்வராணியை என்னுடன் போக ஒழுங்கு செய்தா அவசரமாக உடுத்துக் கொண்டு, எனது மருத்துவப் பையுடன் புறப்பட்டேன்.

''நானும் வரட்டுமா?'' என்று கேட்டார் சண்முகமணி.

''தேவையில்லை; ராணியும் நானும் இவர்களுடன் போய்விட்டு வருகிறோம்'' என்றேன்.

ஆனால், நான் அப்படிக் கூறியும், எங்களுக்குப் பின்னால் சண்முகமணி ஒரு டோர்ச் லைட்டுடன் வந்து கொண்டிருந்தார். போகும் போதுதான் தெரிய வந்தது ரேவதிப்பிள்ளையின் வீட்டுக்குப் போகிறோம் என்று. அழைத்துப் போக வந்தரே அவளின் கணவன் வீரகத்தி. அவர் மிகவும் அடக்கமாகப் பேசினார். மற்றவர் மீண்டும் எந்தவிதமான பேச்சும் பேசாது தடுத்து விட்டார்.

வீரகத்தியின் வீட்டில் இருந்து கிழவி ஒப்பாரி வைக்கும் ஓசை கேட்டது. நான் உண்மையில் ரேவதி இறந்து போனாளோ என்று எண்ணினேன். 'கிழடி உப்பிடித்தான்' என்றார் வீரகத்தி.

பவளம்மா படலைக்கு ஓர் அரிக்கன் லாந்தரோடு வந்து எங்களை அழைத்துச் சென்றாள். சண்முகமணி அப்போது திரும்பிப் போயிருக்க வேண்டும்.

"ஆசுப்பத்திரிக்கு போ என்று சொன்னேன்... கேட்டியா... ஐயோ!" கிழவியின் ஒப்பாரி தொடர்ந்தது.

திண்ணையில் கிழவி இருந்த இடத்தில் ஐந்து பிள்ளைகளும் படுத்திருந்தார்கள். கொட்டிலுக்குள்ளே ஒரு பித்தளை லாம்பு எரிந்து கொண்டிருந்தது. அதன் பரவலான ஒளியைப் போல், இரத்த நெடியும் அங்கே பரவி இருந்தது. இன்னும் ஒரு கிழவி, புதிய குழந்தையைக் கையில் ஏந்தியவாறு ரேவதிப்பிள்ளையின் தலைமாட்டில் இருந்தா. அந்தக் கிழவி எங்களைக் கண்டதும், "ஆறின கஞ்சிக்கு என்ன பதம் பார்க்கப் போறியள்?" என்று கேட்டா. உண்மையில், அந்தக் கேள்வி எனக்கு விளங்கவில்லை. அவ அந்தக் கிராமத்துப் படிப்பு வாசனை இல்லாத பழைய மருத்துவச்சி என்பதை அறிந்தேன். இப்படியானவர்களால் ஏற்பட்ட அகால பிரசவ மரணங்களைப்பற்றி நான் படித்திருக்கிறேன்.

பவளம்மா லாந்தரை நெஞ்சு மட்டத்தில் உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்தாள். நான் நோயாளியின் அருகிலே குந்தி இருந்து 'ரேவதிப்பிள்ளை' என்று அழைத்தேன். அவவின் முகத்தில் இலேசாகத் தட்டிப் பார்த்தேன். நாடியைப் பரிசோதித்து விட்டு, வயிற்றை மெதுவாக அமுக்கிப் பார்த்தேன். அப்போது பவளம்மா அழுதாள். "ஐயோ அம்மா, எங்கடை அம்மாவைக் காப்பாற்றி விடுங்கள்..." அவளும் லாந்தரைத் தரையில் வைத்து விட்டுக் குந்தினாள்.

அவள் முகத்தைப் பார்த்துக் கூறினேன்: "தங்கச்சி, என்னால் இயன்ற அளவு செய்கிறேன்." அவள் தனது முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

ரேவதிப்பிள்ளை மிகவும் வில்லங்கமான நிலையில் இருந்தாலும், நாடி அடித்துக் கொண்டு இருந்தது; மூச்சும் பரவாயில்லை. கருப்பையில் இருந்து நஞ்சு வெளியாகாதபடியால் இரத்தம் போய்க் கொண்டிருந்தது.

நான் பவளம்மாவுக்குக் கூறினேன்; "தங்கச்சி, உடனடியாக ஆசுப்பத்திரிக்குப் போக வேணும். ஒரு

நல்ல சீலை இருந்தால் எடு.'' இதைக் கேட்டதும் வீரகத்தி கொட்டிலுக்குள் எட்டிப் பார்த்தார்.

''ஐயா ஒரு காரைக் கொண்டு வாருங்கள்'' என்று அவரிடம் கூறினேன்.

''இப்ப ஆர் வரப்போகிறான்கள்'' என்றவாறு அவர் போய விட்டார்.

மூலையில் இருந்த ஒரு சிறிய ட்ரங்க் பெட்டியில் இருந்து ஒரு சேலையை எடுத்தாள் பவளம்மா. அதை அவள் எனக்குத் தரும்போது மருத்துவக் கிழவி கூறினா: ''இதென்ன அநியாயம் செய்யப்போறியள். அவளின்ரை உசிரை நிம்மதியாய்ட போக விடுங்களேன்; சும்மா கூத்து ஆடாதேயுங்கோ.''

''ஐயோ ஆசுபத்திரிக்குக் கொண்டு போய் எண்டாலும் அவளின்ரை உயிரைக் காப்பாற்றுங்கோ; ஐயோ அம்மா'' என்றவாறு ரேவதியின் தாய்க் கிழவி கத்தினா. ''ஆச்சி, ஆசுப்பத்திரிக்குத் தான் போகப் போயினம், கத்தாதே'' என்று செல்வராணி கூறுவது கேட்டது. நாய் ஒன்று முற்றத்தில் நின்று ஊளையிட்டது. மருத்துவச்சிக் கிழவி சொன்னா: ''நாயும் ஊளையிடுது.''

ரேவதிப்பிள்ளையின் வயிறறறையில் நஞ்சு பிரியும் அறிகுறிகள் தோன்றின. நான் மெதுவாக வயிற்றின்மேல் உள்ளங்கையை வைத்து உள்ளே கருப்பை சுருங்குவதை அவதானித்தேன். நஞ்சு வெளியே தள்ளும்போது, மிகக் கவனமாக நஞ்சை முழுமையாக எடுத்தேன். தொடர்ந்து அதிக இரத்தம் வெளியேறாவண்ணம் வயிற்றறையில் கருப்பையை அமுக்கி, வயிற்றைச் சுற்றிச் சேலையால் ஒரு கட்டுப் போட்டேன்.

சுமார் ஒரு மணி நேரத்தில் வீரகத்தி ஒரு வாடகைக் காருடன் வந்தார். அவரின் உதவியுடன், நானும் செல்வராணியும் ரேவதியைக் காரில் ஏற்றினோம். பவளம்மா லாந்தரைப் பிடித்து வழி காட்டினாள். மூன்று பையன்கள் படலை மட்டும் வந்தார்கள். அந்த வீட்டு நாய் குரைத்தது.

ஆரவாரப்பட, எல்லா வீட்டு நாய்களும் குரைத்தன. லாந்தர் பக்பக் என விக்கி அணைந்தது. தாய்க் கிழவி, நாங்கள் காருக்குள் ஏறும்போது கத்தினா: "ஐயோ, குழந்தை எங்கேடி ஆத்தை?" அப்போதுதான் குடிசைக்குள் மருத்துவக் கிழவியின் கையில் கிடக்கும் குழந்தையின் ஞாபகம் வந்தது. பவளம்மா ஓடிப்போய்க் குழந்தையைத் தூக்கி வந்து என்னிடம் தந்தாள். வீரகத்தியும் செல்வராணியும் கார்ச் சாரதியுடன் முன் சீற்றில் இருந்தனர். பின் சீற்றில் ரேவதியைச் சரிய வைத்தோம்; ஒரு சிறு இடத்தில் குழந்தையுடன் நான் இருந்தேன்.

கோப்பாய் ஆசுப்பத்திரிக்கு எங்கள் கார் போனதும், அங்கே வாங்கில் படுத்திருந்த ஓர் அட்டன்டன்ட், எழும்பியபடி கூறுவது கேட்டது: "இருக்குமட்டும் இருந்திட்டு இந்தச் சனங்கள் நடுச்சாமத்திலைதான் வருங்கள்." இதுவரையும் ஒன்றும் பேசாமல் இருந்த கார்ச் சாரதி, அவரிடம் ஒரு கேள்வி கேட்டார்: "இந்தச் சனங்கள் பிள்ளை பெறுவதற்கும் ஒரு நேரகாலம் நியமிச்சிருக்கிறியளோ?"

"ஓ, தெய்வேந்திரராசாவே! நீ கொண்டு வந்நால் வில்லங்கமான கேசாகத்தான் இருக்கும்" என்றார் அட்டன்டன்ட் கார்ச் சாரதியை அறிமுகம் கண்டு கொண்டு, "அந்த உலகமா, இந்த உலகமா என்று தீர்மானிக்கிறது நாங்கள்தான்."

"அந்த உலகம் வேண்டாமப்பா; இந்த உலகத்திலை கனக்க வேலை இருக்கு. வீரகத்தியின் பெண்சாதியைக் கொண்டு வந்திருக்கிறேன். நீ முதலில் சட்சட் என்று வேலையைப் பார்" என்றார் தெய்வேந்திரராசா.

ரேவதிப்பிள்ளையைத் தள்ளுவண்டியில் வாட்டுக்குக் கொண்டு வருவதற்கு முன்பே, பிரசவ வாட்டுக்குப் போய் மருத்துவ மாதை எழுப்பினேன். கைக்குழந்தையை ஒரு தொட்டிலில் வைத்தேன். ரேவதியின் பிரசவ விவரத்தை அவவுக்கு கூறினேன். டாக்டர் ஐயாவை உடனடியாக

வருமாறு அவர் வீட்டுக்கு அட்டன்டன்ட் பெண் ஒருத்தியை அனுப்பினா.

''அக்கா நோயாளிக்கு நாளம் மூலம் சேலைன் குளுக்கோஸ் ஏற்ற வேண்டி வரும்போல் இருக்கிறது. ஒரு செற்றைத் தயார் செய்து வைக்கமுடியுமா?'' என்று கேட்டேன். என்னிலும் இரட்டிப்பு வயதினள் போல் காணப்பட்ட அந்த மருத்துவம்மா, எந்தவிதமான வெறுப்போ மறுப்போ இல்லாமல் ஒரு சேலைன் செற்றை எடுத்து வைத்தார்.

ரேவதிப்பிள்ளையை கட்டிலில் கிடத்தி, அவவை ஒரு கம்பளியால் போர்த்தி, கட்டிலின் கால்மாட்டை உயர்த்தினோம். டாக்டர் வந்ததும், நான் சுருக்கமாக ரேவதியின் பிரசவ விவரத்தைக் கூறினேன்.

அவர் ரேவதியைப் பரிசோதித்துவிட்டு ஏர்கோமோஃபியா ஊசிகள் போட்டார். நாளம் மூலம் சேலைன் ஏற்றினார். அவர் பேசினில் கை கழுவும்போது அவரிடம் கேட்டேன் ''சேர் தாய்க்கு எப்படி?''

''இரத்தம் போறது நின்றுவிட்டது. பயப்படத் தேவை இல்லை'' என்றார்.

''நன்றி சேர்.''

டாக்டர் போய்விட்டார். நான் ரேவதியின் நாடியைப் பார்த்தேன். நன்றாக இருந்தது. அவவின் தாடையைத் தடவி, ''ரேவதி அக்கா'' என்றேன்.

''நித்திரை'' என்றா மருத்துவம்மா.

''அக்கா, இதுகள் பெரிய குடும்பம். கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று வேண்டினேன்.

''சரி பிள்ளை'' என்றா அவ.

நாங்கள் ஆசுபத்திரியை விட்டு வெளியே வந்தபோது விடிந்து கொண்டிருந்தது. கோப்பாய் கிராமச் சங்கத்தின் கழிவு வண்டிகள் தெருவில் போய்க் கொண்டிருந்தன.

# 5

சண்முகமணி என்னுடன் அதிகம் பேசமாட்டார். அத்தியாவசியமான விஷயமென்றால் ஒரு சில வார்த்தைகள் கூறுவார். உண்மையில், அந்த வீட்டில் அவர் அதிகமாகப் பேசிக்கொள்வது, சரியாகப் பேச முடியாத அவருடைய தகப்பனுடன்தான். நேரம் கிடைக்கும் போதெல்லாம் தகப்பனின் சாய்மனைக்கு அருகில் இருந்து, ஊர்ப் புதினங்களைக் கூறிக் கொண்டிருப்பார். தகப்பனை ஒரு சிறு பிள்ளைபோல் பாவித்து, இப்படியான ஊர்க் கதைகளை அவர் கூறும்போது, நான் தூரத்தில் நின்று கேட்பது உண்டு.

சண்முகமணியின் பூர்வ குடும்பம் பாசக்குளத்தைச் சேர்ந்ததுதான். அசுபதி, சண்முகமணியின் தந்தை, சில காலம் சீவல் தொழிலாளியாக இருந்தவர்; பின்பு இலங்கை ரயில்வேயில் ஒரு 'லேபரர்' ஆகத் தொழில் செய்தவர். அந்தக் கிராமத்தில் அரசாங்க உத்தியோகம் பார்த்த முதல் ஆள் அவர்தான். அதன் பின்புவேறு சிலரும் ரயில்வேயில் 'லேபரர்'களாகப் போய்ச் சேர்ந்தனர். இப்போதுகூட அங்கே சண்முகமணியையும் ஆசைப் பிள்ளை மாஸ்டர் என்ற ஓர் ஆசிரியரையும் தவிர, மற்ற அரசாங்க ஊழியர்கள் ரயில்வே லேபரர்கள்தான். மூன்று நான்கு பேர் யாழ்ப்பாணம் நகரசபை வேலைத் தலப் பகுதியில் மேசன் வேலை பார்த்தனர். அவ்வளவுதான் மாதாந்தச் சம்பளக்காரர்; பெரும்பாலானோர் தோட்டக் கூலிகள்; சந்தையில் மரக்கறி விற்போர்; சுமார் இருபது பேர் பரம்பரைச் சீவல்தொழில் செய்தனர். மற்றவர்களுக்குக் குறிப்பிடத்தக்க, தொழில் இல்லை. சில இளைஞர் கிளிநொச்சிக்குச் சென்று வந்து அரிசி விற்பார்கள்; சிலர் வல்வெட்டித் துறைக்குப் போய் வந்து சேலை விற்பார்கள். அவர்கள் தாங்கள் 'பிஸ்னஸ்' செய்வதாகக் கூறுவார்கள்.

அசுபதி அப்பா, ரயில்வேயில் இருந்து ஓய்வு பெற்றதும் இப்போது சண்முகமணியின் கந்தோர் இருக்கும் முன் விறாந்தைப் பகுதியில் ஒரு சில்லறைக் கடை போட்டார். கடை வளர்ந்து நிரந்தரம் அடைவதற்குமுன், அசுபதி அப்பாவுக்கு அதிக இரத்த அழுக்கம் காரணமாக மூளையில் இரத்தம் கட்டிப் பாரிசவாதம் ஏற்பட்டது. சில மாதங்கள் கடை இயங்கியது பொருள்களைச் சண்முகமணி கொண்டு வந்து போட, அவற்றைச் செல்வராணி விற்றாள். கடை மூடப்படுவதற்கு முக்கிய காரணத்தை, ஓர் இரவு, நாங்கள் படுத்திருக்கும்போது செல்வராணி சொன்னாள்:

''அக்கா, கடைக்குச் சேனாதிராசா என்று ஒரு பொடியன் வாறவன்.''

''சொல்லு'' என்றேன் நான்.

''அக்கா, நேற்றைக்கு நாங்கள் கிளினிக்காலை வாற போது, பேச்சி அம்மன் கோயிலடியிலை 'பற்றிக்' சேட் போட்டுக் கொண்டு சைக்கிளிலை ஒரு பொடியன் போனான்.''

''நடிகர் ஒருத்தர் போறார் என்று நீ சொன்னாய்.''

செல்வராணி சிரித்தபடி கூறினாள்? ''அவன்தான் அக்கா.''

அவள் தொடர்ந்து கூறினாள்: ''அக்கா, ஒருநாள் அவனுக்கு நான் சிகரெட் விற்கும்போது, என்ரை கையைப் பிடிச்சு இழுத்துக் கொஞ்சினான்.''

செல்வராணி சிரித்தபடி எழுந்திருந்தாள். ''சத்தியமாக அக்கா, அவன் அப்படிச் செய்வான் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் அவனுடனோ வேறு யாருடனோ வித்தியாசமாகப் பழகவில்லை'' என்றாள் அவள்.

ஆனால், அந்த நிகழ்ச்சி கடை மூடப்படுவதற்குக் காரணமாக இருந்தது. சேனாதிராசா, செல்வராணியின் கையில் முத்தம் வைத்ததைச் சண்முகமணி பார்த்து விட்டார். அவர் எந்தவிதமான விளக்கமோ ஆர்ப்பாட்

டமோ இல்லாது, 'அப்பாவுக்குச் சுகம் இல்லை - கடையைச் சீராக நடத்த ஆள் இல்லை' என்று அதை மூடிவிட்டார்.

இப்படியான பல செய்திகளை செல்வராணி படுக்கையின்போது எனக்குக் குசு குசுப்பதில் இருந்தும், சண்முகமணி தசப்பனாருடன் பேசுவதில் இருந்தும் தெரிந்து கொண்டேன். அதனால், அவர்களின் அன்பு, ஆதரவு இந்தக் குடும்ப சரித்திர அறிமுகங்களால், ஒரு மாதத்திற்குள்ளேயே நானும் அவர்களில் ஒருத்தியாகி விட்டேன்.

* * *

எனக்கு ஓர் அலுவலக அறையை, முன் விறாந்தையில் பலகைகளால் அடைத்துத் தந்தார் சண்முகமணி. எங்கள் இருவரின் அலுவலக அறைகளையும், மிகுதியாக இருந்த முன் விறாந்தைப் பகுதியையும் வெள்ளை அடிப்பித்தார். மருத்துவமாதின் அலுவலக விதிகளின்படி, எனது அறைச் சுவரில், பாசக்குள வட்டாரப் படம், கிராம மக்களின் சனத்தொகை விபரப் பட்டியல், எனது வேலைக் கால அட்டவணை ஆகியவற்றைத் தொங்கவைத்தேன். அறையில் ஒரு மேசையும் கதிரையும் வாங்கிப் போட்டார். மேசைமீது எனது குறிப்பேடுகளை வைத்தேன். தன்னுடைய கதிரையில் இருந்த சீலையை எடுத்து என்னுடைய கதிரைக்குப் போட்டார். 'எதற்கு?' என்று கேட்டேன். பதில் இல்லை.

சுகாதார வைத்திய அதிகாரியின் கந்தோரிலே, எனக்கு ஒரு பெயர்ப் பலகையைத் தந்தார் கறீம் ஐயா. அதை ஜோசப் அம்மாவின் காரில் கொண்டு வந்து சேர்த்தேன்.

'பொதுசன மருத்துவ மாது' என்று எழுதியிருந்த அந்தப் பெயர்ப்பலகையை வீட்டின் முன்னால், 'கிராம

சேவகர், பாசக்குளம்' என்ற பெயர்ப் பலகைக்குக் கீழே தொங்கவைத்தார் சண்முகமணி.

இந்த இரு பெயர்ப்பலகைகளையும் பார்த்துக் கொண்டு நின்றாள் செல்வராணி.

'வடிவாக இருக்கு அண்ணை' என்றாள் அவள்.

## 6

அன்று, ரேவதிப்பிள்ளை தனது கைக்குழந்தையைக் கிளினிக்குக் கொண்டு வந்திருந்தா. தாயுடன் பவளம்மாவும் வந்தாள். ரேவதிப்பிள்ளை கோப்பாய் ஆசுபத்திரியிலிருந்து வந்த பின்னர், நான் தாயையும் சேயையும் அவர்கள் வீட்டில் மூன்றுமுறை போய்ப் பார்த்தேன். 'அக்கா, உங்களால்தான் அம்மா உயிருடன் இருக்கிறா' என்று கூறிப் பவளம்மா என்மேல் ஒருவித மதிப்பும் பாசமும் வைத்திருந்தாள். நான் அவர்கள் வீட்டிற்குப் போகும் போதெல்லாம், ரேவதியின் தாய் தலைக்கு மேலே கைகூப்பி, சாமி கும்பிடுவது போலக் குனிந்து இருப்பா. 'நான் உங்களுக்கு என்ன செய்தேன்? ஒவ்வொரு மருத்துவமாது செய்யவேண்டிய கட்டாயக் கடமையைத்தானே செய்தேன்' என்று நான் அவர்களுக்குக் கூறியும், அவர்கள் அதைப் புரிந்து கொள்வதில்லை நான் அவர்களுக்கு ஏதோ தனிப்பட்ட தொண்டு ஆற்றியதாக அவர்கள் எண்ணம். சிறிது காலம் பாசக்குளத்தில் ஒரு நிரந்தரமான மருத்துவமாது இல்லாததால், எனது அன்றைய செயல், அவர்களுக்குச் சிறப்பாகத் தோன்றியதுபோலும்.

கிளினிக்கில் ஐந்து கர்ப்பிணிகளும், ரேவதியைப் போல் குழந்தைகளை அழைத்துவந்த தாய்மார் ஏழு எட்டுப் பேரும் இருந்தனர் அங்கே, சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் காசிநாதன் வருவதற்கு முன், நான்

செய்யவேண்டிய வேலைகள் சில இருந்தன. கர்ப்பிணி களையும் குழந்தைகளையும் கிளினிக் பதிவேட்டில் பதிவது, அவர்களுக்கு அட்டை எழுதுவது, நிறை எடுப்பது, சலம், இரத்தம் சோதிப்பது இன்னும் எத்தனையோ. கிளினிக்குக்கு என்னுடன் வந்த செல்வ ராணி, நான் வேலைகளைச்செய்யும் போது மிக்கஉற்சாகத் துடன் கவனித்தாள்.

ஒரு முழுமாத முதலாவது பிள்ளைக் கர்ப்பிணி கிளினிக் கட்டிலில் படுத்திருந்தாள். அவளுடைய வயிற்றை டாக்டர் காசிநாதன் பரிசோதித்துக் கொண்டு நின்றார். நான் அவருக்குப் பக்கத்தில் நின்றேன். அவர் அந்தப் பெண்ணின் மார்பைச் சோதிக்கும் போது, என்னுடைய முகத்தைப் பார்த்து, 'இதைப் பாரும்' என்றார். அவளுடைய முலைக் காம்புகள் மார்புக்குள் புதைந்து இருந்தன. அதைப் பற்றி, அவளுக்கு வேண்டிய அறிவுரையைச் சுருக்கமாகக் கூறிவிட்டு, என்னைப் பார்த்து டாக்டர் ஐயா கேட்டார்:

"நீர் இன்று இங்கே வந்த கர்ப்பிணிகளுக்கும் தாய் மாருக்கும் என்ன சுகாதார போதனை செய்தீர்?"

ஒருவித வேதனை என் உடலில் பரவியது. 'பாசக் குளம்' என்று என்னை அவர் அழைத்தார். நான் நிமிர்ந்து பார்த்தேன்.

"நீர் படிக்கும்போது, கிளினிக்கல் சுகாதாரப் பேச்சுகளைப் பற்றி சொல்லித்தரவில்லையா?" என்று கேட்டார் ஐயா.

"சொல்லித் தந்தவர்கள் சேர்."

"அப்போது?"

..................

கர்ப்பிணி கட்டிலில் இருந்து இறங்கி, தனது இரவிக்கையையும் சேலையையும் சரி பார்த்துக் கொண்டாள். ஐயா தனது கதிரையில் போய் உட்கார்ந் தார். மற்றக் கர்ப்பிணி கட்டிலில் ஏறியதும், அவள்

சேலையையும் உட்பாவாடையையும் பாதி அகற்றி. வயிற்றைப் பரிசோதனைக்காகத் திறந்துவைத்தேன் அந்தப் பெண்ணின் சட்டையை நீக்கிக் கொண்டிருக்கும் போது 'பாசக்குளம்' என்று அழைத்தார். நான் அவருடைய மேசைக்கு முன்னால் போய் நின்றேன். அவர் கூறினார் :

''என்னைப் பொறுத்தவரையில் இங்கே வரும் தாய் மாருக்கு நாம் புகட்டக்கூடிய சுகாதார போதனையையே எங்களுடைய மிக முக்கிய தேவையாகக் கருதுகிறேன்.''

ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து உறிஞ்சி இழுத்து, புகையை ஊதி, ஒருதரம் செருமிவிட்டு மீண்டும் சொன்னார் :

''சுகாதாரக் கல்வி கிராம மக்களுக்கு மிகவும் தேவைப்படுகிறது. கிளினிக்குக்கு அவர்கள் வரும்போது, அவர்களுக்கு ஏற்ற ஒரு சிறு அறிவுரை கூறுவது, இந்தக் கல்வி புகட்டுவதில் ஒரு முறை. அது, ஒரு மருத்துவமாதின் வேலை.''

''ஆம் சேர்'' என்றேன் நான்.

சிகரெட்டை மேசை விளிம்பில் வைத்துவிட்டு, பரி சோதனைக் கட்டிலுக்கு வந்து, அதில் படுத்திருந்த பெண்ணைச் சோதனை செய்தார்.

செய்வன திருந்தச் செய்—என்ற வாக்கியத்திற்கு நல்ல உதாரணமாக வேலை செய்வார் டாக்டர் காசிநாதன். அன்றாட அலுவலக நிர்வாகம், மாதாந்த ஊழியர் கூட்டம் நடத்துதல், ஊழியரின் வெளி வேலைக் கண் காணிப்பு, கிளினிக் வேலை, பாடசாலை மாணவர் பரி சோதனை எதுவானாலும் சரி, அவருடைய செயல் முறை யில் கிரமமும் சிரத்தையும் இருக்கும். அத்துடன், குறை களை ஆக்கபூர்வமான முறையில் சுட்டிக்காட்டிக் கண்டிப் பதில் மட்டுமல்ல, எமது வேலையில், தான்கண்ட நிறைவு களையும் பக்குவமாகப் பாராட்டுவதிலும் சமர்த்தர் அவர். ரேவதிப்பிள்ளையின் பிரசவத்தின் போது நான் புரிந்த சிறிய பணிவிடையை, அன்று கிளினிக்கில் அவள்

மூலம் கேட்டுவிட்டு, என்னை அழைத்து, "இதைக் கேட்கச் சந்தோஷமாகவும் பெருமையாகவும் இருக்கிறது" என்றார். ரேவதியோடு நின்ற பவளம்மா என்னைப் பார்த்து அழகு காட்டினாள்.

அன்றைய கிளினிக் வேலை முடிந்ததும், டாக்டர் ஐயா சொன்னார். "நாங்கள் சில வருடங்களாக இங்கே கிளினிக் நடத்தாததால் வரவேண்டிய பலர் வருவதில்லை. நீ கிராமத்தில் வீடுகளுக்கு போய்வரும் போது, கர்ப்பிணிகளும் பிள்ளைகளும் கிளினிக்குக்கு வரவேண்டியதன் அவசியத்தைச் சொல்லிக் கொடுக்கவேண்டும்."

சிகரெட் கடைத்துண்டை ஜன்னல் ஊடாக வெளியே எறிந்தார் அவர். இன்னும் ஒரு சிகரெட்டை மேசை மீது தட்டி விட்டுப் பற்ற வைத்தார். புகை வளையங்கள் கேள்விக் குறிகளாக மாறி மறைந்தன. அவர் கேட்டார்:

"இன்று கிளினிக் வேலைக்கு முடிந்து விட்டது. கிராமத்து வீடுகளில் மூன்று நான்கைப் பார்ப்போமா?"

கிளினிக் பதிவேடுகளையும், அட்டைகளையும் அடுக்கி வைத்துவிட்டு, கிளினிக் அறைக் கதவைப் பூட்டினேன். செல்வராணி எங்களுடன் வந்தாள். ஐயா அவளைப்பற்றி விசாரித்தார்.

அவர் சொன்னார்: "இந்தப் பிள்ளை உம்முடன் இங்கே வந்து போவது மட்டுமல்ல, அவள் கிளினிக்கில் சில வேலைகளையும் செய்து எமக்கு உதவ முடியும். செய்யக் கூடிய எவ்வளவோ வேலை இருக்கு. தாய்மார் குழந்தைகளின் அட்டைகளைத் தெரிந்து எடுப்பது, அவர்களுக்கு வரிசைக் கிரமமாக நம்பர் கொடுப்பது, அவர்களின் நிறை பார்த்துக் குறிப்பது போன்ற வேலைகளை இவள் போன்ற பிள்ளைகள் செய்ய முடியும்."

* * * * * *

தார் போடப்படாது இருந்தாலும் கார், லொறி, போகத்தக்க ஒரு பாதையில் வந்து ஓர் ஒழுங்கையில் திரும்ப இருந்தோம். ஆனால், தூரத்திலே அந்தப் பாதை

யில், எதிர்புறத்திலிருந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இமானுவல் வந்துகொண்டிருந்ததால், அந்தச் சந்தியில் நின்றோம் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துவிட்டு டாக்டர் ஐயா சொன்னார்: தென் இலங்கையிலே. இப்படியான தொண்டு செய்வோர் சர்வசாதாரணம். இப்படியான ஒரு தாய்—சேய் நிலையத்திற்கு மூன்று நான்கு பெண் பிள்ளைகள் வந்து உதவி புரிவர். அவர்களுக்குச் சம்பளம் இல்லை. பஸ் கூலி கூட அவர்களுடைய செலவு தான். அவர்கள் பெறும் நன்மை, இப்படியான ஒரு கிளினிக்கில் பெறும் பயிற்சி. சிலர் வேறு வேலைகளுக்கு மனுப் போடும்போது, சுகாதார வைத்தியர் ஒரு சிபார்சுக் கடிதம் கொடுக்கக் கூடும். ஆனால், பெரும்பாலானோர் இதை ஒரு சமூகசேவை என்று கருதியே வந்து வேலை செய்கிறார்கள். எங்கள் பகுதிகளில் இப்படியான சமூக சிந்தனை குறைவு என்றுதான் கூறவேண்டும்.''

''குறைவு என்ன சேர். துப்புரவாக இல்லை'' இப்படிச் கூறினார் சுகாதாரப் பரிசோதகர் இமானுவல். அவர் டாக்டர் ஐயா கூறியவற்றின் பின்பகுதியைக் கேட்டுக் கொண்டு நின்றவர்.

எல்லோரும் ஒழுங்கை வழியாகப் போய்க்கொண்டிருந்தோம். இமானுவல் சொன்னார் : ''சேர், எங்கள் பகுதிகளில் காசு இல்லாமல் வேலை செய்வது என்றால், ஒரு பிள்ளையும் வராது. சிங்களப் பகுதிகளில் பாருங்கள் சேர், சிரமதானம் மூலம் என்ன எல்லாம் செய்கிறார்கள். பெரிய ரோட்டுப் போடுவது தொடக்கம் கக்கூசு கட்டுவது வரை சிரமதானத்தில் நடக்குது இங்கேயோ...''

டாக்டர் காசிநாதன் உரக்கச் சிரித்தார். எனக்கும் சிரிப்பு வந்தது. சில நாட்களுக்கு முன், இப்படியான ஒரு சம்பாஷணையின் போது டாக்டர் ஐயா, இமானுவலை 'நீர் ஒரு பெசிமிஸ்ற்' என்று கூறினார். உண்மையில் இமானுவல் ஐயா ஒரு பெசிமிஸ்ற்—தோல்வி மனப்பான்மையர் தான் நான் அவருடன் பழகிய சில வாரங்களிலே அவரைப் பற்றிய என்னுடைய அபிப்பிராயமும் அதுதான்.

அவர் பாசக்குளம் கிராமத்தில் நேரம் தவறாது கடமை செய்யும் ஊழியர்; தன் தொழிலை நேசிப்பவர். அப்படி இருந்தும் எந்தப் புதிய முயற்சியைச் செய்யவும் துணிவு அவருக்கில்லை. எதையும் 'முடியாது' என்று தீர்மானித்து விட்டுத்தான், அதைப் பற்றிச் சிந்திப்பார்.

ஒரு வீட்டில், படலையைப் பாதி திறந்தவாறு, ஒரு சிறுமி இடுப்பில் கைக்குழந்தை ஒன்றுடன் நின்றாள். படலைக்கு வெளியே ஒரு சிறு பையன், ஓர் அரைஞாண் கயிறு மட்டும் அணிந்தவாறு நின்றான். டாக்டர் காசிநாதன் சிறுமியிடம், 'இது ஆர் வீடு?' என்று கேட்டார்.

'எங்களுடையது' என்றாள் அந்தப் பெண். இமானுவல் ஐயா படலைக்கு மேல் 'வீட்டுக்காரர்' என்று குரல் கொடுத்தார். முற்றத்தில் படுத்திருந்த நாய் எழுந்து குரைத்தது. அடுக்களையின் பத்தியில் ஒரு நடுத்தர வயதுப் பெண் குந்தி இருந்து, கறிச் சட்டிகளுக்குச் சாம்பல் போட்டுத் தென்னம் பொச்சால் உரைஞ்சிக் கொண்டிருந்தா. ஒரு நீலநிற அழுக்குச் சேலையைக் குறுக்காகக் கட்டியிருந்தா. எங்களைக் கண்டதும் சேலையை இழுத்து முழங்காலை மூடினா. இமானுவல் ஆங்கிலத்தில் சொன்னார்:

''மூன்று மாதங்களுக்கு முன், இவளுடைய புருசன் இறந்து போனான் சேர்.''

அந்த வளவில், ஆனால், வேறு குடிசையில் வசித்த ஒரு கிழவி நாங்கள் நின்ற இடத்திற்கு வந்து சொன்னா: 'கறுமக் கதை ஐயா. மூன்று பிள்ளைகள். தகப்பன் என்ரை தம்பி முறைதான். நாங்கள் என்ன செய்வம்? ஏதாவது உதவி செய்தால் புண்ணியம் கிடைக்கும்.''

இமானுவல் ஐயா அதற்குப் பதிலாக ஒரு கேள்வியை அவளிடம் கேட்டார்:

''எங்களாலை என்ன செய்ய முடியும்?''

வீட்டுக்காரி கைகளைச் சேலையில் துடைத்து விட்டு, குறுக்கை அவிழ்த்து நன்றாக இறுக்கியவாறு வந்தா.

கிழவி கூறினா: ''செவ்வரத்தி, சொல்லடி எல்லாத்தையும், ஒளிககாமல் மறைக்காமல் சொல்லு.''

இதுவரை ஒன்றும் பேசாது நின்ற டாக்டர் ஐயர் அந்தப் பெண்ணிடம் பல விஷயங்களைக் கேட்டு, தன்னுடைய குறிப்புப் புத்தகத்தில் எழுதினார்.

''அம்மா, உங்களுக்கு எங்களால் ஆன உதவிகளைச் செய்வோம்'' என்றார் அவர். ''இன்றே உங்கள் குடும்ப நிலையை விளக்கி யாழ்ப்பாணக் காரியாதிகாரிக்கும் சமூக சேவைப் பகுதிக்கும் எழுதுகிறேன். கிராம சேவகரும் அவர்களுக்கு வவரங்களைத் தெரிவிப்பார். நீங்களும் இந்தப் பிளளைகளை எங்களுடைய பிள்ளைகள் நிலையத்துறகுக் கொண்டுவர வேண்டும்.''

''நல்லாய்க கேள் செவ்வரத்தி'' என்றாள் கிழவி. இமானுவல் ஐயாவும் சொன்னார்: கேட்டுதே? அங்கே கிளினக்கிலை தேவையான மருந்துகளும் பாலமாவும் தருவார்கள்.''

டாக்டர் காசிநாதன் சிரித்தபடி கேட்டார். ''இப்போது தொகிறதா மிஸ்டர் இமானுவல், இந்தக் குடும்பதுக்கு நாங்கள் என்ன செய்யமுடியும் என்று?''

''அங்கே வராதுகள் சேர்'' என்றார் இமானுவல்.

டாக்டர், செவ்வரத்திக்குக் கூறினார்: ''உங்களை இனிப் பரிசோதகரும் மருத்துவ அம்மாவும் ஒழுங்காக வந்து பார்ப்பார்கள். நீங்களும் கிளினிக்குக்கு வர வேண்டும்.''

டாக்டர் ஐயா ஒரு சிகரெட்டை எடுத்து, காலியான சிகரெட் பெட்டியை வீசினார். நிர்வாணமாக நின்ற பையன் அதைக குனிந்து எடுத்து மகிழ்ச்சியுடன் பார்த்தான். அவன் குண்டியல் சிரங்குசரியாகப் போட்டிருந்தது. கைக் குழந்தையும் சொறிந்து கொண்டிருந்தது.

அன்று நாங்கள் வேறு வீடுகளுக்குப் போக நேரம் கிடைக்கவில்லை. இமானுவல், டாக்டர் ஐயாவிடம் பரிதாபத்தொனியில் கேட்டார்; ''இப்படியான நிலைதான் சேர்

இதைக் கேட்டதும் செல்வராணி சிரித்து விட்டாள். அவள் எனக்கு மெதுவாகச் சொன்னாள்: "அவர் சொன்ன விதம்தான் சிரிப்பூட்டியது; சிரித்தது பிழை தான்."

ஒழுங்கை வழியாகத் திரும்பும்போது டாக்டர் ஐயா கூறியதை நாம் அசட்டை செய்ய முடியாது என அறிவேன்.

"கக்கூஸ் கட்டுவிப்பதோடும், பிள்ளை பிறப்பிப்ப தோடும் கிளினிக்கோடும் எங்கள் வேலை முடிவதில்லை."

அவர் குரலில் கணகணப்பு இருந்தது.

"தடுப்பு வைத்தியம் ஒரு சமூக சேவை. ஒரு குடும் பத்தையும் கிராமத்தையும் நோயிலிருந்து காப்பாற்றிச் சுக நிலையில் வைத்திருப்பதற்கு, நாங்கள் பலரின் உதவியை நாடவேண்டி இருக்கும். கிராம சேவகர் முதல் காரியாதிகாரி வரை நாம் போகவேண்டும்."

அவர் தொடர்ந்து விளக்கினார்:

"சமூக சேவைப் பகுதியினர், விவசாயப் பகுதியினர், குடிசைக் கைத்தொழில் பகுதியினர்—இப்படியாக எல்லோ ருடைய ஒத்துழைப்பும் எமக்கு வேண்டும்," இமானுவல் ஐயாவின் முகத்தைப் பார்த்தார் டாக்டர் காசிநாதன். "என்ன மிஸ்டர் இமானுவல், புரியவில்லையா?" என்று கேட்டார்.

"விளங்குகிறது சேர், ஆனால்..."

இமானுவல் ஐயாவை இடைமறித்தார் டாக்டர். ஒரு வித இங்கிதத் தொனியில் கூறினார்:

"இமானுவல், மற்ற அரசாங்கப் பகுதிகளை இப்போ தைக்கு மறந்து விடும். சிறிது காலம் மருத்துவ மாது தங்கச்சியம்மாவும் நீருமாக இந்தக் கிராமத்தின் குடும்பங் களைப் போய்ப் பாருங்கள். இருவருமாக அவர்களுக்கு வேண்டிய சுகாதார அறிவைப் புகட்டுங்கள்."

பின்பு, நான் சிறிதும் எதிர்பாராத விதமாக, என்னைப் பார்த்து ஒரு தரம் கண் சிமிட்டி விட்டுச் சொன்னார்:

''இமானுவல், என்ன பேசாமல் நிற்கிறீர்? தங்கச்சியம்மாவும் நீரும் சோடியாகப் போய் வருவது பார்க்கவும் அழகாக இருக்கும்.''

'இதென்ன சேர்?' என்று கூறியபடி வெட்கப்பட்டார் இமானுவல்.

இமானுவல் ஐயா விவாகம் ஆகாதவராக இருந்தாலும், டாக்டர் கூறியது வெறும் பகிடியாகவே எனக்குத் தொனித்தது. டாக்டர்கள் இப்படித்தான்; எத்தகைய சீரியஸ் பேர்வழிகளானாலும் இந்த விதமான பகிடிகள் அவர்களுக்கு வேண்டிய நேரம் உதவும்.

நானும் சிரித்துக் கொண்டு செல்வராணியைத் திரும்பிப் பார்த்தேன்.

அவள் முகத்தில் மட்டும் சிரிப்பு சிறிதும் இருக்கவில்லை. அவள் அகத்தில் தான் தங்கச்சியம்மாவும் அவளுடைய அண்ணாவும் நடமாடுகிறார்களே!

# 7

நான் குளித்துக் கொண்டிருந்தேன். நீர் ஐஸ் போல் குளிர்ந்தது. அதிகாலையிலேயே சண்முகமணி எழுந்து, தான் குளித்ததும் கிணற்றுத் தொட்டியில் நீரை எனக்காக நிரப்பி வைத்து விடுவார். ''எனக்குக் கிணற்றில் நீர் அள்ளத்தெரியும்'' என்று ஆரம்பத்தில் கூறினேன். ''மலை நாட்டில் இப்படியான கிணறும் துலாவும் இருக்கா?'' என்று கேட்டார் அவர். ''தெல்லிப்பளையில் மருத்துவப் பயிற்சி பெற்றபோது கிணற்றில் நீர் அள்ளப் பழகி விட்டேன்'' என்றேன். ''கிணற்றில் நீர் எடுப்பதற்கு மாதக் கணக்கில் பயிற்சி வேண்டுமா?'' என்றும் கேட்டு விட்டேன். வெறுமனே சிரித்து விட்டுப் போய் விட்டார். ஆனால், தினமும், நான், அம்மா விசேஷமாகத் தயாரிக்கும் உமிக்கரியினால் பல் விளக்கி வரும்போது தொட்டி நிரம்பி இருக்கும்.

கிணறு, வளவின் அடியில் இருந்தது; வெளியே ஒட்டி மாட்டுக் கொட்டில் இருந்தது: அதன் பக்கத்தில் எருப்

போட ஓர் அடைப்பு. ஒரு பலா, ஒரு மா, ஒரு மாதுளை, ஒரு செவ்வாழை, ஐந்து தென்னைகள்...இப்படியாகப் பல மரங்கள் இருந்தன. மாவில் பூவோ பிஞ்சோ இல்லை; மற்ற மரங்களில் காய்கள் என்று இரண்டு இருந்தன. மாதுளையில் ஒரு பெரிய பழம் அணில் கொத்தப்பட்டு, சிரித்துக் கொண்டிருந்தது: கிணற்றைச் சுற்றியிருந்த கமுகுகள் மட்டும் நன்கு வளர்ந்து பாக்குக் குலைகள் நிறைய இருந்தன.

சண்முகமணி குளிப்பதற்கு முன்பே, வளவைத் துப்புரவு செய்து, மாட்டுக் கொட்டில் வேலைகளையும் முடித்து விடுவார். அதன் பின்பு, பின் வளவுக்கு வர மாட்டார். நான் குளிக்கும்போது, சில வேளைகளில், செல்வராணி மட்டும் வருவாள். கிணற்றுக் கட்டில் இருந்து, பல் விளக்கியவாறு இரவு சொல்ல மறந்தவற்றைக் கூறுவாள். கிணற்றடியைப் பாதி மறைந்து ஒரு கிடுகு அடைப்பு இருந்தது. ஒரு வளைந்த தென்னை, காய்க்காமல் முதுகு தேய்க்க மட்டும் உதவியது. நானும் முதுகு ஊத்தையை அதிலே தேய்த்து அகற்றப் பழகி விட்டேன்.

நான் குளித்த நீர் ஒரு நந்தியா வட்டப் பூமரப் பாத்தியை நிரப்பியது. அவ்விடத்தில் இருந்த மண்வெட்டியை எடுத்து வாய்க்காலைச் சரிப்படுத்தி, நீரை மாதுளைக்குத் திருப்ப முயன்றேன். அப்போது செல்வராணி கிணற்றடிக்கு ஓடி வந்தாள். அவள் சொன்னாள்: ''அக்கா, உங்களுடைய அண்ணையும் ஒரு தோட்டக் கூலியும் வந்திருக்கினம்.''

''அண்ணாவா?'' என்று சந்தோஷமாகக் கேட்டேன்.

''ஓம் அக்கா, அவர் தன்னை உங்களுடைய அண்ணை என்று அறிமுகப்படுத்தினார். அம்மாவும் அண்ணையும் அவர்களுடன் கதைத்துக் கொண்டிருக்கினம்.''

நான் அரைவாசிதான் குளித்து இருந்தேன். ஆனால் இரண்டொரு சட்டி நீரை உடலில் வார்த்துவிட்டு ஈரச் சேலையைக் கழற்றி என்னுடைய யூனிஃபோம் சேலையை

PUBLIC JAFFNA.

உடுத்தேன். செல்வராணி கிணற்றுக் கட்டில் உட்கார்ந்து நான் உடுப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ''அக்கா உங்கள் அண்ணையும் உங்களைப் போல மிகவும் வடிவானவர், இல்லையா?''

''தெரியாது'' என்றேன் நான்.

அவள் கூறினாள், ''அக்கா உங்களுடைய அண்ணையோடு வந்திருக்கிற மற்றவர் சரியான தோட்டக் கூலி தான். ஆள் சரியான கறுப்பு. ஒரு கண் வாக்கு, வாய் நிறைய வெற்றிலை...'' நான் அவளைத் தொடர்ந்து வர்ணிக்க விடவில்லை. என் நெஞ்சு களிப்படைந்தது. ''ராணி, அவர் என்னுடைய சொந்த மச்சான்'' என்று கூறினேன். செல்வராணியின் முகம் மாறியது,

ஈரச் சேலையை என்னிடம் இருந்து வாங்கி, முறுக்கிப் பிழிந்து, இரு கமுகுகளில் கட்டிக் காயப் போட்டாள் செல்வராணி. நான் தலைமயிரை அவசரமாக முடிந்தபடி வீட்டுக்குப் போனேன். முன் விறாந்தையில் அண்ணாவும் வேலுசாமி மச்சானும், அம்மாவுடனும் சண்முகமணியுடனும் பேசிக் கொண்டிருந்தனர்.

''எப்போ வந்தனீங்க அண்ணா?'' என்று கேட்டேன்.

'இப்பத்தான்' என்றார் அண்ணா.

''பின்னை என்ன; ஒரு வாரத்துக்கு முன்னாடியே வந்து, உன்னைத் தேடி அலைஞ்சு திரிஞ்சோமா என்ன?'' என்று கேட்டார் மச்சான். மற்றவர்கள் சிரித்தார்கள்.

''உங்கள் நகைச்சுவை பாசக்குளத்தில் செல்லாது. கொத்மலையிலேயே வைச்சிட்டு வந்திருக்கணும்'' என்று கூறினேன்.

வேலுசாமி மச்சானுக்கு அன்று யாழ்ப்பாண டவுணிலே தொழிலாளர் சம்மேளனம் இருக்கிறதாம். அதற்கு நாவலப்பிட்டி தேயிலைத்தோட்டத் தொழிலாளர் தலைவர் மலையப்பன் அவர்களும் காரியதரிசியாக இருக்

கும் மச்சானும் வந்திருக்கிறார்கள். மலையப்ப தலைவர், நல்லூரில், சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் ஒருவரின் வீட்டிற்குப் போய் விட்டார். அண்ணா இவர்களுடன் சேர்ந்துதான் யாழ்ப்பாணம் வந்தார், என்னைப் பார்த்துப் போவதற்காக.

காலைச் சாப்பாட்டிற்கு, அம்மா பிட்டும் பொரித்த முட்டையும் தயாரித்து வைத்தாள். சண்முகமணியும் இவர்களுடன் இருந்து சாப்பிட்டார். அவர் தனது தகப்பனாருக்கு இவர்களை அறிமுகப்படுத்தினார். அண்ணா, அசுபதி அப்பாவுக்கு அருகில் சென்று சொன்னார் :

''ஐயா, தங்கச்சி உங்களைப் பற்றி அடிக்கடி எழுதுவாள். நீங்களும் அம்மாவும் அவளுக்கு அதிகமாக, சாப்பாடு போடுகிறீர்களாம்,'' அசுபதி அப்பாவின் வாயில் ஒரு புன்னகை தோன்றியது. அம்மா அடுக்களையில் இருந்து உரக்கச் சொன்னார் :

''தம்பி, உன் தங்கச்சி சாப்பாட்டிலை பெரிய அருக்காணி. அவவைப்பார்தது எங்கடை கிளியும் சாப்பாட்டை நல்லாய்க் குறைத்துக் கொண்டா.''

''இரண்டு பேரையும் பார்த்தா அப்படித் தோன்றவில்லையே அம்மா'' என்றுகூறினார் வேலுசாமி மச்சான்,

''போதும்'' என்றேன் நான்.

அடி வளவில் கமுக மரங்களைப் பார்த்துக்கொண்டு நின்றார் மச்சான். அம்மா ஊற்றித் தந்த பால் கோப்பியை அவரிடம் கொடுத்தேன்.

''மச்சான், சுகமாக இருக்கிறீங்களா?'' என்று கேட்டேன்.

''பார்த்தா தெரியலை!''

''எதற்கும் பகிடிதானா?''

அவர் என்னைப் பார்த்தார். அவர் கண்களில் ஒரு செல்ல வாக்கு உண்டு. கோப்பியைக் குடிக்கும்போது மச்சான் கேட்டார் ! ''ஏன் அந்த மாதுளம்பழம் இப்படி?''

''அணிலைப் போய் கேளுங்கோ.'' இது அவருக்கு ஏற்ற பகிடிப் பேச்சு என்று நினைத்தேன்.

அவர் கேட்டார் : ''பழுத்த உடனடியாகப் பறிச்சுத் திண்டா, அணில் ஏன் கடிக்குது?''

காலைச் சாப்பாட்டின் பின் அண்ணாவும் மச்சானும் யாழ்ப்பாணம் போனார்கள். அங்கிருந்து அன்று இரவே அவர்கள் ஊருக்குப் போக ஏற்பாடு. மச்சானின் பேச்சுக்கள் செல்வராணிக்கு மிகவும் பிடித்துவிட்டன. சில மணி நேரத்திலேயே அவள் அவருடைய சிநேகிதி ஆகி விட்டாள். அவர் போகும்போது அவள் இரு வேண்டு கோள்கள் விடுத்தாள் ;

''சேர், நீங்கள் அடுத்த முறை வரும்போது எங்கள் வீட்டில் தங்கவேண்டும்.''

இரண்டாவது வேண்டுகோளாக, ''நீங்கல் சில கோப்பி மரங்களைக் கொண்டுவர வேண்டும், எங்கள் வளவில் நடுவதற்கு'' என்று செல்லமாகக் கேட்டாள்,

''ஆகட்டும்'' என்று கூறுவது போல் மச்சான், அவளைப் பார்த்துத் தலை அசைத்து, பின்பு எங்கள் எல்லோரையும் பார்த்துப் புன்னகை செய்தார்.

ஒரு நாள் லீவு போட்டுவிட்டு, எனக்கும் அவர் களுடன் யாழ்ப்பாண டவுணுக்குப் போய்வர ஆசையாக இருந்தது. ஆனால், அன்று எனது அலுவலக வேலையை வந்து பார்வையிட ஜோசப் அம்மா முன்னேற்பாடு செய் திருந்தார். ஆகையால் அவர்களுடன் போகமுடிய வில்லை.

எதிர்பார்த்தது போல் ஜோசப் அம்மா, பத்து மணி அளவில் வந்து சேர்ந்தா நான் அலுவலகச் சுவரில் மாட்டி வைத்திருந்த கிராமப் படம், அட்டவணைகள் முதலியவற்றைப் பார்த்த பின்பு, எனது பதிவேடுகளைச் சோதனை செய்தா. அவவிற்கு எனது வேலை திருப்தி அளித்தது. இதுவரை நின்றபடியே பதிவேடுகளை எடுத்துக் கொடுத்து விவரங்களைக் கூறிய என்னை உட் காரும்படி பணித்தா. அவ கூறினா :

''தங்கச்சியம்மா, உம்முடன் ஒரு தனிப்பட்ட விஷயம் பேச இருக்கு.''

நான் அவளைப் பார்த்துக்கொண்டு இருந்தேன்; எழுந்து எனது அறையின் கதவைச் சாத்திவிட்டு மீண்டும் உட்கார்ந்தபடி கூறினா :

''உம்மைப் பற்றி பியோன் கந்தையா சில வதந்திகளைக் கூறிவருகிறான்.''

நான் அவளைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். அவ மேலும் சொன்னா:

''வதந்திகள் வதந்திகள் தான். ஆனால், அவற்றை நாங்கள் அறிந்து கவனமாக இருப்பது நல்லது.''

''என்னம்மா விஷயம்?' : என்று கேட்டேன்.

''நேற்று கொக்குவில் மருத்துவம்மா மனோன்மணியின் அலுவலகத்தைப் பார்வையிடச் சென்றேன். அவள்தான் இதை எனக்குக் கூறினாள்.''

''என்னம்மா?''

''உமக்கும் கிராமசேவகர் சண்முகமணிக்கும் தொடர்பு உண்டா?''

''அவர்கள் வீடுதானே அம்மா இது; அவர்களுடன் தானே இருக்கிறேன்.''

''தெரியும் பிள்ளை, ஆனால், கந்தையன், நெருப்பும் பஞ்சும் ஒன்றாக இருந்தால் என்ன நடக்கும் என்ற தோறணையில் என்ன எல்லாமோ பேசினானாம்...''

நான் குறுக்கிட்டுக் கூறினேன் :

'அம்மா, நெருப்பையும் பஞ்சையும் வைத்து யாரோ பழமொழி இயற்றியிருந்தால், அதற்கு நானும் இந்த நல்ல மனிதனும்தானா உதாரணங்கள். உண்மையில் அம்மா, கந்தையா போன்றவர்கள் தான் சமூகத்தில் நெருப்புப் போன்றவர்கள். அவர்களுக்கு மத்தியிலே உண்மை, ஒழுக்கம், அன்பு, அடக்கம் எல்லாம் வெறும் பஞ்சுகள் தான். ''தங்கச்சியம்மா, ஏன் உணர்ச்சிவசப்படுகிறாய்?'' உன்னை நான் புரிந்துகொண்டேன். அதற்கு மேலாகச் சண்முகமணியை நான் பல தடவைகளில் கணித்து விட்டேன். ஆசையால் தான் இந்த வீட்டில் நீ தங்கு

வதற்கு, உன்னை ஒரு வார்த்தை கேட்காமலே ஒப்புக் கொண்டேன். ஆனாலும், மனோன்மணி எனக்குக் கூறியதை உனக்குத் தெரிவிப்பது என் கடமை அல்லவா?''

''நான் உணர்ச்சிவசப்படவில்லை அம்மா. கந்தையா போன்றவர்களைப் பற்றி நினைக்கும்போது கோபம் வருகிறது. நீங்கள் என்னையும் கிராமசேவகரையும் புரிந்து, கணித்த ஒருவர். அப்படி இருந்தும், கந்தையாவின் கழிசடைக் கற்பனையின் காரணமாக எங்கள் இருவருக்கும் இடையே என்ன தொடர்பு என்றுதானே கேட்டீர்கள்?''

''அப்படிக் கேட்பது பிழை. என்னை மன்னித்துவிடு தங்கச்சியம்மா.''

மேலும் தொடர்ந்து சொன்னா :

''தங்கச்சியம்மா, என்னுடைய இந்தச் சிறு சம்பாஷணை உன்னுடையசிந்தனையையும் சீவியத்தையும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாது. கந்தையாவின் கழிசடைக் கற்பனை என்று கூறினாய். மிகவும் பொருத்தமான வார்த்தைகள் நான் இப்படியானவர்களின் கதைகளுக்குச் செவி கொடுப்பவள் அல்ல. நீ எங்கள் சுகாதார சேவையில் ஓர் இளம் சேவகி. நானோ பலவருட அனுபவம் உள்ளவள். இப்படியான அறிவுரைகளை —எந்தவிதமான வதந்திகள். பேச்சுக்கள் வரமுன்னமே—உங்களுக்குக் கூற வேண்டியவள். ஆனபடியால் கூறினேன்.''

எனக்கு ஜோசப் அம்மா இப்போது கூறியவை சரியாகத் தோன்றின. நான் கூறினேன் :

''அம்மா, நான் கஷ்டமான நிலையில் வளர்ந்தவள். வாழ்க்கையில் போராட்டம் எனக்குப் புதிசு அல்ல. எனக்கு மிகவும் நிதானமான நெஞ்சு உண்டு. அத்துடன், இந்தத் தொழிலை ஒரு சமூக சேவை என்றே கருதுகிறேன். வதந்திகள், எனக்கு அப்பாற்பட்ட காரணங்களால் என்னுடைய சொந்த வாழ்வைப் பாதித்தாலும், என்னுடைய சேவை உணர்வைப் பாதிக்காது. நீங்கள் என்னை நம்பலாம்.''

"தங்கச்சி, உன் சொந்த வாழ்வுகூட ஏன் பாதிக்கப்பட வேண்டும்?" என்று கேட்டா ஜோசப் அம்மா.

எனது அலுவலகக் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டது. செல்வராணி ஒரு கோப்பை தேநீரை ஒரு ட்ரேயில் கொண்டுவந்து ஜோசப் அம்மா முன்னால் வைத்தாள். அதை ருசி பார்த்த உடனேயே அம்மா சொன்னா:

"செல்வராணி, தேநீர் அருமையாக இருக்கிறது"

"இதை அக்காவின் அண்ணை கொண்டுவந்து தந்த தேயிலையில் தயாரித்தோம்" என்றாள் செல்வராணி.

## 8

ஜோசப் அம்மாவுக்கு நான் எவ்வளவோ தைரியமாகப் பதில் தந்தும் அன்று இரவு எனக்கு ஒரு கண் தூக்கம் வராதபடி மனம் புண்பட்டிருந்தது. கட்டிலில் புரண்டு கொண்டிருந்தேன். செல்வராணியும் பாயில் புரண்டு கொண்டிருப்பது தெரிந்தது. அவள் அன்று ஒன்றும் பேசவுமில்லை.

"ராணி, உனக்குத் தூக்கம் வரவில்லையா?" என்று கேட்டேன்.

"இல்லை அக்கா" என்றாள் அவள். "அக்கா உங்களிடம் நான் மன்னிப்புக் கேட்க வேண்டும்."

"எதற்கு ராணி?"

"உங்கள் மச்சான் விஷயம் அக்கா."

நான் அவள் கூறப்போவதை ஆவலுடன் எதிர்பார்த்தேன். அவள் கெஞ்சும் குரலில் கூறினாள்:

"அக்கா, காலையிலே உங்கள் மச்சானைத் தோட்டக் கூலி என்று கூறினேன். அது எவ்வளவு தவறு. உங்களுக்கு

என் மேலே கொஞ்சமாவது கோபம் வரவில்லையா? என்னைப் போன்ற வயதிலும் அறிவிலும் குறைந்தவர் களை உடனேயே மன்னிததுவிடும் நலல மனம அக்கா உங்களுக்கு.''

சிறிது நேரம் நிலவிய மௌனத்தின் போது செல்வ ராணி சிணுங்கும் ஓசை கேட்டது. நான் எழுந்துகட்டிலில் உட்கார்ந்தபடி,எட்டி ராணியின் தோளைக்குலுக்கினேன்.

''அழாதே பிள்ளை. நான் அதைப் பற்றி யோசிக்கவே இல்லை. மச்சான் ஒரு தோட்டத் தொழிலாளிதானே.அது எனக்குப் பெருமையே தவிர, நான் வெட்கப்படும் விஷயம் அல்ல தொழிலாளி என்பதைத் தான் நீ தவறாகக் கூலி என்றாய். பாாக்குப் போனால் ராணி, தன்னுடைய உழைப்புக்கு வேறு ஒருவரிடம் கை நீட்டிக் கூலி வாங்கு பவர் எல்லாரும் கூலிகள் தானே.''

''அக்கா, நீங்க சரியான கெட்டிக்காரி'' என்று கூறிய வாறு நிமிர்ந்து படுத்தாள் அவள்.

''அக்கா எனக்கு இப்பதான் மனசு நிம்மதியாக இருக்கு. இப்படி ஒரு மச்சான் உங்களுக்கு இருப்பதாக நீங்கள் இவ்வளவு நாளும் சொல்லவில்லையே.''

அவள் எனது குடும்பத்தைப் பற்றி அறிய ஆவல் கொண்டாள். நான் அவளுக்குச் சில விஷயங்களைத் தெரிவித்தேன்.

வேலுசாமி மச்சான் இல்லாவிடில், நானும் அண்ணா வும் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது. மச்சான், அண்ணாவிலும் பார்க்க ஏழு வருடங்களுக்கு மூத்தவர். இப்போது அவருக்கு முப்பத்தைந்து வயது.அவர் மூன்றாம் வகுப்புடனே, எஸ்டேட் பள்ளியில் படிப்பை முடித்து விட்டு, தோட்டத்தில் வேலைக்குப் போய்விட்டார்: ஆனால், எப்போதும் நிறையப் படிப்பார். பொழுது போக்குக் கதை நூல்களிலும் பார்க்க, அரசியல் பத்திரிகை களில்தான் அவருக்கு நாட்டம் அதிகம். தோட்டத்துச்

சங்கக் கூட்டங்களிலே பிரச்சினைகளைத் தத்துவ ரீதியாக வாதிப்பார். மலையப்ப தலைவர் நடத்தும் 'மலை ஓசை' என்ற பத்திரிகைச்கு அவ்வப்போது அரசியல், சீர் திருத்தக் கட்டுரைகளை எழுதி வந்தார். எங்கள் பெற்றோர் இறந்தபோது, நானும் அண்ணாவும் படித்துக் கொண்டிருந்தோம். படிப்பை நிறுத்த இருந்த எங்களைத் தடுத்து, தொடர்ந்து படிப்பதற்குப் பண உதவியும் ஆத்ம பலமும் தந்து, எதிர்காலத் திட்டங்களுக்கு வழி வகுத்தவர் அவர் தான் அதனால், இப்போது அண்ணா அரசாங்கத்தில் கிளார்க் வேலை செய்கிறார்; நான் மருத்துவம்மா.

நான் செல்வராணிக்குக் கூறினேன்: ''நான் மருத்துவ மாதாவாகப் பயிற்சி பெற்று,எங்கள் தோட்டத்திலேமருத் துவமாதாவாக வந்து தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் சேவை செய்யவேண்டும் என்பது மச்சானின் ஆசை. ஆனால், நான் எஸ்டேட் வேலையில் சேராது அரசாங்க சேவையில் சேர்ந்ததால், இங்கே பாசக்குள மக்களுக்குச் சேவை செய்கிறேன். உங்கள் குடும்பத்துடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது.''

செல்வராணி சொன்னாள். ''அக்கா உங்கள் மச்சானுக்கு வயது ஐம்பதுக்கு மேல் என்று நான் கணக்குப் போட்டேன்.''

''இப்படித்தான் ராணி, எங்கள் தோட்டத்து மக்களின் வயதும் வாழ்வும் தோன்றும். அம்மா சாகும்போது அவவுக்கு வயது நாற்பதுகூட ஆகவில்லை. ஆனால், பார்த்தால் அறுபது வயதுக் கிழவி போல் இருந்தா. ஓயாத வேலை; அதற்கேற்ற உணவோ ஓய்வோ இல்லை. மன நிம்மதியில்லை. வருத்தம் வந்தால் சரியான மருத்துவ உதவியோ ஆலோசனையோ கிடைப்பதில்லை''

அம்மாவின் யோசனை என் நெஞ்சை வாட்டி மிகவும் பலவீனமாக்கியது. அவ இருந்திருந்தால பாசக்குளத்தில்

என்னுடன் இருப்பா; நான் ஒரு சிறு வீடு வாடகைக்கு எடுத்திருப்பேன்; பியோன் கந்தையா கிராம சேவகரை நெருப்பாகவும் என்னைப் பஞ்சு மூட்டையாகவும் பழ மொழி வைத்து வசவு பேசச் சந்தர்ப்பம் இருந்திருக்காது.

''படுங்கோ அக்கா'' என்றாள் செல்வராணி. பழைய படி கட்டிலில் சாய்ந்து, என்னை நன்றாக போர்வையால் போர்த்துக்கொண்டேன். என் சிந்தனையை மட்டும் போர்த்துக்கொள்ள முடியவில்லை. பெண்களை வெறும் பஞ்சுத் துகள்களாகவும் ஆறு யார் சேலைகளாகவும் நோக்குபவர்களுக்கு ஆண்களும் நெருப்பாகவும் மூட்களா. கவும்தான் தோன்றுவார்கள் ஆகையால், என்னுடன் தொழில் முறையில் ஒன்றாக நெருங்கிப் பழகும் டாக்டர் காசிநாதன், பரிசோதகர் இமானுவல்கூடக் கந்தையாவின் விகற்பமான கற்பனைக்கு ஏற்ற இளைஞர்தானே!

இன்னும் எத்தனையோ ஆண்களை நான் தினமும் சந்திக்கப் போகிறேன். வதந்திகளுக்கும் வம்புகளுக்கும் வசைகளுக்கும் மனம் மண்டியிட்டால் வாழ முடியுமா?

என் நெஞ்சில் தன்னம்பிக்கை என்ற சூடு ஏறியது நான் பஞ்சாகவோ, பூவாகவோ, பாவையாகவோ மாறப் போவதில்லை. நான் அஃறிணைப் பொருளல்ல, அலங்கார வஸ்துவும் அல்ல. நான் ஒரு வாழ்வின் — ஒரு சேவையின் ஆரம்ப நிலையில் நிற்பவள். அறிவின் அனுச ரணையோடு, எனது படிப்பின் அடிப்படையில், மனக் கட்டுப்பாட்டுடன் எனதுகடமையை பாசக்குள மக்களுக்கு ஆற்றத்தான் போகிறேன். கடமை மட்டுமா? வைத்திய வட்டாரத்தில் மிகவும் சிறிய தொழிலாகக் கணிக்கப்படும் எனது மருத்துவ மாது சேவையை, ஒரு சமூகத் தொண்டா கவும் சிரமதானமாகவும் கருதப் போகிறேன். அதற்கு எத்தனையோ பேரின் உதவி எனக்குத் தேவைப்படும். ஆண்கள், பெண்கள், இளைஞர், வயோதிகர், படித்தவர்; படியாதவர்...

''பார்ப்போமே!''

'எனக்கா ஏதோ சொன்னீர்கள்?' என்று கேட்டாள் செல்வராணி; 'கனாக் கண்டியளா அக்கா?'

நான் சிரித்தேன்; வெறும் கனவா இது?

* * *

பின் விறாந்தையில் அசுபதி அப்பா முனகிக் கொஞ்சம் அதிகமாக அவதிப்படும் ஓசையும், சண்முக மணி அவரோடு சிரமப்படும் அரவமும்கேட்டன. "ராணி அப்பாவைப் பார்த்து வா" என்று கூறினேன். அவளும் அதையே யோசித்துக் கொண்டிருந்தவள் போல், உடனேயே அவசரமாக எழுந்து வெளியே போனாள். சிறிது நேரத்தில் திரும்பி வந்து கூறினாள் :

"அக்கா, அப்பா சரியாக் கஷ்டப்படுகிறார்: பயமாக இருக்கு. வயிறு ஊதிவிட்டுது. நேற்றும் இன்றும் கக்கூசுக்குப் போகவில்லையாம்."

நான் இரவில் அணியும் கவுனுடன் படுத்திருந்தேன். இரவில் பிரசியர் கட்டிக்கொள்ளாததால் நெஞ்சு அலங் கோலமாக இருந்தது. போர்வையைச் சால்வையாகப் போட்டுக்கொண்டு பின் விறாந்தைக்குப் போனேன். அங்கே அப்பா பாதி எழுந்தவாறு, லுங்கி விலகின நிலையில் இருந்தார். சண்முகமணி அவரைப் பிடித்துக் கொண்டு நின்றார். கட்டிலில் அப்பாவின் காலடியில் மலப்போச்சி சலத்தோடு இருந்தது. சண்முகமணி கோபத்துடன் காணப்பட்டார்.

"சுகமில்லாதவருக்கு ஒடியல்பிட்டு ஆர் குடுக்கச் சொன்னது?" என்று தாயை கேட்டார் அவர். அம்மா ஒன்றுமே பேசவில்லை. மலப் போச்சியை எடுத்துச் சென்று சலத்தைக் கொட்டிவிட்டு வந்தா. அவ எனக்குச் சொன்னா :

"உனக்குத் தெரியும்தானே பிள்ளை, அவற்றை சாப் பாட்டிலை நாங்கள் எவ்வளவு கவனம். அவருக்குமாப்பிட் டுக் கூடக் குடுக்கிறது இல்லை. இது நெத்தலி மீன்போட்ட

கொஞ்சப் பிட்டு; ஆசைப்பட்டுக் கேட்டார் என்று அவள் தான் குடுத்தாள்.''

அப்பாவைப் படுக்கையில் கிடத்தித் தலையணைகளை அக்கம் பக்கம் அணையாக வைத்தார் சண்முகமணி. ''இப்ப எப்படி அப்பா,'' என்று கேட்டார்.

'ஐயோ' என்ற அனுங்கல் மட்டும் திரும்பத் திரும்ப அப்பாவின் வாயிலிருந்து வந்தது. அவர் இப்போது ஒரு குழந்தையைப் போலத்தான்.

''அம்மா, அவருக்கு ஒரு எனிமா வைத்தால்: சுகமாக இருக்கும்'' என்று அம்மாவுக்குக் கூறிப் பார்த்தேன். நான் கூறியது அவர்களுக்கு சம்மதமாக இருந்தது. கர்ப்பிணிகளுக்கு உபயோகிக்கும் எனிமா குழல் எனது மருத்துவப் பையில் இருந்தது. அதை எடுத்து, சவர்க்கார நீர் தயார் செய்து அம்மாவும் ராணியும் உதவி செய்ய, அப்பாவுக்கு எனிமா வைத்தேன். சிறிது நேரத்தில் நான் எதிர்பார்த்த நன்மை கிடைத்தது. தாராளமாக மலம் கழிந்ததும் அப்பாவின் உப்பிய வயிறு வற்றி அவர் அமைதியாகக் காணப்பட்டார். நித்திரையாகி விட்டார்.

அதன் பின்பு ஒரு சந்தோஷமான மனச் சூழலிலே, ராணி என்னிடம், எங்கள் அறையில் படுத்தபடியே, பல விதமான மருத்துவம் சம்பந்தமான கதைகளை—கருத்தடை கருவிகள் முதல் குழந்தை பிறக்கும் வழி முறை வரை கேட்டுக்கொண்டிருந்தாள். நான் கூறியவற்றை மிக்க உற்சாகத்துடன் கேட்டாள். அவள் கூறினாள் : ''அக்கா, நீங்கள் சரியான கெட்டிக்காரி.''

''எனக்குத் தூக்கம் வருகிறது'' என்றேன்.

''அக்கா, உங்களுக்கு கல்யாணம் ஆகி, பிறக்கும், பிள்ளை டாக்டருக்குப் படிக்க வேண்டும்.''

அவள் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தாள்.''அக்கா பாசக்குளத்திலே ஒரு டாக்டரும் இல்லை. நான் நினைக்கி

றேன். உங்களுடைய பிள்ளைதான் எங்களுடைய கிராமத்திலை முதலாவது டாக்டராக வருவான்.''

கற்பனைக்கு எல்லை இல்லை; கடிவாளம் இல்லை, வெட்கம் இல்லை; ஒன்றுமே இல்லைப் போலும்.

அவள் கேட்டாள் : ''அக்கா, உங்களுடைய மகன் பெரிய டாக்டரானால் எங்களுடைய அப்பாவின்ரை வருத்தத்தை மாற்றிவிடுவான் அல்லவா?''

## 9

அடுக்களையில் இருந்து தோசையின் வாசம் கமகம எனப் பரவியது. காலைச் சாப்பாட்டிற்கு அம்மா தோசை சுட்டுக்கொண்டிருந்தா. அவவின் பக்கத்தில் ஒரு திருவலைப் பிடியில் இருந்து, சண்முகமணி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். பின் விறாந்தையில் இருந்த சாப்பாட்டு மேசையில் செல்வராணி எனக்குத் தோசை கொண்டு வந்து வைத்தாள்.

''ராணி, அண்ணா சாப்பிட்ட பின்பு நானும் அடுக்களையிலேயே சாப்பிட்டிருக்கலாம் தானே'' என்று அவளிடம் கூறினேன்.

''இல்லை அக்கா, அடுக்களையில் ஒரே புகையும் கரியும். உங்களுடைய வெள்ளை யூனிஃபோம் ஊத்தை ஆகிவிடும்: சாப்பிடுங்கோ'' என்றாள் ராணி.

''சாப்பிடு சாப்பிடு'' என்று கத்தினார் அசுபதி அப்பா. அவர் இப்போது வழமை போல் காணப்பட்டார் வயிறு நன்கு வற்றி இருந்தது. சாய்மனையில் இருந்து விறாந்தையில் ஏறிய கோழிகளை, சத்தம் போட்டுக் கலைத்துக் கொண்டிருந்தார்.

பச்சடியோடு தோசை மிகவும் உருசியாக இருந்தது. அடுக்களையிலை இருந்து அம்மா கேட்டார். "பிள்ளை, தோசை அனுப்பட்டே?" என்று. "வேண்டாம் அம்மா. இங்கே உள்ளதையே தின்ன முடியவில்லை" என்றேன். ராணி ஒரு இதரை வாழைப்பழத்தை கொண்டு வந்து என் முன் வைத்தாள். அவள் எனக்கு எதிரே இருந்த கதிரையில் உட்கார்ந்தாள். "ஐயோ. இதைத் தின்ன ஏலாதடி" என்றேன். "இது ஒன்றே போதுமே காலை உணவுக்கு." ராணி ஏதோ என்னிடம் கேட்க அபிநயம் செய்யும்போது, அங்கே வந்த சண்முகமணி அவளை எழுப்பி விட்டு, அந்தக் கதிரையில் உட்கார்ந்தார். நான் வாய் திறவாமலே, வாய் நிரம்ப இருந்த தோசையை அவசரமாக விழுங்கினேன். வாயைப் புறங்கையால் துடைத்தபடி அவரைப் பார்த்தேன்.

கழுத்துவரை பொத்தான் பூட்டப்பட்ட கொலர் உள்ள ஒரு தூய வெள்ளை நேஷனல் சேட். வெள்ளை வேட்டி, இப்படியாகக் காணப்பட்டார் அவர். ஒரு பறங்கியர் போன்ற நிறமுடைய அவர் முகத்தில், பக்குவமாகச் சரி பார்க்கப்பட்ட கீற்று மீசை, அழகான தெற்றுப் பற்கள், நாடியில் ஒரு குழி...... நான் இதற்குமுன், அவர் முகத்தை இவ்வளவு அண்மையில் அவதானிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அவர் கூறினார்: "நான் யாழ்ப்பாணம் போகிறேன். உங்களுக்கு ஏதாவது கடைகளில் வாங்கி வரவேண்டுமானால் கூறுங்கள்."

செல்வராணி அவரோடு நின்று என்னைப் பார்த்தாள் உண்மையில், பெண்கள் அணியும் சிறு துணிப்பெட்டிகளில் ஒன்று, எனக்கு இரண்டொரு நாளில் தேவைப்பட்டது. அத்துடன் 36 நம்பரில் ஒரு புதிய பிரசியரும் வாங்க இருந்தேன். ஆனால், 'இப்போது ஒன்றும் தேவை இல்லை' என்று அவருக்குக் கூறினேன்.

"பணத்தைப் பற்றி யோசிக்காதேயுங்கள். பின்பு தரலாம் தானே."

"இல்லை. உண்மையில் ஒன்றும் வேண்டாம்."

செல்வராணி தமையனின் தோளில் காரியத்தோடு இடித்தாள். அவர் கூறினார்: "நான் பெரிய கடைக்குப் போகிறேன். இரவு நீங்கள் அப்பாவுக்குச் செய்த பெரிய உதவிக்கு, உங்களுக்கு ஒரு சின்ன பரிசு தரவேண்டும் என்று கிளி சொல்லுகிறாள். உங்களுக்கு சென்ற் போத்தல் பிடிக்குமா?" நான் எழுந்து மேசையில் இருந்த செம்பை எடுத்து கையையும் வாயையும் கழுவினேன். சண்முகமணி தனது சைக்கடிகாரத்தில் பணி பார்த்துக் கொண்டிருந்தார்.

"அக்கா, ஓம் என்று சொல்லுங்கோ" என்றாள் ராணி. செம்பை மேசையில் வைக்கும் போது, "ராணி, நான் அத்தர், சென்ற் பூசுவதில்லை என்று உனக்குத் தெரியும் தானே" அவளிடம் கேட்டேன். "எனக்கு எதற்காக நீங்கள் பரிசு தரப்போகிறீர்கள்?"

அப்பாவைச் சுட்டிக் காட்டிய படியே மேலும் கேட்டேன்: "அவர் இப்போது எனக்கும் அப்பா இல்லையா? பேச முடியாத அவர் தனது இதயத்தில் என் மேல் வைத்திருக்கும் அன்பு, எனக்கல்லவா தெரியும்? அவருக்குச் செய்த தொண்டுக்கு கூலியா?"

நான் சுவர் மேல் சாய்ந்து கொண்டேன். "ராணி, இந்த வீட்டில் என்னை ஒரு பிறத்திப்பெண் போலவா பார்க்கிறீர்கள். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நானும் ஒரு மகள் போலல்லவா இங்கே வாழ்கிறேன்?"

என் கண்கள் கலங்கியதைச் சண்முகமணி பார்த்து விட்டார் போலும். அவருக்கு அது ஓர் எக்கச்சக்கமான நிலையாகத் தோன்றி இருக்கலாம். ஒரு சிரிப்பை வரவழைத்தபடி 'சரி' என்று கூறியவாறு எழுந்து போய் விட்டார். ராணியின் முகம் மட்டும் ஒரு மாதிரி—ஏமாற்றம் அடைந்ததுபோலக் காணப்பட்டது. அவள் அடுக்களைக்குப் போய் விட்டாள். நான் வெளியே போகும் வரை எங்கள் அறைக்கு அவள் வரவில்லை.

அன்று நான் கிராமத்திலே சில வீடுகளுக்குப் போகத் திட்டம் போட்டிருந்தேன். என்னுடைய தொழிலில் மிகவும் முக்கியமானதும், நான் விரும்புவதும் இது தான். அதாவது எனது வட்டாரத்தில் கர்ப்பிணிகள், பிள்ளைகள் இருக்கும் வீடுகளுக்குச் சென்று, அவர்களுக்கு வேண்டிய அறிவுரைகள் கூறுவது, அவர்களைக் கிளினிக்குக்கு வரச் செய்வது முதலியன.

போனகிழமை, சுகாதார வைத்திய அதிகாரியின் கந்தோரிலே, மருத்துவ மாதர்களின் மாதாந்தக் கூட்டத்தின்போது, டாக்டர் காசிநாதன் கூறியது, எனக்கு மேலும் உற்சாகத்தைத் தருவதாக இருந்தது. அவர் கூறினார் :

"தனது வட்டார மக்களின் குடும்பங்களைப் பார்வையிடுவதுதான் ஒரு மருத்துவ மாதின் தலையாய கடமை. கிளினிக் வேலை பிரயோசனம் அற்றது என்று நான் கூறவில்லை. ஆனால். கிளினிக்கில் ஒரு குடும்பத்தின் முழுமையான சுயசரிதத்தை நாம் தெரிந்து கொள்வது கஷ்டம். அவர்களின் வீடுகளுக்கு நாம் போகும் போது அந்த குடும்பத்தின் சுகம், துக்கம் பொருளாதார சமூகப் பிரச்னைகள், வீட்டு வசதி இப்படியாக எத்தனையோ அம்சங்களை நாம் அவதானிக்க முடிகிறது ஒவ்வொரு குடும்பமும் ஒரு தனிப்பட்ட சரித்திரத்தை உடையது. அதை அறிந்து கொண்டால் தான் அவர்களுக்கு வேண்டிய சுகாதார அறிவுரையை நாம் கொடுக்க முடியும். அவர்களும் பயன் அடைவார்கள்."

சுகாதார வைத்தியதிகாரி இப்படி கூறியது, எனக்கு எனது தொழிலின் அடிப்படை அம்சமாக இருக்கும் சமூக சேவை அம்சத்தைத் தெளிவாக்கியது. ஆனால், அவர் இப்படி எங்கள் கூட்டங்களில் பேசும் போது, எனது சக மருத்துவ மாதர்களில் பலர், நேரத்தைப் போக்குவதற்காக தங்கள் நோட்டுப் புத்தகங்களைப் பார்த்தபடி இருப்பார்கள். ஒரு சில நையாண்டிப் பேர் வழிப்பெண்கள், எங்கள் மத்தியில் கேட்கும்படியாக 'ம் போதகர் போதிக்கத் தொடங்கிவிட்டார்' என்றும் கூறுவார்கள்.

டாக்டர் காசிநாதன் கூறுவார்: ''டாக்டர் என்றால் ஆசிரியர் என்று அர்த்தம். என்னைப் பொறுத்தவரையில் நான் நோயாளியைப் பரிசோதிக்க உபயோகிக்கும் ஸ்டெத்தஸ்கோப் முக்கியமானது அல்ல; நாங்கள் கொடுத்து அனுப்பும் மருந்துப் போத்தலும் குளிசைகளும் கூட நோயாளிகளுக்கு முக்கியம் அல்ல. அவர்களுக்கு நாம் கூறும் சுகாதார அறிவுரைதான் மக்களின் எதிர்கால சுக வாழ்வை நிர்ணயிக்கப் போகிறது.''

எங்கள் எல்லோரையும் சுட்டிக் காட்டினார் டாக்டர் காசிநாதன். ''அதிலும், ஏழைக் குடும்பங்களுக்குச் சுகாதார வாழ்க்கை முறைகளை எடுத்துக்கூற மிகவும் தகுதியானவர்கள் நீங்கள்— மருத்துவ மாதர்கள். நானோ ஜோசப் அம்மாவோ அல்ல. நாங்கள் மாட்டியிருக்கும் இந்த மேல் நாட்டு உடைகளிலே, காரில் போய் இறங்கி வீட்டு முற்றத்தில் நின்று கொண்டு, எம்மை அறியாமலே உத்தியோக அதிகாரம் எம்மை ஆட்கொள்ள நாங்கள் கூறும் உபதேசம்— அவர்கள் காதுகளில் ஏறினாலும்— அது கட்டளைகளாகவே தொனிக்கும்......''

எவ்வளவு உண்மை! ஏழை மக்களுடன் ஒருவராகத் தோன்றும் நாங்கள், அவர்களைப் போல் உடுப்பவர்கள், அவர்கள் தமது திண்ணையில் போட்ட தடுக்கில், அல்லது முற்றத்தில் கிடக்கும் வாங்கிலோ, கயிற்றுக் கட்டிலிலோ இருந்து கொண்டு கூறக்கூடிய சில வார்த்தைகள், அவர்களுக்கு எவ்வளவு அனுகூலமாக அமையக்கூடியன. இதில் என்ன சந்தேகம்?''

பாசக்குளத்திலே, எனது சிறிய அனுபவத்திலே, இந்த உண்மையை நான் நிதர்சனமாகப் பல தடவைகளில் உணர்ந்திருக்கிறேன். அவர்கள் நம்பிக்கையை நான் பெற்று வருவதைக் கண்டிருக்கிறேன். நான் சொல்லுவதை அவர்கள் கேட்பது மட்டுமல்ல; நான் ஏதாவது

சொல்லுவேன் என்பதைக் குடும்பத்தில் எல்லோருமே எதிர்பார்ப்பதை அவதானித்திருக்கிறேன். வீடுகளில் பெரியவர்கள் என்னைத் 'தங்கச்சி' என்று அன்பாக அழைப்பதையும், அதற்கு மேலாக என்னுடைய வயதை ஒத்த பெண்கள் மிகவும் மதிப்பாக 'அக்கா' என்று அழைப் பதையும் கேட்டுக்கேட்டு என்னை மறந்திருக்கிறேன். ஒரு நாள் ஒரு துடுக்கான பெண், அவள் வீட்டுப் படலையை நான் திறக்கும்போது நாடக பாணியில் கூறினார்: ''எங்கள் ஊர்க் கதா நாயகி இதோ வருகிறா. எல்லோரும் உசார்''

அன்றையக் கூட்டம் முடிவதற்கு முன், எனது பொல்லாத காலம், அந்த மருத்துவ மாதர்கள் மத்தியிலே என்னை ஒரு நல்ல மருத்துவ மாதாவாக டாக்டர் ஐயா உதாரணம் காட்டினார். என்னுடைய கிராம சேவை களை எடுத்துரைத்து கிராமத்தில் சில முக்கிய பேர்வழி கள் எனக்கு ஒத்துழைப்பு தருவதாகவும் கூறினார். நான் குனிந்து எனது நோட்டுப் புத்தகத்தைப் பார்த்தபடி இருந்தேன். எனது உயர் அதிகாரியின் இந்த மதிப்பீடு எனக்கு அளவிலா மகிழ்ச்சி அளித்தது. ஆனால் அதே வேளையில், இந்தப் பகிரங்கப் பாராட்டு எனது தோழிகள் சிலரிடையே பொறாமை உணர்ச்சியை விதைக்கக்கூடும் என்ற அச்சமும் என்மனதில் இருந்தது.

உண்மையில், அப்போதே எனக்குப் பக்கத்தில் இருந்த மனோன்மணி, கொங்குவில் மருத்துவ மாது, மற்றப் பக்கத்தில் இருந்த புத்தூர் நாகம்மாவுக்குக் குசுகுசுப்பது கேட்டது. ' கிராம சேவகர் தன் ஆள் என்றால், கிராமச் சனங்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்தானே!''

நான் அன்று சந்திக்க வேண்டிய குடும்பங்களின் விபரங்களை எனது பதிவுப் புத்தகங்களிலே பார்க்கும் போது, இப்படியான பழைய நினைவுகள், சிந்தனைகள் என் மனதில் மோதின. போக வேண்டிய நேரமும் அரை மணி நேரம் பிந்திவிட்டது.

காலை வெயில் முகத்தில் அடித்தது. பள்ளிக்குப் போக வேண்டிய பிள்ளைகள் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தனர் பறை மேளம் சாவுச் செய்தி ஒலித்தது. விசாரித்ததில், வீரபத்திரர் கோவிலுக்கு முன்னால், ஒரு துண்டை விரித்து, அதன்மேல் நான்கு ஐந்து கத்தரிக்காய்கள், ஐந்து ஆறு காய்ந்த எலுமிச்சம் பழங்கள், ஏழு எட்டுக் கூறுகள் பச்சை மிளகாய், சில கட்டிகள் கற்பூரம், ஒரு பழைய ஹோர்லிக்ஸ் போத்தலில் சிவப்பு நிற சூப்புத்தடி இனிப்புகள், இப்படியாகச் சில பொருட்களை வைத்துக் கடை போட்டுக் கொண்டிருக்கும் கிழவன், நேற்று இருபாலைச் சந்தியில்பஸ் ஒன்று அடித்து இறந்துபோனதாக அறிந்தேன். அந்த வழியாக வந்து கொண்டிருந்த ஒரு கிழவன். எனக்கு விவரம் தெரிவித்த வருக்குக் கூறினார்:

"நன்னிக் கிழவனும் போட்டுது." கிழவனுடன் வந்த அவர் கிழத்தி ஒத்துக் கூறினா:

"புண்ணியம் செய்த ஆத்துமாக்கள் போகுதுகள் நாங்கள் ஏன் போறம்?"

# 10

பராசக்தி சனசமூக நிலையம் முன்னே ஏழு எட்டு இளைஞர் சைக்கிளில் இருந்தபடி கால் ஊன்றியபடியும் சைக்கிளைப் பிடித்தபடியும் நின்றனர். என்னைத் தூரத் தில் கண்டதும், சைக்கிளில் இருந்தவர்களும் இறங்கி நின்றனர். நான் அவர்களை ஒரு தரம் நிமிர்ந்து பார்த்தேன். பழக்கமான, ஆனால், பெயர் தெரியாத அந்த முகங்களில் அறிமுகப் புன்னகைகள் தோன்றின. ஒருவன் மட்டும் என்னுடைய குடையை, ஒருநாள் கட்டித் தந்தவன். 'அக்கா' என்று குரல் கொடுத்தான்.

"ஆம்."

"கொஞ்சம் நில்லுங்கோ அக்கா. உங்களை பால சிங்கம் ஒரு தரம் காணவேண்டும் என்று சொன்னவர்." இப்படிக் கூறியவாறு அந்தப் பையன் சைக்கிளை ஒரு குச்சு ஒழுங்கைக்குள் செலுத்தினான். நான் சனசமூக நிலைய ஓரமாக நின்றேன். அவ்விடத்தில் சைக்கிள் சமேதம் நின்றவர்கள் ஒவ்வொருவராகக் கழன்றனர். விளையாடிக்கொண்டு நின்ற சிறு பையன்கள் சைக்கிள் களில் தொத்திச் சிறிது தூரம் சவாரி செய்தபின் குதித்து இறங்கினர்.

இப்படியான காட்சிகள் எனக்குப் புதியனவல்ல. நான் அங்கு வந்த இந்த மூன்று மாதங்களில் இப்படியான காலை நிகழ்ச்சிகளை எத்தனையோ தடவைகளில் பார்த் திருக்கிறேன். பள்ளிக்குப் போகாத இந்தச் சிறுவர் களையும், வேலை இல்லாது திரியும் இளைஞர்களையும் கண்டு மனம் வருந்தியிருக்கிறேன். பள்ளிக்குப் போகாத பிள்ளைகள் மலைநாட்டில் ஏராளம். ஆனால், யாழ்ப் பாணத்தில் எங்கேயாவது இப்படி பள்ளி காணாத பிள்ளைகள் அல்லது கண்டும் ஒழுங்காகப் போகாதவர் கள் இவ்வளவு பேர் இருப்பார்கள் என்று நான் எதிர் பார்க்கவில்லை. சமூக சமசீரைப் பொறுத்தவரையில் மலைநாட்டு எஸ்டேட் பகுதிக்கும் பாசக்குளம் போன்ற கிராமங்களுக்கும் ஒற்றுமை அதிகம் உண்டு. இரண்டும் பலரால் பல விதங்களில் தாழ்த்தப்பட்ட சமூகங்கள் தாம்.

குச்சு ஒழுங்கையில் சைக்கிளில் போன பையனுடன் ஒரு வாலிபர் காக்கி நிற காற்சட்டையும் ஒரு பற்றிக் சேட்டும் அணிந்தவாறு வந்தார். அவர் பாலசிங்கம் என்றும், ரெய்ல்வேயில் அவர் லேபராக வேலை செய்யக் கூடும் என்றும் ஊகித்துக் கொண்டேன். அவர் சொன்னார்:

"அம்மா இரண்டொரு தடவை உங்களைத் தேடி உங்கள் அலுவலகத்துக்கு வந்தேன். சந்திக்க முடிய

வில்லை. என்னுடைய சொந்தக்காரப் பிள்ளை ஒன்று உங்களுடன் பேச ஆசைப்படுகிறாள், அவள் வீடு கிட்டத் தான் இருக்கு.''

அப்போது குச்சு ஒழுங்கையின் முகப்பிலே, பாவாடை சட்டை அணிந்து ஒரு குமர்ப்பெண் வந்து நின்றாள். பால சிங்கம் அவளைக் கண்டதும் 'அவதான் ஆள்' என்றார். நான் அவர்களுடன் அவள் வீட்டிற்குச் சென்றேன்.

போகும்போது பாலசிங்கம் தன்னைப் பராசக்தி சன சமூக நிலையத்தின் காரியதரிசி என்று அறிமுகம் செய்தார். நான் நினைத்தது போல் அவர் ரெயில்வே ஸ்டேசன் லேபரராக சுன்னாகத்தில் வேலை செய்கிறார். ஆசைப் பிள்ளை மாஸ்டர்தான் சனசமூக நிலையத்தின் தலைவர். அவர் இப்போது குருநாகல் பகுதியில் படிப்பிக்கிறார். வார விடுமுறையில் வருவார்.

சூர்யகலா, அதுதான் அந்தப் பெண்ணின் பெயர். பாசக்குளத்தில் உள்ளே ஒரே பள்ளியில் கடைசி வகுப்பு வரை படித்தவள். அதாவது ஐந்தாம் வகுப்பு படிக்கும் போது வகுப்பில் முதலாம்பிள்ளையாக இருந்திருக்கிறாள். இது அவள் கூறாமலே, அவளுடன் சில நிமிடங்கள் பேசு கிறவர்களுக்கு விளங்கும். அதன் பின்பு புத்தூரில் ஒரு கல்லூரியில சாதியின் பெயரால் அவளுக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் ஒரு மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றாள். ஆனால், மூன்றே மூன்று மாதங்களில் படிப்பை நிறுத்திவிட்டாள்.

காரணம்—வாடகைக் காரிலும் சரி, வித்தியாலய வகுப்பறையிலும் சரி, விளையாட்டு மைதானத்திலும் சரி, சாதி அவள் தன்மானத்தைத் தாக்கியது. சில நிமிடங்களில் அவள் கூறியவற்றிலிருந்து அந்த மூன்றுமாத கால வித்தி யாலய வாழ்க்கை, அவள் மனதில் மிகவும் ஆழமான துன்ப அனுபவத்தைப் பதித்துவிட்டதை அறிந்தேன். ஒரு கிழமையில் நாள்தோறும் சாதியின் அடிப்படையில் ஒரு குட்டி நாடகம் நடந்திருக்கிறது.

ஒரு நாள் வித்தியாலயக் கிணற்றில் நீர் அள்ளிக் கால் கழுவும்போது ஒரு பெட்டை கூறினாளாம், "எங்கடை வீட்டிலை என்றால், உன்னைக் கிணற்றிலை அள்ளவிட மாட்டோம்." என்று. சூர்யகலா ஒன்றுமே பேசவில்லையாம். கிணற்று வாளியை வைத்துவிட்டு, நிமிர்ந்தவாறே பேசியவள் கன்னத்தில் ஓர் அறை கொடுத்தாள்.

சூர்யகலா அவளது வயதிற்கு அதிகமான வளர்ச்சி உள்ளவள். அவள் கூறினாள்: "அக்கா அந்தப் பிள்ளை தலை குனிந்துவிட்டாள். அவள் திருப்பி அடிச்சிருந்தால் எனக்குத்தான் கஷ்டம் வந்திருக்கும். நான் கொடுக்கும் அடுத்த அடியில், ஏற்கனவே மிதந்திருக்கும் அவள் முன் பல் விழுந்திருக்கும். நானும் அப்பாவும் கோட்டுக்கு அலைய வேண்டி நேர்ந்திருக்கும்." அவள் கூறுவதை ஒரு கட்டிலில் இருந்து கேட்டுக்கொண்டிருந்த அவள் தகப்பன், தனது வீங்கிய வலது காலுக்கு ஏதோ எண்ணெய் தடவிக் கொண்டிருந்தவர் நிமிர்ந்து கூறினார்:

"அம்மா, எனக்கு பொடியன்களாலை கஷ்டமில்லை, இவளாலை தான் தொல்லை."

சூர்யகலா தொடர்ந்து சொன்னாள்: "அக்கா அந்தப் பிள்ளை நான் அடிச்சதைப்பற்றி யாருக்காவது முறையிட்டு ஆசிரியர் சரி, அவள் தகப்பன் சரி என்னைக் கண்டிக்கும் போது சாதிக்கதை இழுக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கும் குடுத்திருப்பேன்."

"பொத்தடி வாய்" என்றார் தகப்பன். சூர்யகலாவின் கண்கள் கலங்குவதைக் கண்டேன். என் கண்களும் கலங்கின.

அடுக்களைக்குப் பக்கத்திலே ஒடியல் இடித்துக் கொண்டு நின்ற அவள் அம்மா, உலக்கையை உரலோடு தட்டித்தாழ் வாரத்தில் வைத்து விட்டு, நாங்கள் இருந்த இடத்துக்கு வந்தா.

"கலா, அம்மாவை ஏதோ உதவி கேட்கக் கூப்பிட்டிட்டு ஏன் தேவை இல்லாமல் கதைக்கிறாய். அது

களுக்கு இதை எல்லாம் கேட்க நேரம் இருக்கே?'' என்று தாய் கேட்டா. அவ கறுப்புப் புள்ளிகள் போடப்பட்ட ஓர் அழுக்கான வெள்ளைச் சட்டை அணிந்து, மார்புக்கு மேலே ஒரு நீலச் சேலையை குறுக்காகக் கட்டியிருந்தா. சேலையிலே படிந்து இருந்த ஒடியல் மாவைத் தட்டியபடி எனக்குக் கூறினா:

''அம்மா, இவளுக்கு வயதுக்கு மூத்ததுகள் என்ற மதிப்பு இல்லை.''

சூர்யகலா தாயின் பேச்சை மறித்தாள்:

''அக்கா இவர்கள் ஆசிரியர்களா? படிப்புக்கு ஏற்ற அறிவு அவர்களுக்கு இருந்தால், நான்ஏனக்கா இன்றைக்கு அவர்கள் மாணவியாக இல்லை? ஏன் இங்கே அடுப்பு ஊதுறன்?''

தாய் ஏசினாள்: ''நீ மட்டும் தான் அடுப்போடு கிடக்கிறாய் ஆக்கும்; உன்னோடை படிச்ச மற்றப்பிள்ளைகள் உத்தியோகம் பார்க்குதோ? போடி!''

''அக்கா, நான் எனக்கு மட்டும் பேசவில்லை'' என்றாள் சூர்யகலா. என்னுடன் படிச்சுக் கெட்டித்தனமாகப் பாஸ் பண்ணின பிள்ளைகளுக்காகவும் தான் பேசுகிறேன். ஆசிரியர் ஆகவேண்டியவர்கள், நல்ல உத்தியோகம் பார்க்க வேண்டியவர்கள், வசதி இல்லாமலும், வசதி இருந்தும் சாதி என்ற கொடுமையால் ஒதுக்கப்பட்டும், அடுப்போடும் உரல், உலக்கையோடும் கிடக்கிறார்கள்.''

சூர்யகலாவின் அப்பா சிரித்தபடி எனக்குக் கூறினார்:

''அம்மா, இந்த முறை இவள் தான் கிராமச் சங்க இலக்சனுக்கு நிற்கப் போறாள்.''

இந்த இடைமறிப்புச் சிரிப்மையும் பேச்சையும் சூர்யகலா பொருட்படுத்தினதாகத் தெரியவில்லை.

''அக்கா, அம்மா, ஆசிரியர், வாத்திமார் என்று சொல்லுறா. இந்த நாட்டில் படித்த ஆசிரியர்கள் எங்களுக்காகப் பேசியிருந்தால், எங்கள் பிரச்சினைகள் எப்பவோ ஒழிந்திருக்கும. ஒன்றை மட்டும் சொல்லுறன் கேளுங்கோ.''

உணர்ச்சி வசப்பட்டதால் அவள் மார்புகள் விம்மித் தாழ்ந்தன.

''அக்கா, தேவாரம் படிப்பதில் பாசக்குளப் பள்ளியிலும் சரி, புத்தூரிலும் சரி, எனக்கு நல்ல பெயர் உண்டு. பள்ளியில் தேவாரம் பாடுவதில் நான் தான் முதல் நம்பர். ஆனால், ஒருநாள் அச்சுவேலிப் பிள்ளையார் கோவிலுக்கு புத்தூர் பள்ளியில் இருந்து வாய் திறவாத பிள்ளைகளைக் கூடத் தேவாரம் பாடக் கொண்டு போனார் எங்கள் ஆசிரியர். என்னைக் கொண்டு போகவில்லை. காரணம் அம்மாவுக்குத் தெரியும்...படு பிற்போக்கான சமயவாதிகளுக்கு அரகர மகாதேவா பாடுபவர்கள் தானக்கா, இந்த ஆசிரியர்கள்.''

கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் சொன்னாள்: ''கோவில் ஒரு பக்கம் இருக்கட்டும். ஒரு நாள் இன்னும் ஒரு ஆசிரியர், பாடசாலைக்கு, டேப் ரெக்கோடர் கொண்டு வந்து சாயிபாபா பாட்டுக்களை நான் பாடும்போது பதிவு செய்தார். ஒரு வியாழக்கிழமை பாடசாலைக்கு அண்மையில் இருந்த ஒரு புறொக்டர் வீட்டில் சாய்பாபா பஜனை நடந்தது. என்னுடன் படிக்கும் சில பிள்ளைகள் அங்கே போனார்கள். என்னை அழைக்கவில்லை. என்னுடைய குரல் மட்டும் அங்கே கேட்டது.''

சூர்யகலா தாயைக் கேட்டாள்: ''அம்மா, அதற்கும் காரணம் உனக்குத் தெரியும் இல்லையா? பல வருடங்களுக்கு முன் நான் பிறப்பதற்கு முன் அப்பா அந்தப் புறொக்டர் வீட்டு வளவில் மரம் சீவினவர்; அதுதான் காரணம்.''

யாருக்கோ சீவன் போய்விட்டது போல் அவள் உரக்க அழுதாள்

''விசரி'' என்று உரைத்தார் தகப்பன்.

எங்களைச் சூர்யகலாவின் வீட்டுப் படலையில் விட்டு, எங்கேயோ சென்ற பாலசிங்கம் திரும்பி வந்தார். ''கலா,

கேட்க வேண்டியதை அம்மாவிடம் கேட்டு முடிஞ்சுதா?'' என்று வினாவினார் அவர். சூர்யகலாவின் தாய் பதிலளித்தார்: ''அதை ஏன் தம்பி கேட்கிறாய்? தன்ரை பழைய பாரதத்தைத் தான் அம்மாவுக்கும் இவ்வளவு நேரமும் ஒப்புவிக்கிறாள். கேட்க வேண்டிய விஷயத்தைக் கேட்கவில்லை.''

தகப்பன் சொன்னான்: ''போனகிழமை சனிற்றரி வந்த போதும் இது தான் கதை.''

''சனிற்றரி இமானுவல் ஐயா வந்தால், அவர் தான் அவளைப் பகிடி பண்ணுவார். அவள் அவருக்கு அப்படி ஒண்டும் சொல்லவில்லை'' என்றார் தாய்.

பாலசிங்கம் நான் இருந்த வாங்கின் ஒரு பகுதியில் உட்கார்ந்து கொண்டு, 'அம்மா விஷயம் இதுதான்' என்று ஆரம்பித்தார்.

''உங்களுடைய கிளினிக்கில் செல்வராணியும், வீரகத்தியினுடைய மகள் பவளம்மாவும் வந்து தொண்டு செய்கிறார்களாம். அவர்களைப் போல கலாவும் வந்து உதவி செய்ய விரும்புகிறாள். அதற்கு நீங்கள் தான் எம். ஓ. எச். ஐயாவிடம் சொல்லி அனுமதி வாங்கித் தரவேண்டும்.''

நான் மிக்க மகிழ்ச்சியுடன் பதில் தருவதற்கு முன், பாலசிங்கம் தொடர்ந்து சொன்னார்: ''இது மக்களுக்குக் கலா செய்யக்கூடிய ஒரு சேவை மட்டும் அல்ல, அவளும் அதனால் பயன் அடைவாள். அடிப்படையான சுகாதாரக் கருத்துக்களை அறிந்துகொள்வாள்.''

''இதற்குத் தானா இவ்வளவு அறிமுகம்?'' என்று கேட்டேன் நான். ''உண்மையில் எங்கள் டாக்டர் சூர்யகலா வருவதை மிகவும் வரவேற்பார். எங்கள் கிளினிக்குக்குச் செல்வராணி தான் ஒழுங்காக வருவாள். பவளம்மா தனது தாய் வரும் நாட்களில் மட்டும் வந்து, எங்களுக்குச் சிறு உதவிகள் செய்வாள்.''

சூர்யகலாவின் முகத்தில் இதுவரை இருந்த சூடு தணிந்து, அவள் மலர்ச்சியோடு காணப்பட்டாள்.

''கிளினிக்கில் மட்டுமல்ல, இப்படியான ஒரு கிராமத்தில் வீடுகளுக்குச் சென்று சுகாதார, சீர்திருத்த, வாழ்க்கை அறிவுரைகளைக் கூறவும் தொண்டர் தேவை. அதற்குச் சூர்யகலாவிலும் பார்க்கத் திறமைசாலியை என்னால் நினைக்க முடியவில்லை'' என்றும் கூறினேன்.

தாய் சொன்னா : 'படிக்க வேண்டிய பெட்டை அம்மா. கோதாரியிலை போன உந்த சில வாத்திமாற்றை சாதிக் கொழுப்புக் கதைகளாலை தான் வீட்டிலை இருக்கு,'' பின்பு மகளின் பக்கம் திரும்பி ''நீயும் அவையள் சொல்லுறதை பொருட்படுத்தாமல் போன காரியத்தை முடிச்சு, கடைசி எட்டோ பத்தோ படிச்சிருக்கலாம். அதை ஏன் இப்ப'' என்று கூறிவிட்டுப் பழையபடி உரல், உலக்கைப் பக்கம் போனா

தாய் போன திசையைப் பார்த்துக்கொண்டு நின்றாள் கலா. பின்பு எங்கள் பக்கம் திரும்பி, ''மச்சான் ஒன்றை மட்டும் அக்காவுக்குச் சொல்லப் போறன்'' என்று கூறி, பாலசிங்கத்தின் சிரிப்பை அனுமதியாகக் கொண்டு தொடர்ந்து சொன்னாள் :

''அக்கா, வாத்திமாரின் எதிர்ப்புகளுக்குப் பயந்து நான் பள்ளியை விடவில்லை. எதிர்ப்புகளை எதிர்க்கும் மனம் எனக்கு இருக்கு. கொடுமையை எதிர்த்துப் போராடும்போது அவர்களுக்குச் சரி நிகர்சமமாகவே இருந்து போராடுகிறோம். ஆனால்...''

சூர்யகலா தொடர்ந்து சொன்னவை சிந்திக்க வேண்டிய விஷயம்தான். ஒருநாள் ஓர் ஆசிரியர்— அவர் நல்லவராம். தனக்குப் பல உதவிகள் செய்தவராம். அன்பாய்ப் பேசுபவராம். அவளைத் தலைமை ஆசிரியரிடம் அழைத்துப் போயிருக்கிறார். ஓர் உபகாரச் சம்பளத்திற்குச் சிபார்சு வாங்குவதற்கு. அவர்

அவளுடைய தகுதிகளையும் தகைமைகளையும் எடுத்து உரைத்துவிட்டு ஆங்கிலத்தில் அவளை ஒரு 'லோ காஸ்ற். என்று வர்ணித்து அவளுக்குச் சகாயம் வேண்டினாராம்"

சூர்யகலா சொன்னாள்: "அக்கா அப்படியான ஒரு இரங்கல் சூழலில் நான் படிக்க விரும்பவில்லை. பச்சையாகக் கீழ்ச சாதி என்று ஏசினாலும் மறைமுகமாக லோ காஸ்ற் என்று இரங்கினாலும் ஒன்றுதானே! அப்பாவும், அம்மாவும் நான் அன்று பள்ளிவிட்டு வந்தது, தேவையில்லாத அடங்காத்தனம் என்று எண்ணுகிறார்கள். அவர்களுடைய சிந்தனை அப்படி! இன்று யாராவது லோ காஸ்ற்றைச் சேர்ந்தவர் ஒவ்வொருவருக்கும் பத்து ரூபா கொடுப்பதாக பறை அடிச்சால், இவர்கள்தான் கியூ வரிசையில் முதலாவது இரண்டாவதாக நிற்பவர்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் எல்லா விதத்திலும் புத்தூர் வித்தியாலயப் பிள்ளைகளிலும் பார்க்க வெரி வெரி ஹைகாஸ்ற்."

பாலசிங்கம் மாமனையும் மாமியைப் பார்த்துச் சிரித்தார். கிழவன் மகளைப் பார்த்துத் திரும்பவும் 'விசர்' என்றார். அவள் கீழே பார்த்தபடி தணிந்த குரலில் கூறினாள்:

"கெட்டவர்கள் எம்மைத் தாழ்த்தும்போது, எதிர்ப்பு உணர்ச்சியால் நாம் நமது கௌரவத்தைக் காப்பாற்ற முடியும். ஆனால், ஆதரிப்பவர்கள் எம்மைத் தாழ்த்தி அனுதாபம் காட்டும்போது, இதயமே நலிந்து போகின்றது. இந்த அழிவு நிலையில் இருந்துதான் நான் அன்று விடை பெற்றேன்."

நான் சூர்யகலாவின் பேச்சை நிறுத்தினேன். அவளுக்குச் சமூகத்தைப் பற்றியும், மரியாதையான வாழ்க்கையைப் பற்றியும் திட்டவட்டமான கருத்துகள் உண்டு என்பதில் சந்தேகமில்லை. அன்று அவள் அவற்றைப்பற்றி மணிக்கணக்கில் பேசும் மன நிலையிலும் இருந்தாள் என்பதும் தெரிந்தது. அத்துடன் அவள் கருத்துகளைத்

தகப்பனும்,தாயும் முற்றாக ஆமோதிப்பதாகவும் இல்லை. ஆகவே, நான் அவளிடம் கூறினேன் : "கலா, இன்று இரண்டு மூன்று வீடுகளுக்குப் போகிறேன். நீயும் என்னுடன் வா" சூர்யகலாவுக்கும் அந்த வேளையில் வீட்டிலிருந்து ஒரு தற்காலிக விடுதலை தேவைப்பட்டது. அவள் எழுந்து படலையை திறந்து பொதுவாக இருந்த கிணற்றுக்குப் போனாள்.

"அம்மாவுக்கும் நேரம் போச்சு" என்றா தாய்.

"இல்லை அம்மா. கலா சமூகத் தொண்டு செய்யத் தகுந்த பிள்ளை. எனது வேலைக்கும் இப்படியான பிள்ளைகளின் உதவி தேவை. அவளுடன் பேசி, அறிமுகம் ஆன இந்த நேரம் பிரயோசனமானது."

இவ்வளவு நேரமும் அவர்களுடன் பேசும்போது,அந்த வீட்டின் சுவர்களில் தொங்கியிருந்த படங்களை மேற்பரப்பாக நோக்கிய நான், இப்போது கவனமாகப் பார்த்தேன் பெரிய மகான்களின் உருவப் படங்கள் தொடக்கம், அழகான இயற்கைக் காட்சிகள் வரை அங்கே தொங்கின. எல்லாம் 'பாலு' வரைந்த படங்கள்,சுகாதார அலுவலகத்தில் தொங்கும் பரிசு பெற்ற சுகாதாரப் படம் என் ஞாபகத்திற்கு வந்தது.

'ஓகோ! பாலசிங்கம்தானா இந்த பாலு' என்று நினைத்தவாறு, என்னைப் பார்த்து அடக்கமாகச் சிரித்துக் கொண்டிருந்த பாலசிங்கத்தைப் பார்த்தேன்.

"என்னுடைய படங்கள்தான் அம்மா" என்றார் அவர். நான் எழுந்து நின்று படங்களை உன்னிப்பாக இரசித்தேன்.

"அம்மா கொஞ்ச நேரம் அந்த வாங்கில் இருங்கோ" என்றார் பாலசிங்கம். அவர் ஒரு பலகையில் வெள்ளைக் கடதாசி வைத்து, ஒரு பென்சிலுடன் குந்தியிருந்தார்.

"உங்களை வரைந்து, படத்தைத் தருகிறேன்" என்றார் அவர்.

கிணற்றடியில் இருந்து வந்த சூர்யகலா கூறினாள் :

''அக்கா நான் உடுப்பதற்கு முன்பே மச்சான் உங்கள் படத்தைக் கீறிவிடுவார்.''

வாங்கில் உட்கார்ந்து அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் கண்களால் என்னை அளந்து, விரல்களால் வரைந்து கொண்டிருந்தார். ஆரம்பத்தில் அவரைப் பார்த்த நான், அவர் கண்களிலிருந்து விடுபட்டு வேறு திசையைப் பார்த்தேன்.

பத்து நிமிடங்களில் சூர்யகலா சட்டையும் பாவாடையும் அணிந்து வந்தாள். தலை சீவிப் பின்னல் போட்டு, முகத்தில் பவுடர் தடவியிருந்தாள். ஒரு செருப்பை அணிந்து கொண்டாள்.

பாலசிங்கம் கடதாசியில் ஏதேதோ கீறுகள் வரைந்திருந்தார்.

'அம்மா, இன்று பின்னேரம் உங்களுக்குப் படத்தை என்னுடைய அன்பளிப்பாகத் தருகிறேன்'' என்றார்.

''மிகவும் நன்றி.''

அவர் சிரித்தபடியே படத்தை உற்றுப் பார்த்துத் தொடர்ந்து வரைந்தார்.

சூர்யகலாவும் நானும் குச்சு ஒழுங்கை வழியாக வந்து கொண்டிருந்தோம். பங்குக் கிணற்றிலே ஐந்து பெண்கள், தாங்கள் கொண்டுவந்த வாளியாலும் கயிற்றினாலும் நீர் அள்ளிக் கொண்டிருந்தனர், மண் குடங்கள் அவர்கள் பக்கங்களில் இருந்தன. இன்னுமொரு குமரிப் பெண் சட்டையும் பாவாடையும் அணிந்தபடியே குளித்துக் கொண்டு நின்றாள்.

அவர்கள் அனைவரும் எங்களைப் பார்த்தனர். கலா அவர்களைப் பார்த்துப் புன்னகை பூத்தாள்.

குளித்த பெண், கலாவிடம் கூறினாள் , ''கடைசியாக அம்மாவைப் பிடிச்சிட்டாய்.''

# 11

சூச்சு ஒழுங்கையைத் தாண்டிச் சமூக நிலையத்திற்கு வந்தபோது, அங்கே ஒரு கலியாணம் நடந்து கொண்டிருந்தது. ஆலமர வேரில் மாட்பிள்ளையும் பெண் பிள்ளையும் குந்தியிருந்தனர். எங்களைக் கண்டதும் பெண் பிள்ளை எழுந்து மரத்துக்குப் பின்னால் ஒளிந்து கொண்டாள். 'வாடி சரோ' என்று அழைத்தான், கல்யாணத்தை நடததிக் கொண்டிருந்த ஐயர். அவன் தோளில் பூணூல் இருந்தது. பூவரச இலையைச் சுருட்டி ஊதிக் கொண்டிருந்த நாதஸ்வரக்காரன். எங்கள் முன் வந்து வளைந்து நிமிர்ந்து 'பீ பீ' என்று ஓசை எழுப்பினான். ஒரு பையன் ஒரு தகரத்தில் காதுகள வெடிக்கத் தட்டினான். இன்னும் ஒருவன் தன் விலாவிலும் வயிற்றிலும் தட்டி 'டும் டுய்' என்றான். ஒருவன் ஒரு தகரததின் மூடியை எங்கள் முன் நீட்டிப் பல்லைக் காட்டினான். அதிலே இரண்டு சதக் குற்றிகள் ஐந்து ஆறும், ஓர் ஐந்து சதக் குற்றியும் இருந்தன.

"எங்களிட்டைக் காசு இல்லையடா போடா" என்று ஏசினாள் சூர்யகலா. "காசு சேர்த்து கடைத்தீன் தின்னத் தான் இந்தக் கலியாண விளையாட்டு."

நான் எனது கைப் பையைத் திறந்து என்னிடம் சில்லறையாக இருந்த ஒரு பத்துச் சதக் குற்றறை அதில் வைத்தேன். காசு சேர்த்தவன் முகத்தை ஒரு திடீர்ப் புன்னகை குலுக்கியது. அவன் அண்மையில் இருந்த ஒரு சில்லறைக் கடைக்குள் ஓடி, சிறிது நேரத்தில் ஒரு பேப்பர்

சரைக்குள் ஏதோ இனிப்புக் கொண்டு வந்தான். பல்லி முட்டை இனிப்புகளாக இருக்கலாம். இந்தக் காலத்திலே அந்தப் பணத்திற்கு எல்லோருக்கும் பகிர வேறு என்ன வாங்கலாம்?

இந்த இனிப்புப் பகிரும் விஷயமாக ஐயருக்கும் மாப்பிள்ளைக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பின்பு, மிகச் சிறிய ஒரு கைச் சண்டையின்போது ஐயரின் பூணூல் அறுபட்டு, மாப்பிள்ளையின் வேட்டியும் அவிழ்ந்துவிட்டது. பணச் சடங்கு ஏற்படுத்தி, இனிப்புச் சபை வைத்தவன் அவர்கள் இருவரையும் ஊத்தை வார்த்தைகளால் ஏசினான். இதைக் கேட்டதும், சனசமூக நிலையத்தில் பத்திரிகை படித்துக்கொண்டும், அவ்வப்போது இருமித் துப்பிக் கொண்டும் இருந்த ஒரு நோஞ்சல் வயோதியர் வெளியே விரைந்து வந்து, ஒரு பையனின் கன்னத்தில் அறை கொடுத்தார். அவனைப் பெற்ற தாயை இழுத்து ஒரு தூஷண வார்த்தை பேசினார். கூட்டம் கலைந்து, ஒவ்வொருவராகத் தங்கள் ஒழுங்கைகளுக்கும் வீடுகளுக்கும் ஓடினார்கள். மரத்திற்குப் பின்னால் இருந்த மணப் பெண்ணின் சின்னக்கை மட்டும் இனிப்புக்காக இன்னும் நீட்டியபடியே இருந்தது.

''நானும் அலுத்துப் போனேன்'' என்ற வார்த்தைகள் கேட்டன. சுகாதாரப் பரிசோதகர் இமானுவல் வந்து கொண்டிருந்தார்.

''இவன்கள் உருப்பட மாட்டான்கள்'' என்றார் அவர். தொடர்ந்து தனக்கே உரியதான பாணியோடும் பாவனையோடும் கூறினார் :

''பாருங்கோ தங்கச்சியம்மா நீயும் தான் கேள் சூர்ய கலா; இந்தக் குறிச்சியிலை 250 வீடுகள். அதிலை மூன்று வீடுகளிலைதான் கக்கூசுகள் இருக்கு. மற்ற எல்லாரும் பனை வளவிலைதான் குந்தி இருக்கிறது. காலையிலை

இந்த வீதியில் வந்தால் ஒவ்வொரு மரத்துக்குக் கீழே, ஒருவராகப் பார்க்கலாம். குமர்ப் பிள்ளைகளும்தான்.

''நீங்கள் ஏன் அவையைப் பார்க்கிறியள்?'' என்று அவர் பேச்சை வெட்டினாள் சூர்யகலா.

''உனக்கெடி பெரிய வாய்.''

'உம்' அழகு காட்டிச் சிரித்தாள் சூர்யகலா. இமானுவல் தான் வைத்திருந்த ஒரு பெரிய குறிப்பீட்டுப் புத்தகத்தைத் திறந்து, எங்கள் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு, ஒவ்வொரு பக்கமாகப் புரட்டினார்.

''பாருங்கோ தங்கச்சியம்மா, இந்த வீடுகளில் ஒன்றிலாவது கக்கூசு இல்லை.'' புத்தகத்தைப் படாரென மூடினார். ''நானும்தான் கடைசி ஒரு பப்ளிக் கக்கூசு கட்டப் படாதபாடு படுகிறேன். அதற்கு அரசாங்கம் காசு தரத் தயார். ஆனால், அது கட்ட இடம் தேர்ந்து எடுப்பதிலைதான் வில்லங்கம். பராசக்தி சனசமூக நிலையத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு இடத்தில் கட்டவேணும் என்கிறார்கள். இவர்களுடன் போட்டி வீரபத்திரர் வாசிகசாலைப் பொடியன்கள். அவர்கள் வேறு இடத்தைக் காட்டித் தலைகீழாக நிற்கிறான்கள். இதனால்தான் நான் இங்கே மூன்று வருஷமாக முயற்சி எடுத்தும் பொதுக் கக்கூசு கட்ட முடியவில்லை. இவன்களிடையே ஒற்றுமையில்லை.''

''நீங்கள் ஒரு இடத்தைத் தெரிந்து, அந்த இடத்தில் கட்டவேண்டியதுதானே?'' என்று கேட்டேன் நான். ''நீங்கள் சுகாதாரப் பரிசோதகர் அல்லவா?''

'' தங்கச்சியம்மா, என்ரை காசு என்றால் எப்பவோ கட்டிப் போடுவேன். இது பொதுப் பணம். கிராமத்துச் சனங்கள் ஒன்று சேர்ந்து இடத்தைக்காட்டாதுபோனால், அரசாங்கமோ கிராமச் சங்கமோ பணம் தராது. அதோடு அத்திவாரம் போடுவதற்கு முன். ஒருவரோடு ஒருவர் சண்டை பிடிச்சுச் செத்துப் போவான்கள். நான் இங்கே வருவதற்கு முன், இங்கே ஒரு மேடர் நடந்ததாம்''

இமானுவல் சூர்யகலாவின் பக்கம் திரும்பிக் கேட்டார். "ஏன் உனக்குத்தானே தெரியவேணும். 1969 இலை வீரபத்திரர் கோவில் திருவிழா ஒன்றில், பாலசிங்கத்தின்ரை ஒன்று விட்ட தம்பி கொலை செய்யப்பட்டது. இந்தச் சனசமூக நிலைய வாசிகசாலை சண்டையிலை தானே?"

'ஓம்' என்பதைச் சூர்யகலா தலை அசைப்பின் மூலம் தெரிவித்தாள்.

எதிர்பாராத விதமாக எனது வீட்டு உலா தடைப் பட்டுக்கொண்டே வந்தது. இமானுவல் பேசத் தொடங்கினால் சுருக்கமாக முடிக்கத் தெரியாத பேர்வழிகளில் ஒருவர். ஒரு பிரச்சினையில் இருந்து இன்னும் ஒன்றிற்குத் தாவும் மனம் அவருடையது. நடுச் சந்தியில் நின்று ஒரு மணி நேரம் பேசக்கூடியவர். பேச்சின் முடிவில் கேட்டவர் மனத்தில் சோர்வும் சோடைபோன நிகழ்ச்சிகளும் தான் மிஞ்சும். நான் கேட்டேன் :

"நானும் சூர்யகலாவும சில வீடுகளுக்குப் போகிறோம். நீங்களும வருகிறீர்களா?" பதில் வருவதற்கு முன்பே, நான் கிழக்குப் பக்கமாகப் புறப்பட்டேன்.

"வரச் சொன்னால் வருகிறேன். கலாவும் தொண்டு செய்யத் தொடங்கிவிட்டாளா?"

"முடியாதா?" என்று கேட்டாள் சூர்யகலா.

"ஏன் முடியாது? முதலில் உன்னுடைய வீட்டில் கக்கூசு கட்ட அப்பருக்குச் சொல்."

"கட்டுகிறோம்."

"வெரி குட். பொகோம ஹொந்தாய்."

இமானுவல் இப்போது ஓர் ஆனந்த விகட நிலையில் காணப்பட்டார். அவருடைய மீசை நளினமாகச் சிரிக்கக் கேட்டார் :

"சூர்யகலா, எப்ப உனக்கும் பாலசிங்கத்திற்கும் கலியாணம்?"

"அதற்குக் காலம் இருக்குது சேர்."

"ஒன்றாகத் திரிகிறியள். கவனமாக இருக்க வேண்டும்."

"அது அப்படி வித்தியாசமாகப் பழகாது."

"அது சரி. தப்பித் தவறி அப்படிப் பழகுவதானால், மருத்துவ அம்மா தானே உன்ரை சிநேகிதி. அவவிடம் 'பில்' வாங்கிப் போட்டுக்கொள். கரைச்சல் வந்தபின், ஓடி ஆடிப் பலருடைய கால்களைப் பிடிப்பதிலும் பார்க்க, கவனமாக இப்பவே 'பில்' உபயோகித்து, வயிற்றைக் கட்டிக்கொள்வது நல்லது."

இமானுவலுடைய இந்தப் பேச்சை நிறுத்த முயன்றேன். ஆனால், தோல்விதான்.

"பாலசிங்கம் கலாவைக் கட்டிக்கொள்ளப் போகிறார். நீங்கள் கற்பனை செய்வது போல வித்தியாசம் நடந்தாலும் குடி முழுகிப் போகாது" என்றேன்.

"தங்கச்சிமாரே!" என்று சகோதர தோரணையில் எங்கள் இருவரையும் அழைத்து, எங்கள் முன்னால் நின்று போதனை செய்தார்.

"கலியாணம் முடிந்தாலும், இந்தக் காலத்திலை பில் தானே தேவை. கொஞ்சக் காலம் எங்கள் நாட்டின் உணவுக் கஷ்டமும் பொருளாதாரப் பிரச்சினையும் தீரும் வரை எந்தக் குடும்பமும் பிள்ளை பெறக்கூடாது." திரும்பி நடக்க முயன்றவர் எதையோ யோசித்தவராய் எனக்குக் கண்களைச் சிமிட்டியபடி கலாவுக்குக் கூறினார் :

"தங்கச்சி, அந்தக் காலத்திலேதான் புல்லானாலும் புருஷன். இந்தக் காலத்திலே புருஷனானாலும் பில்."

இதற்கு என்ன சொல்வது? அவரே சிரித்தார். அவசரமாக எங்கேயோ போனார்.

"எங்களுடன் வரவில்லையா?" என்று சற்று உரக்கக் கேட்டேன், பதில் இல்லை.

சில காலம் எங்கள் கிளினிக்குக்கு வராத ஒரு தாயின் வீட்டிற்குள் புகுந்தோம். அவள் அப்போது அங்கே

இல்லை. யாரோ ஒருவருடைய தோட்டத்திற்குக் கூலி வேலைக்குப் போய்விட்டதாக அறிந்தோம். என்னுடைய குறிப்பேட்டின்படி அவள் எட்டு மாதக் கர்ப்பிணி, அங்கே இருந்த ஒரு பத்து வயதுப் பெண்பிள்ளை "அம்மா சுகமாய் இருக்கிறா. ஒவ்வொரு நாளும் வேலைக்குப் போறபடியால் கிளினிக்குக்கு வர இல்லை" என்றாள்.

"அப்பா எங்கே?" என்று கேட்டேன்.

"அப்பா வவுனியாவிலை" என்றாள் அவள். வேறு விவரங்கள் அவளுக்குத் தெரியவில்லை. இரு சிறு பையன்கள் ஒரு வாங்கில் படுத்திருந்தார்கள். ஒரு பையனின் தொப்புள் தள்ளியிருந்தது. மற்றப் பையன் எங்களைக் கண்டதும் அழுதான். அவன் வாயில் கடைவாய்ப் புண்கள் இருந்தன. தமக்கை அவனைத் தூக்கிய வாறு பாதி திறந்திருந்த கதவைச் சாத்தினாள்.

முருக்கம் வேலிக்கு மேலாக பக்கத்து வீட்டிலிருந்து ஒரு பெண் 'அம்மா' என்று என்னை அழைத்தா. வேலியடிக்குப் போனேன். "தகப்பன் அறைக்குள்ளை கிடக்கு. காய்ச்சல் ஏதும் வித்தியாசமான நோய் கீயோ பாருங்கோ" என்று குசுகுசுத்துவிட்டு, தனது வளவில் கோழிகளை 'ஹாய்' என்று உரக்கக் கலைத்தா.

அதற்கிடையில் சூர்யகலா சாத்தப்பட்ட அந்தக் கதவைத் திறந்து பார்த்து 'கந்தையா அப்பா' என்று அழைத்து, திருப்பி அந்தப் பெட்டையின் முதுகில் நுள்ளினாள். "ஏன்டி ராஜேஸ், பொய் சொன்னனி சனியன்."

"பொய் பேசப்படாது பிள்ளை" என்று சொன்னேன் நான்.

"தாய் தேப்பன் சொல்லி வைச்சதைத் தானே அதுகள் சொல்லும். ஹாய்" என்று அடுத்த வளவில் இருந்து குரல் வந்தது.

நானும் அறைக்குள் எட்டிப்பார்த்தேன். ஒரு நிமிடம் ஒன்றுமே தெரியவில்லை அடுத்த நிமிடம், எஸ்டேட் லயத்தின் காம்ராவிலே இருளில் பார்த்துப் பழகிய எனது

கண்கள், ஒரு மூலையில் போர்த்துக் கொண்டுபடுத்திருந்த ஓர் உருவைக் கண்டு கொண்டன. 'பெரியவர்' என்று குரல் கொடுத்தேன். வெளியே 'வாருங்கோ பார்ப்பம்.''

சிறிது நேரத்தில், ஓர் அழுக்குச் சேலையால் தன்னைப் போர்த்தபடி கத்தையா வெளியே வந்தார்; வாங்கில் உட்கார்ந்தார். ''உங்களுக்குச் சுகமில்லையாம்?'' என்று கேட்டேன்.

''மலேரியா' என்றார் அவர் 'வவுனியாவுக்கு வேலை தேடிப் போனனான். அங்கேதான் பிடிச்சிருக்கு.''

''மருந்து எடுக்கிறீர்களா?''

''இன்னும் எடுக்கவில்லை. காய்ச்சல் குளிசைதான் கடையிலை வாங்கிப் போடுறன்.''

அவருடைய போர்வையை எடுக்கக் கூறி நெஞ்சையும் முதுகையும் பார்த்தேன். பருக்கள் ஒன்றும் இல்லை. அவர் முகம் மிகவும் வாட்டமடைந்தது. அழுக்கு நிறக் கண்கள், துர்நாற்றம் வீசும் வாய், இப்படியாகச் சவரம் செய்யப் படாது காணப்பட்டது. நான் அவருக்குக் கூறினேன்:

''பெரியவர், நீங்கள் மூன்று நான்கு நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்து குணமடைவதே நல்லது. நோயை முதலில் கண்டுகொள்ள வேண்டும். மலேரியா என்று நாங்கள் தீர்மானிக்கப்படாது. அப்படி மலேரியா என்றாலும், தகுந்த மருந்து எடுக்க வேண்டாமா?''

''ஆஸ்பத்திரிக்குப் போறது நல்லதுதான் அம்மா. இனி ஏலாது, மனிசி வரட்டும்'' என்றார் அவர்.

சொல்லி வைத்தது போல், அப்போது படலையைத் திறந்து அவருடைய மனைவி வந்தா; தலையிலே, ஓர் ஓலைப் பெட்டியில் மரவள்ளிக்கிழங்கும், கீரைப்பிடியும் இருந்தன.

''பாக்கியம், எப்படி? சுகமா?' என்று கேட்டேன் நான்.

''எனக்கு ஒன்றும் இல்லை அம்மா'' என்று பெட்டியைத் திண்ணையில் வைத்தபடி கூறினா

''அவருக்கு நான் மேல் உளைச்சல்,படுத்திருக்கு. அப்படி வித்தியாசம் ஒன்றும் இல்லை வவுனியாக் காட்டிலை காய்ஞ்சு வந்திருக்கு.'' அப்போது அவவினுடைய மகள் பத்து வயதுச் சிறுமி, தாய்க்கு ஏதோ நாங்கள் கேட்காதபடி கூறினாள். பாக்கியத்தின் முகம் மாறியது. எட்டி வேலிக்கு மேல் பார்த்தா.

கந்தையா சொன்னார் ''கட்டாயம் பின்னேரத்துக்கு இடையில் கோப்பாய் ஆஸ்பத்திரிக்குப்போறன் அம்மா.''

பாக்கியம் சுகமாக இருந்தா; நியாயமான வயிறு. அவவைக் கிளினிக்குக்கு வரும்படி கூறிவிட்டு வெளியேறினோம். படலை சரியாகச் சாத்தப்படுவதற்கு முன், பாக்கியத்தின் கோபம் குமுறும் ஓசை கேட்டது.

அன்று சூர்யகலாவுடன் இன்னும் இரண்டு வீடுகளுக்குப் போனேன். அங்கே உள்ள பிள்ளைகளைப் பார்வையிடுவதே எனது நோக்கம்.

பாசக்குளத்திலே, எல்லா வீடுகளுக்கும், எல்லாச் குடும்பங்களுக்கும் பொதுவான பிரச்சினைகள் பல உணடு. வறுமை, கல்வியின்மை, சமூக ஒதுக்கு நிலையால் ஏற்பட்ட மனோபாவம்; இந்த அடிப்படையில் ஏற்பட்ட பிரச்சினைகள் அவை. மனிதன் வாழத் தகுதியற்ற வீடு. போதாத குடிநீர். கக்கூசு இன்மை, நித்திய நோய், போஷணைக் குறைவு, எதற்கும் சண்டை சச்சரவு. கிடைக்கக் கூடிய சுகாதார வசதிகளை உபயோகிக்கத் தெரியாமை; இப்படியான குறைபாடுகள் எல்லா வீடுகளிலும் விதம் விதமான வகையிலும் தரத்திலும் உண்டு.

''அக்கா நான் இந்த ஊரிலை பிறந்து 18 வருடங்கள் சீவித்து விட்டேன். ஆனால், இப்ப உங்களோட இந்த மூன்று வீடுகளுக்கும் வந்து பார்க்கும் போது தான் எங்கள் குறைபாடுகள் தெரியுது; இந்தக் குறைபாடுகளை நீக்க முடியும் என்றும் விளங்குது'' என்று சூர்யகலா கூறியபோது, எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

''கிராம மக்களின் கஷ்டங்களில், கடைசி அரை வாசியாவது அவர்கள் சொந்த முயற்சியால் தவிர்க்க முடியும் கலா'' என்று கூறினேன், ''நீயே கண்டாய். இரண்டாவது வீட்டில் உள்ள நான்கு பிள்ளைகளில் ஒருவருக்காவது நோய்த் தடுப்பு ஊசிகள் போடப்படவில்லை.''

சூர்யகலா நான் கூறுவதை மிகக் கவனமாகக் கேட்டாள். அழகும் அறிவும் நிலவும் அவள் முகத்தைப் பார்க்க ஆசையாக இருந்தது. நான் தொடர்ந்து சொன்னேன்:

''உண்மையில், பாசக்குளத்தில் சில காலமாக மருத்துவ மாது இல்லாததற்கும், கிளினிக் நடைபெறாததற்கும், கிராமத்தின் வாலிபர்கள் பொறுப்பு ஏற்க வேண்டும். சனசமூக நிலையமும், வாசிகசாலையும் ஒன்றோடு ஒன்று போட்டி போடுவதிலும் பார்க்க. ஒன்றாகச் சேர்ந்து தங்கள் குறைபாடுகளைச் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவித்திருக்க வேண்டும்.''

''அக்கா, உங்களைப் போல் இதையெல்லாம் எங்களுக்குச் சொல்லித்தர ஆர் இருந்தார்கள்?'' என்று கேட்டாள் சூர்யகலா. அவள் திடமான குரலில் திட்டவட்டமாகக் கூறினாள்:

''அக்கா, எனக்கு வழிமுறைகள் ஒரு அளவுக்குத் தெரியுது. உங்களோடு சிலகாலம் கிளினிக்கிலும், வீடுகளிலும் இவற்றை அவதானிக்கப் போகிறேன். நான் எனது வாழ்க்கையை எனது கிராம மக்களுக்குச் சமூக சேவை செய்வதற்கே அர்ப்பணிக்கிறேன். எனக்குத் தெரியும்; இதற்கு அவருடைய பூரண ஆதரவு கிடைக்கும்.''

நான் அவளது இந்தத் திடமான வாக்கைக் கேட்டு ஆச்சரியப்படவில்லை. சூர்யகலா போன்ற ஒரு பெண்ணிடம் இருந்து நான் இதை எதிர்பார்க்க வேண்டியதுதான். பாசக்குளத்திற்கு அவள் கிடைத்தது பெரும் பாக்கியம்

என்று கருதுகிறேன். பல வருடங்களுக்குப் பின், நாடு ஒப்புக்கொண்ட ஒரு சமூக சேவகியாக அவள் இருப்பாள். நரைகண்ட, அறிவு மிகுந்த மூதாட்டியாக ஸ்ரீமதி சூர்யகலா பாலசிங்கம் அம்மையாரைக் கற்பனை செய்து பார்த்தேன். செல்லமாக அவளின் கன்னத்தை வருடினேன்.

அப்போது பரிசோதகர் இமானுவல் வந்து கொண்டிருந்தார்.

''எங்கே அப்பு போனனீங்கள்?'' என்று துடுக்காகக் கேட்டாள் சூர்யகலா.

''வயிற்றைக் கலக்கிச்சுது. சண்முகமணி வீட்டை போட்டு வாறன். கோதாரியிலை போன ஊரிலை ஒண்டுக்கு இரண்டுக்கு வந்தால் கக்கூசு தேடி ஒரு கட்டை போகவேணும்.''

ஒரு மணி நேரத்திற்கு முன், எங்களுடன் பேசிக்கொண்டு நின்றவர் கேட்ட கேள்விகளுக்குப் பதிலே தராமல் போன போக்கை இப்போது நினைத்து, வாய் திறவாமல் சிரித்தேன் நான். வாய் விட்டுச் சிரித்தாள் சூர்யகலா.

''சிரியுங்கோ, உங்களுக்கு வயிற்றைக் குழப்பி அடிச்சால் தெரியும்'' என்றார் இமானுவல் ''அது சரி, தங்கச்சியம்மா, உம்முடைய அலுவலகத்துக்கு டாக்டர் காசிநாதனும், மிஸஸ் ஜோசப்பும் வந்து புத்தகங்களைப் பார்வையிட்டுப் போயிருக்கிறார்கள்.'

நான் எனது வீட்டிற்கு விரைந்து சென்றேன். சூர்யகலா சனசமூக நிலையத்தடியில் விடைபெற்றுத் தனது வீட்டிற்குப் போனாள்.

டாக்டர் காசிநாதன் ஐயாவும், ஜோசப் அம்மாவும் கொக்குவில் மனோன்மணியின் அலுவலகத்திற்குப் போயிருக்கிறார்கள். திரும்பும் வழியில், எனது அலுவலகத்தில் குறிப்பேடுகளைப் பார்வையிட்டு கையொப்பம் போட்டிருந்தார்கள்.

"அக்கா உங்களுடைய வேலை மிகவும் நல்லது என்று அண்ணைக்குக் கூறிப் புகழ்ந்தார்கள்." என்று சொன்னாள் செல்வராணி. என்னுடைய களைப்புத் தீர்ந்தது. ஒருவர் செய்யும் உண்மையான வேலைக்கு, மறைமுகமாகப் பாராட்டுக் கேட்கும் போது, எவ்வளவு உற்சாகம் ஏற்படுகிறது.

"அக்கா ஒரு புதினம்" என்றாள் செல்வராணி. என்னை எங்கள் அறைக்கு அழைத்துச்சென்றாள். நான் எனதுயூனிபோம் சேலையை அவிழ்த்துக்கொண்டிருக்கும் போது செல்வராணி எனது கட்டிலில் இருந்து சொன்னாள்:— 'அக்கா, டாக்டரும் நேர்ஸ் அம்மாவும் உங்களுடைய அறையில் பேசுவது என்ரை காதுகளுக்கு எட்டியது. கொக்குவில் மனோன்மணிக்கு எதிராக ஆரோ பெட்டிசம் எழுதிப் போட்டிருக்கினமாம். சரியாக விளங்கவில்லை அக்கா. பீயோன் கந்தையா அவவின் வீட்டுக்கு இருளிலை போயிருக்கிறானாம். அவ பிள்ளை கரைக்கக் கொக்குவிலிலை ஒரு நாட்டுப்பரியாரியிடம் போயிருக்கிறா!"

"என்னடி கதை—?" பாவாடையோடும் பிராசியரோடும் அவிழ்த்த சேலையைக் குவியலாக நெஞ்சோடு அணைத்தவாறு கட்டிலில் உட்கார்ந்து கேட்டேன்.

"என்னடி?"

"அவ்வளவும் தான் அக்கா. விளங்கினது" என்றாள் ராணி. "இப்படியான ஒரு கெட்ட நடத்தைத்காரி, தங்கள ஊரிலை மருத்துவச்சியாக இருப்பது ஊருக்கு அவமானம் என்று பெட்டிசம் வநதிருக்கிறது போலை."

நான் யோசித்துக் கொண்டிருந்தேன். எனக்கு வேதனையாக இருந்தது. இது உண்மையானால், மனோன்மணியின் வாழ்வில் ஏற்பட்ட ஓர் அசிங்கமான தனிப்பட்ட சம்பவம் என்று மட்டும் இதைக்கொள்ள முடியாது. சில காலமாவது அந்த ஊர் மக்கள் பொதுவாக எல்லா மருத்துவ மாதுக்களுடனும் இந்த அழுக்கைச்

சம்பந்தப்படுத்துவார்கள். எங்கள் தொழிலின் பெயரைத் தூய்மைப்படுத்த எவ்வளவு காலமாகும்? மனோன்மணி மாற்றம் கேட்டு வேறு ஊர் போகலாம். ஆனால், அதே இடத்துக்கு வரப்போகும் மருத்துவத்தோழி அந்த அவப் பேச்சுக்கு இலக்காகலாம். எந்த ஆணுடன் பேசினாலும் அது விகற்பமாகக் கணிக்கப்படும்.

''யோசிக்காதேயுங்கோ அக்கா'' என்றாள் செல்வராணி.

கண்களைத்துடைத்துக் கொண்டு சேலையை அணிந் தேன். செல்வராணி கேட்டாள்:

''அக்கா, அப்படிப் பழகுவதனாலும், மனோன்மணி கருத்தடை முறைகளைக் கையாண்டிருக்கலாம் அல்லவா?''

''ராணி, சாஸ்திரம் சொல்லுற பல்லி தானே கூழ்ப் பானைக்குள் விழுந்ததாம்.''

ஒரு மூலையில் குவியலாக வெற்றுச் சிகரெட் பெட்டிகள் கிடந்தன. செல்வராணி இந்தப் பெட்டிகளை வெட்டி அழகான பூக்களும், பறவைகளும், மிருகங்களும், மாளிகைகளும் செய்பவள். இரு கிழமைகளுக்கு முன் கிளினிக் வேலை முடிந்ததும் செல்வராணி டாக்டர் காசிநாதன் ஐயாவிடம் சிகரெட் வெற்றுப் பெட்டிகளைத் தருமாறு கேட்டது ஞாபகம் வந்தது. அவர் அன்று சிரித்த படி ''நான் சிகரெட் பெட்டிகளைச் சேகரிக்கும் குழந்தையா? சரி. இனி மேல் எடுத்து வைக்கிறேன்'' என்றார்.

''அக்கா, ஐயா எவ்வளவு நல்லவர், ஐம்பது பெட்டி களை இன்றைக்கு கொண்டு வந்து தந்தார்'' என்றாள் செல்வராணி.

ஒரு விதத்தில் டாக்டர் ஐயாவும் சாஸ்திரம் சொல் லும் பல்லிதான். இரு கிழமைகளில் ஐம்பது சிகரெட் பெட்டிகளைக் காலியாக்கியிருக்கிறார். அவருக்கு எப்படிச் சொல்லுவது? யார் சொல்லுவது?

## 12

**பா**லசிங்கம் தான் வரைந்த எனது உருவப்படத்தை, அந்தியில் செல்வராணியிடம் கொடுத்திருந்தார். நான் அப்போது அவசர பிரசவ விஷயமாக ஒரு வீட்டிற்குப் போயிருந்தேன். அவள் அந்தப் படத்தை எங்கள் படுக்கை அறையின் சுவரில் மாட்டியிருந்தாள்.

நான் வீடு திரும்பியதும் முகம் கால்கூட அலம்ப விடாமல், என்னை இழுத்துக்கொண்டு போய் அதைக் காட்டினாள். அந்தப் படத்தை அவள், சண்முகமணி, அம்மா, அசுபதி அப்பா எல்லோருக்குமே காட்டிவிட்டாள். பூ! படம் மாட்டப்பட்டிருந்த ஆணியில் ஒரு ரோசாப்பூவைக் கொளுவியிருந்தாள்.

சந்தேகமில்லை; படம் என்னைப்போல்தான் இருந்தது. அந்தக் கலைஞனுக்கு என்னை வரைய வேண்டுமென்ற மனம் வந்ததே. அது எனக்குப் பெருமையாக இருந்தது. "என்ன அக்கா, எங்களுடைய படத்தைப் பார்த்து நீங்களே சொக்கிப் போனீங்களா?" என்று கேட்டாள் ராணி. படத்திலிருந்து விடைபெற்றேன். பெண்மனம்! நான் பாசக்குளத்துக்கு வந்த நாட்களில் பவளம்மா என்னை ஒரு நல்ல வடிவான பெண் என்று தாயிடம் கூறினாள். அதுகூட இப்போது ஞாபகம் வந்தது.

"படம் நல்லாய் இருக்கு. ஆனால், நெஞ்சில்தான் ஏதோ வைச்சுச் கட்டியிருக்கிறது போல வரைந்திருக்கிறான் பாவி" என்றேன் நான்.

"ஏனக்கா, உங்களுடைய நெஞ்சு கொஞ்சம் பெரியது தானே!"

''சீ! அலங்கோலம்''

''கிளி'', என்ற குரல் வந்தது. செல்வராணி, சண்முக மணியின் அலுவலக அறைக்கு ஓடினாள். சிறிதுநேரத்தில் கோழி பிடிக்கப் பதுங்குவதுபோல், மெல்ல வந்து, எனது இடது தோள்மேல் இரு கைகளையும் வைத்தாள். ஏதோ தனக்கு இனிமையான விஷயம் கேட்கப்பேகிறாள் என்று தெரியும்.

''வசந்த மாளிகை படம் பார்க்க உத்தரவு கிடைத்து விட்டது. நானும் நீயும் நாளை போகவேண்டும். அப்படித் தானே?'' என்று கேட்டேன்.

''இல்லை அக்கா, படம் விஷயம்தான். ஆனால், உங்களுடைய உத்தரவுதான் வேண்டும்.''

''எதற்கு?''

''அக்கா'' என்று மிகப் பரிவுடன் அழைத்தாள் ராணி. ''உங்களுடைய படத்தை, அண்ணை தன் அறையிலை மாட்டச் சொன்னார்; அதுக்கு உத்தரவு வேணும்.''

அவள் என் முகத்தைப் பார்த்தாள். நான் அவள் தோளில் என் நெற்றியைப் புதைத்துவிட்டேன். அவள் கட்டிலில் சாய்ந்தபடி கேட்டாள்; ''சரியா அக்கா?''

''இல்லை ராணி.''

''ஏன்?'' ஒரு சின்னக் கேள்வி. ஆனால், அப்போது அவள் முகத்தில் பலவிதமான உணர்ச்சிகளின் போராட்டத்தை நேரில் கண்டேன்.

''சின்ன ஒரு காரியத்துக்கு ஏன் இவ்வளவு சஞ்சலப் படுகிறாய் ராணி'' என்று கேட்டேன் நான். ''விஷயம் இது தான். நான் பாசக்குளத்துக்கு வேலைக்கு வரப் புறப்பட்ட போது, வேலுசாமி மச்சான் என்னுடைய ஒரு போட்டோ கேட்டார். என்னிடம் பேட்டோ இல்லை இங்கே வந்ததும் ஒன்று எடுத்து அனுப்புவதாக வாக்குக் கொடுத்தேன். ஆனால், இதுவரை அனுப்பவில்லை. பாலு என்னை வரைய முனைந்தபோதே, படத்தை மச்சானுக்கு அனுப்புவதாக நினைச்சேன். அதற்குத்தான் அவருக்கு வரைய அனுமதி கொடுத்தேன்.''

இந்த உண்மையான நீண்ட விளக்கம் செல்வராணியை திருப்தி செய்தது. ஆனால், அவள் கேட்டாள்: "அப்ப. யாழ்ப்பாணம் போறபோது ஒரு போட்டோ எடுத்து அண்ணைக்கு ஒரு பிரதி தருகிறீர்களா?"

"தருகிறேன். உனக்கு ஒன்று தருகிறேன்," அவள் படுத்திருந்தபடியே "அண்ணை" என்று உரக்க அழைத்தாள்.

"உங்களுக்கு அக்கா ஒரு போட்டோ தருவா. இந்தப் படத்தை ஊருக்கு அனுப்புகிறா."

"சரி" என்ற நிதானமான குரல் எதிரொலித்தது.

அன்று இரவு, வழக்கம்போல் செல்வராணி பேச்சுத்தரவில்லை. படம் பற்றிய பிணக்கு குறுக்கிட்டிராவிடில். மனோன்மணி... கந்தையா கதையாவது, விவரம் அதிகம் தெரியாவிடினும், பத்துமணிவரை பேசியிருப்போம். நானும் பேசும் மனநிலையில் இருக்கவில்லை வெளியே படுத்திருந்த அம்மா கேட்டா:

"ஏது அக்காவும் தங்கையும் இண்டைக்குப் பேசாமல் பறையாமல் படுத்திருக்கிறியள் என்ன காரியம்?"

நான் மெதுவாகச் சிரித்தேன்: ராணி ஒன்றும் பேசவில்லை

"என்ன கேட்கவில்லையே?" இருமல், செருமல் சிரிப்போடு மீண்டும் அம்மா கேட்டா.

செல்வராணி ஏசினாள்: "நீ உந்தச் சுருட்டை வீசிப் போட்டு நித்திரை கொள்; கண்டறியாத சுருட்டு."

அம்மா படியாவிட்டாலும், வலுகெட்டிக்காரி. வேலை செய்வது போல் இருப்பா; ஆனால், யார் எங்கே இருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பது எல்லாம் அவதானம். எங்கள் நாளாந்த வாழ்க்கையில் ஏதாவது ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டாலும், கண்டு கொள்வா. ஆனால், பெரும்பாலும் வாய் திறந்து பேசமாட்டா. பேசுவதானால் இரண்டொருசிறு கேள்விகளுடன் நிறுத்தி விடுவா; எங்களுக்கு அப்போது தெரியும்.

PUBLIC LIBRARY
JAFFNA



அம்மா விஷயத்தைக் கிரகித்து விட்டா என்று. அம்மாவின் இந்த நோட்டம் வீட்டு நிர்வாகத்தில் முக்கியமானதாகும்.

சண்முகமணிக்காக ராணி என்னிடம் படம் கேட்டது. நான் ஒரு சாட்டுக் கூறியது, இவை பின் விறாந்தையில் அசுபதி அப்பாவுக்கு இரவு மருந்தும் உணவும் கொடுத்துக் கொண்டிருந்த அம்மாவின் அவதானிப்புக்குத் தப்பியிருக்க முடியாது. நல்லதோ, கெட்டதோ, இந்த நிகழ்ச்சி தொடர்ந்து கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என்றும் அம்மாவின் மனதில் பட்டிருக்கும்.

எனக்கும் அவர் என்னுடைய படத்தைக் கேட்டது ஒரு புதிய பிரச்சினையாகவே மனதில் பட்டது. பல கோணங்களில் அதை யோசித்துக் கொண்டு படுத்திருந்தேன். விறாந்தை மணிக்கூடு இரண்டு அடித்த பின்பே கண் அயர்ந்தேன்.

அடுத்தநாள் வெள்ளிக்கிழமை, தமிழ்ப் புதுவருடம் சண்முகமணி அதிகாலையிலேயே கோயிலுக்குப் போய் வந்தார். அசுபதி அப்பாவுக்கு மூன்று நாட்களாகக் காய்ச்சல். அத்துடன் இரத்த அழுத்தமும் கொஞ்சம் அதிகமாக இருந்தது. திருநெல்வேலியில் இருந்து ஒரு சித்த வைத்தியர் அப்பாவின் பரியாரி வந்து சில குளிகைகளும் செந்தூரமும் கொடுத்துவிட்டுப் போயிருந்தார். டாக்டர் காசிநாதனும் நேற்று இங்கே வந்த போது அவரைப் பிரிசோதனை செய்திருக்கிறார். கவலைக்கு இடமில்லை. ஆனால், அவருடைய சுகயீனத்தால் புது வருடத்தைக் கொண்டாட வீட்டில் யாரும் யோசிக்கவில்லை. அம்மா மட்டும் வீட்டில் சில பகுதிகளைக் கழுவியும் அடுக்களையை மெழுகியும் சாணி தெளித்திருந்தா.

நான் அடுக்களையில் பிட்டும் பலாப்பழமும் சாப்பிட்டு விட்டு வெளியே வந்தேன். சண்முகமணி சாப்பிட்டு மேஜையோடு இருந்த ஒரு கதிரையில் உட்கார்ந்திருந்து இருந்தார். நான் கையை முற்றத்தில்

இருந்த குடத்துநீரில் கழுவி விட்டு என்னை அறியாமலே விரல்களை மணந்த போது, ''பலாப்பழம் எப்படி?'' என்று கேட்டார் அவர்.

''நல்லாயிருக்கு.''

''எங்கள் வளவுப் பழம்'' என்றார்.

''முற்றத்து மல்லிகைக்கு மணமில்லை என்பார்கள்'' என்றும் கூறினார் அவர்.

''ஆனால், இந்த வளவுப் பலாவுக்கு ருசி இருக்கு''— இப்படிக் கூறிவிட்டு, திரும்பவும் அடுக்களைக்குள் நுழைந்து, ''அம்மா ஏதும் வேலை இருக்கா'' என்று கேட்டேன்.

''இல்லைப் பிள்ளை. காலைப் பாடு முடிஞ்சுது. இனி மத்தியானச் சமையல்தானே; நேரம் இருக்கு'' என்றா அம்மா.

நான் விறாந்தைக்கு வந்த போது, ''உங்களோடு ஒரு விஷயம் பேசவேண்டும்'' என்றார் சண்முகமணி. நான் மற்றக் கதிரையில் உட்கார்ந்தேன்.

''நேற்று சுகாதார வைத்தியர் ஐயா வந்த போது எங்கள் கிராமத்தில் போலியோ தடுப்பு மருந்து கொடுக்கும் இயக்கத்தை ஆரம்பிக்க உதவி கேட்டார். நான் வசதிகள் செய்து தருவதாகக் கூறினேன்'' என்றார் சண்முகமணி. அவர் தொடர்ந்து சொன்னார்:

''பாருங்கோ தங்கச்சியம்மா நீங்கள் இந்தக் கிராமத்திற்கு வந்த 3 மாத காலத்தில்! இங்கே முன்னம் எப்பவுமே இல்லாத ஒரு சுகாதார விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மக்கள் சில தேவைகளைத் தாமே கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள் இந்த மன வளர்ச்சிக்கு பாசக்குள மக்களின் சார்பில் நான் நன்றி தெரிவிக்க வேண்டியவன்.''

அவர் பகிடி பண்ணுகிறாரா என்பதை அறிய அவருடையமுகத்தைப் பார்த்தேன். முகம் மிகவும் சீரியஸ் ஆகத் தான் இருந்தது. வாய் தாம்பூலம் குதப்பியபடி அசைந்தது.

'நேரிலே ஒருவரைப் புகழ்வதை நான் விரும்புவது இல்லை. ஆனால், இந்தச் சொற்ப காலத்தில் தாய்மாரிடையே தமது சுகாதார தேவைகளைப் பற்றி ஏற்பட்டுள்ள சுயசிந்தனை அபரிமிதமானது. காரணம், நீங்கள் அவர்கள் மேல் வைத்திருக்கும் பாசத்தை அவர்கள் உணர்கிறார்கள்.''

நான் மெல்ல எழுந்து கூறினேன். ''சுகாதார சம்பந்தமாக இங்கே செய்வதற்கு மலை போன்ற வேலைகள் உண்டு''.

''ஆனால் ஆரம்பமே வெற்றி.''

''அப்படியா?''

''இந்த வெற்றி சுகாதார நிலையைஇன்னும் உயர்த்துவதற்கு மட்டும் அல்ல; கல்வி, குடிசைக் கைத்தொழில், மின்சார வசதி இப்படியாக வேறு பல துறைகளிலும் முன்னேற உதவி செய்யப்போகிறது.'' அவர் மேலும் கூறினார்:

''முன்னம் ஒரு இயக்கத்துக்குத் தொண்டர் திரட்டுவது இங்கே கஷ்டமான விஷயம். என்னுடைய சொந்தப் பணத்தில் ஏதாவது கொடுத்துத்தான் ஆட்களைக் கூட்டி வருவேன். ஆனால், நேற்று அந்தியில் போலியோ தடுப்புப் பற்றி நான் சனசமூக நிலையத்தில் கூறிய போது பலர் வரத் தயாராக இருந்தார்கள். ஆசைப்பிள்ளை மாஸ்ரரும் குருநாகலில் இருந்து இங்கே மாற்றலாகி வந்து விட்டார். அவர் ஒரு நல்ல சமூக ஊழியர். ''உங்களுடன் ஒத்துழைக்கப் பல பெண் பிள்ளைகள் தயாராக இருப்பதை அறிந்து சந்தோஷப்படுகிறன்.'' சீரியஸ் தன்மை போய் வெடுக்கெனச் சிரித்தபடி கூறினார்: ''எங்களுடைய பெட்டைகளுக்கு நீங்கள் ஒரு ஹீரோயின்.'' வெற்றிலையை வெளியே துப்பியபடி சிரித்தார்.

அம்மா அடுக்களைக் கதவைச் சாத்திவிட்டு விறாந்தைக்கு வந்து தரையில் உட்கார்ந்து, பாக்கு வெட்டத்



99116

தொடங்கினா. செல்வராணி அப்போதுதான் படுக்கையிலிருந்து எழுந்து, கைகளைக் குறுக்காக மடித்து தோள் மூட்டுக்களைப் பிடித்தவாறு, கொல்லைப் பக்கம் போனாள். "இந்தப் பெட்டைக்கு நல்லநாள் பெரிய நாளிலைதான் தொடமாட்டாமல் வருகுது" என்று துக்கப்பட்டா அம்மா. "அதுதானே எவ்வளவு வந்தும் தரித்திரம் போனபாடில்லை."

"கிளியின் மாத சுகயீனத்துக்கும், எங்களுடைய பொருளாதார நிலைக்கும் என்னம்மா தொடர்பு?" என்று சிரித்தபடி கேட்டார் சண்முகமணி. "ஏமமா தரித்திரம் என்று சொல்லுறாய்? கிராமத்தில் மற்றவர்களுடன் ஒப்பிடும் போது நாங்கள் எவ்வளவு சௌகரியமான நிலையில் இருக்கிறோம்."

தொடர்ந்து ஒரு குறும்பு நகைப்புடன் தாயின் பக்கம் முற்றாகத் திரும்பிக் கூறினார்: "அம்மா இந்த வீட்டிலை இப்பதான் லக்ஷ்மி வந்து உலாவுவதை உணர்கிறேன்." அப்படியே எழுந்து தனது அலுவலக அறைக்குப் போய் விட்டார்.

நான் அம்மாவின் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன். அவ கேட்டா: "பிள்ளை, கிளி தொடமாட்டாமல் வந்தால் சரியாய் கஷ்டப்படுகிறாள். மூன்று நாளுக்காவது பனடோல்தான் போட்டுச் சீவிக்கிறாள். இதுக்கு மருந்து இல்லையே?"

"சிலருக்கு இப்படித்தான் அம்மா" என்று பதிலளித்தேன் நான். "ஆனால், கலியாணம் ஆகி, முதலாவது பிள்ளை பிறந்த பிறகு இந்த விதமான நோய் வராது."

"கலியாணமும் பிள்ளையும் தான்; போ" என்றா அம்மா. "அது எந்தக் காலமோ? கையிலை காசு இல்லை. இந்தக் காலத்திலை ஆர் வரப் போறான்?" பெருமூச்சு எறிந்தவாறு அம்மா எழுந்து மாட்டுக் கொட்டில் பக்கம் போனா.

நேற்றுத்தான் கறுப்பி ஒரு குட்டி ஈன்றிருந்தது.

# 13

கிராமத்தில் போலியோ தடுப்பு மருந்து கொடுப்பதற்கு முந்திய நாள் இரவு, யாழ்ப்பாணத்திலிருந்து சுகாதார இலாகாவின் கல்விப் பிரசார வான் வந்தது. பரிசோதகர் இமானுவலின் ஏற்பாட்டின்படி, வீரபத்திரர் கோவிலடியில், போலியோ தடுப்பு, குடும்பக்கட்டுப்பாடு ஆகிய இரு பேசும் படங்களைக் காட்டினார்கள். முதலாவது படவசனம் சிங்களத்திலும், இரண்டாவது படம் ஆங்கிலத்திலும் இருந்ததால் இமானுவல் படங்களைப் பற்றிய விளக்கத்தைத் தமிழில் ஒலிபெருக்கி மூலம் தெரிவித்தார்.

படக்காட்சி முடிவடைந்ததும், அந்த வானில் வந்திருந்த பீயோன் கந்தையா, நானும் செல்வராணியும் சூர்யகலாவும் நின்ற இடத்திற்கு வந்தார். 'தங்கச்சியம்மா, என்ன நல்லாய் மெலிஞ்சு போனாய்' என்று பேச்சை ஆரம்பித்தார். அந்த நேரம் மெல்லிய குளிர் காற்று வீசியதால் தாவணியால் போர்த்துக் கொண்டு தான் நின்றேன்.

''வாற வெள்ளிக்கிழமை செல்வச்சந்நிதி கோவிலிலை என்ரை மருமோன் முறையான ஒரு பெடியனுக்கும், கொக்குவில் மிட் வைஃப் மனோன்மணிக்கும் கலியாணம். கட்டாயம் வாரும்'' என்றார் கந்தையா. அவர் தொடர்ந்து விவரித்தார்— ''நல்ல பொடியன். அரசாங்க வயோதிகர் விடுதியிலை வான் ஓட்டுபவன். நான் தான் சுப்பிரிண்டனைப் பிடிச்சு வேலை எடுத்துக் குடுத்தனான். பெட்டைக்கும் கைதடிக்கு மாற்றம் எடுக்கலாம்: இந்த நாளை விட்டால் இந்த மாசம் வேறு நாளில்லை.'' சுகாதார வான்சாரதி ஹோன் அடித்ததால் 'அப்ப வாறன்' என்று கூறியபடி போனார் கந்தையா.

''ராஸ்கல்'' என்றாள் செல்வராணி.

''கெட்டிக்காரன்'' என்றேன் நான்.

''அக்கா, இவனுடன் பேசும்போதுகூடப் பெண்கள் கருத்தடை மாத்திரை போட்டுக் கொண்டுதான் நிற்க வேண்டும்.''

''உன்னுடைய பகிடி கூடிப் போச்சு'' என்றேன் நான்.

போலியோ தடுப்பு மருந்து இயக்கம் வெற்றிகரமாக முடிந்தது. பராசக்தி சனசமூக நிலையத்திலும், வீரபத்திரர் வாசிகசாலையிலும், பேச்சி அம்மன் கோவிலடியிலும், மருந்து கொடுக்கும் நிலையங்களை அமைத்திருந்தார் இமானுவல். அத்துடன் நானும், சூர்யகலா, செல்வராணி, பவளம்மா முதலியோரும் வீடு வீடாகச் சென்று மருந்துத் துளிகளைக் கொடுத்து வந்தோம். சூர்யகலா எங்களுக்கு உதவியாக, பிரமிளா என்ற தன்னோட்ட வயதான ஒரு பிள்ளையை அழைத்து வந்தாள். அவளை எனக்கு அறிமுகம் செய்ததும், சிரித்தாள். எங்கேயோ அவளை முன்னம் கண்டது போன்ற ஒரு பிரமை மனதில் ஏற்பட்டது. பின்பு நாங்கள் ஒரு வீட்டிற்கு அவளுடன் போன போது, பத்து வயது மதிக்கத்தக்க ஒரு பையன், அவளைப் பார்த்து, 'கே.ஆர். விஜயா' என்று பட்டம் சொல்லி விட்டு ஓடினான். அப்போது விளங்கியது: சந்தேகமில்லாமல் சினிமா நடிகையின் சாயலும் சிரிப்பும் அவளிடம் இருக்கத்தான் செய்தன. ஆனால், எங்கள் பிரமிளாவின் சொக்க வைக்கும் செவ்வந்தி நிறம் விஜயாவுக்கு உண்டோ, என்னவோ?

போலியோ துளிகளை பாசக்குளத்தில் கொடுக்க வேண்டிய வயதுப் பிள்ளைகள் 90 சத விகிதத்தினருக்குக் கொடுத்து விட்டோம். சனசமூக நிலையத்தில், நாங்கள் இளைப்பாறிய போது, சூர்யகலா மிக்க மனவருத்தத்துடன் கூறினாள்:— ''அக்கா, இப்படியான ஒரு இயக்கம் மூன்று வருடங்களுக்கு முன் நடந்திருந்தால் என்ரை அம்மா காலை நேரங்களில் அழவேண்டியிருக்காது.

சூர்யகலாவுக்கு இரு தம்பிமார் இரணைப் பிள்ளைகள். இருவருக்கும் போலியோ வந்ததாம். ஒருவன் இறந்து போனான் மற்றவன் ஒரு காலை இழுத்து நடக்கிறான். கலா சொன்னாள்: ''அக்கா அந்தமுறை ஆறுவீடுகளில் போலியோ வந்தது. எங்கள் வீட்டிலை தான் யமனும் வந்து சேர்ந்தான்'' அவள் கண்கள் பனித்தன. ''அக்கா, அம்மாவுக்கு அது இரண்டாவது சோதனை'' என்றாள் கலா. ''அதற்கு ஒரு வருடத்திற்கு முன் என்ரை மூன்று அண்ணன் மாரில் நடு அண்ணை ஏற்பு வலி வந்து செத்துப் போனார். பனம் பாத்தி வெட்டும்போது, காலில் மண்வெட்டி வெட்டியது. ஆஸ்பத்திரிக்கு உடனே போனவர். ஆனால், அங்கு காயத்திற்கு மருந்து கட்டினார்களே தவிர ஏற்புத் தடுப்பு ஊசி போடவில்லை.'' கலா கேட்டாள்: ''அக்கா எங்கள் வீட்டில் ஏற்பட்ட இந்தச் சாவுகள் இரண்டும் தவிர்த்திருக்கக் கூடிய மரணங்கள் தானே?''

* * * * * *

மேலும் ஐந்து மாத காலம் திருப்தியாகக் கழிந்தது. செல்வராணியும், சூர்யகலாவும் எனக்குக் கிளினிக்கில் தவறாது உதவி செய்தார்கள். சூர்யகலா என்னுடன் வீட்டு உலாவின் போதும் வந்து, கிராம மக்களுக்குச் சுகாதாரப் புத்திமதிகளைக் கூறுவதில் பங்குபற்றினாள். ஆரம்பத்தில் என்னிடம் இருந்து சுகாதார உண்மைகளை அறிந்தவள் இப்போது தான் கற்றதை நன்கு விளங்கக் கூடிய முறையில் தாய்மாருக்கு எடுத்துரைத்தாள். அவளுக்கு இயற்கையாகவே பேசும் ஆற்றல் இருந்தது. அவள், டாக்டர் காசிநாதனின் ஆலோசனைப்படி ஆனைப் பிள்ளை மாஸ்டரின் உதவியுடன் வீட்டிலிருந்து பரீட்சைக்குப் படித்தாள். வரும் வருடம் பொதுத் தராதரப் பரீட்சையில் மிக இலகுவாகச் சித்தியடைவாள் என்று மாஸ்டர் கூறினார்.

கிளினிக்குக்கு அதிகமாகத் தாய்மாரும் பிள்ளைகளும் வரத் தொடங்கினார்கள். அவர்கள் ஒழுங்காக வருவதன்

விளைவை நன்கு அவதானிக்க முடிந்தது. முன்பு சர்வசாதாரணமாக நாம் கண்ட கண் வெள்ளைப் புள்ளிகள், கடவாய் புண், உலர்ந்த தோல் ஆகியன இப்போது அபூர்வமாகக் காணப்பட்டன கிளினிக்கில் போதியளவு மீன் எண்ணெயும் வைட்டமின் பி குளிகைகளும் பிள்ளைகளுக்குக் கிடைத்தன. தங்கள் குழந்தைகளின் சுகநிலை அபிவிருத்தி, இவற்றின் விளைவு என்பதைத் தாய்மார் புரிந்து கொண்டனர்.

சென்ற மாதம் நடந்த சுகாதார ஊழியர் மாதாந்தக் கூட்டத்தில் டாக்டர் காசிநாதன் கூறினார்:

''சுற்றாடல் சுகாதாரம் ஒரு நாட்டின் நாகரிக நிலையின் எடுத்துக் காட்டு. சுற்றாடல் சீரடையாவிடில், நாம் நோய்களைத் தீர்க்கக் கொடுக்கும் சிகிச்சை வெறும் பண விரயமே'' பாசக்குளத்தை ஓர் உதாரணமாக எடுத்து அவர் காட்டினார். ''பாசக்குளத்தில் தாய்—சேய் சுகநலம் நல்ல முறையில் முன்னேறத் தகுந்தநடவடிக்கை எடுத்துள்ளோம். ஆனால், அங்கே மலகூடங்கள் கட்டுவது பின் தங்கி உள்ளது. குடிநீருக்கு மக்கள் பாழடைந்த பங்குக் கிணறுகளையே நம்பி இருக்கிறார்கள். இந்த நிலையில் மக்களின் சுகநிலை பாதிக்கப்படுவதற்கு எல்லாச் சந்தர்ப்பங்களும் உண்டு. சுகாதார பரிசோதகர் இதில் அதிக கவனம் எடுக்க வேண்டும்.''

அன்று கூட்டம் முடிந்ததும், பரிசோதகர் இமானுவல், சண்முகமணியைக் காண்பதற்கு எங்கள் வீட்டிற்கு வந்தார். அவர் மிகவும் சோர்வுற்று இருந்தார். கூட்டத்திலே சுகாதார வைத்தியர் பாசக்குளத்தின் சுற்றாடல் சீர்கேட்டைப் பற்றிக் கூறியதை எடுத்துச் சொன்னார். சண்முகமணி அவர் கூறியவற்றை அனுதாபத்துடன் கேட்டுவிட்டுச் சொன்னார்:

''பாசக்குளத்தில் பெரும்பாலான குடிசைகள் இரண்டு மூன்றாக ஒவ்வொரு வளவிலும் இருக்கின்றன.

ஆகையால் ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்தனியே மலகூடம் கட்டுவது சாத்தியமில்லை. கட்டக் கூடிய வீடுகளைப் பார்வையிட்டு உடனடியாக அவர்களைக் கட்டும்படி வற்புறுத்துவோம். மற்ற வீடுகளில் உள்ளவர்களுக்குப் பொது மலகூடங்களைக் கட்டுவதே ஒரே வழி.'' சிறிது நேரம் யோசித்து விட்டுக் கூறினார்:

''எனக்குத் தெரியும், சனசமூக நிலைய அங்கத்தவரும், வாசிகசாலையைச் சேர்ந்தவரும் ஒருவரோடு ஒருவர் இடத்துக்குப் போட்டி போட்டிருக்காவிடில், ஒரு பொது மல கூடமாவது இது வரை கட்டப்பட்டிருக்கும். இவர்கள் வெவ்வேறு அரசியல் கட்சிகளை ஆதரிப்பவர்கள் என்பது உண்மை. ஆனால், மக்களுக்கு நன்மை தரக்கூடிய ஒரு முயற்சியை இவர்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்பது தான் தெரியவில்லை...... எல்லாம் சுயநலமும், சுயவிளம்பரமும்.''

இமானுவல் ஐயாவுக்கு மூச்சு எறிந்தது.

சண்முகமணி நிதானமாகப் பேசினார்: ''கிராம மக்களிடையே ஒற்றுமையை நாம் முதலில் ஏற்படுத்த வேண்டும். இந்த இரு பகுதிகளையும் ஒன்று சேர்த்து உண்மை நிலையை உணர்த்துவது எங்கள் கடமை. அதற்குக் காலம் வந்து விட்டது. அது செய்யாவிடில், பொது மலகூடம் மட்டுமல்ல, வேறு எந்த முன்னேற்ற முயற்சியும் இந்தக் கிராமத்தில் கைகூடாது. நெசவுத் தொழிற்சாலை, மகா வித்தியாலயம், கூட்டுறவுச் சங்கங்கள் இவைகூட இந்தப் பிரிவினாலும் போட்டியாலும் பின்போடப்பட்டு வருகின்றன.''

''சீ! சுத்த மோசமான வெட்கக்கேடான நிலை'' என்றார் இமானுவல். அவர் கேட்டார்:

''சேர், எங்கள் மக்களுக்கு எப்ப புத்தி பிறக்கும்?''

''தெரியாது'' என்பதைக் குறிப்பது போல் கையை விரித்தார் சண்முகமணி.

# 14

அந்திப் பொழுதில் சண்முகமணிக்கும். இமானு வலுக்கும் இடையே நடந்த சம்பாஷணையை நினைத்த படி படுத்திருந்தேன். பாசக்குள மக்கள், பொதுமலகூடம், இலங்கையில் தமிழ் மக்கள், எமது பிரச்சனைகள்; இப்படி யாக இடையிடையே எனது மலைநாட்டுத் தமிழ் மக்க ளின் பரிதாப நிலையும் ஞாபகம் வந்தது; பெருந்துக்கமாக இருந்தது.

அத்துடன், ஆலமரத்தடிக் கலியாண விளையாட்டின் போது பல்லிமுட்டை இனிப்புக்குச் சண்டை போட்ட வர்களும், ஒல்லியான மனிதரிடம் கன்னத்தில் அடிவாங் கிய அப்பாவிப் பையனும், இனிப்புக்காகச் சிறிது நேரம் மரத்தின் பின்னால் நின்று கை நீட்டிய மணப்பெண்ணும் ஞாபகம் வந்தார்கள்; வாய்விட்டுச் சிரித்தேன்.

''கனாக் கண்டியா அக்கா?'' என்று கேட்டாள் செல்வராணி. கனாக்கண்டதுபோல் பேசாமல் படுத்திருந் தேன்.

அடுத்தநாள், காலைச் சாப்பாட்டிற்கு மேசையில் ரொட்டியும் வாழைப்பழமும் வைக்கப்பட்டிருந்தன. காலைச் சாப்பாடு என்றால் பிட்டு, இடியப்பம், தோசை இவற்றுடன் பழைய மீன் குழம்பு, சொதி, முட்டைப் பொரியல், கத்தரிப் பொரியல், பலாப்பழம், பச்சடி, பனங்கட்டி இந்த வகையில் இருக்கும். எப்போதாவது இட்லி, உப்புமா இருக்கும். அம்மாவுக்கு நெஞ்சுத் தடிமனும், காய்ச்சலும் இருந்தால்தான் ரொட்டி.

அம்மா அடுக்களையில் பால் காய்ச்சிக்கொண்டி ருந்தா. நான் முற்றத்தில் வாய் கொப்பளித்தேன். அம்மா

நல்லூர் இரா நூலகம்
யாழ்ப்பாணம்

அடுக்களையில் இருந்தபடியே கேட்டா— "இண்டைக்கு நல்ல சாப்பாடு இல்லைப் போலை?"

உண்மைதான். இப்போது எனக்குக் காலையில் ரொட்டி பிடிப்பதில்லை. ஒரு சிறு துண்டு ரொட்டியும், ஒரு வாழைப்பழமும் சாப்பிட்டிருந்தேன்.

"பிள்ளை, இந்தாரும்" என்று அழைத்தா அம்மா.

நான் அடுக்களைக்குள் நுழைந்தேன்.

"இரும்" என்றா. சுடச்சுட ஒரு மூக்குப் பேணி நிரம்பப் பால் தந்தா.

"ஏனம்மா பால்?"

"இருக்கு குடி" என்றா அவ. "நீயும் கிளி போலை தான்; ரொட்டி என்றால் இறங்காது."

எனக்குச் சிரிப்பு வந்தது, என்னுடைய உணவு விருப் பத்தின் மாற்றத்தை நினைத்தபோது.

"தோட்டத்தில் காலை என்ன, எத்தனையோ நாட்கள் மத்தியானம் இரவு எல்லாம் ரொட்டியும், தேத் தண்ணியும் தானே அம்மா எங்கள் சாப்பாடு."

"அது அங்கே. இப்ப இதுதானே உனக்கு ஊரும் வீடும்...!"

எனது ஊரும் வீடும்!

"என்ன யோசிக்கிறாய்? சீனி காணாதா?"

"போதும்" என்பதைத் தலையசைத்துத் தெரிவித் தேன்.

அம்மா மெதுவாகச் சொன்னா: "பிள்ளை, எனக்கு இரண்டு நாளைக்கு முந்தி ஒரு சங்கதி நடந்திட்டுது."

"என்னம்மா?"

"எனக்குப் பழையபடி படுகுது."

சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு அம்மா தொடர்ந்து கூறினா: "முந்தாநாள் பாவாடையிலை கொஞ்சம் பட்டுது. சூடு எண்டு வெந்தயம் நனைய வைச்சுக் குடிச்சன். நேற்று அவ்வளவு இல்லை. ராத்திரி நல்லாய்ப் பட்டிருக்கு."

"மூல வியாதியாக இருக்குமோ?" என்று வினவினேன்.

"இல்லை மற்றதுதான். பதின்மூன்று வருஷம் அது எனக்கு நின்று, இப்ப இந்தக் கலியுகத்திலை, கிழட்டு வயதிலை பழையபடி வந்திருக்கு."

எனக்கு கருப்பை கான்சர் தான் ஞாபகத்தில் வந்து, பால் தொண்டையில் அடைத்தது.

"பிள்ளை, கொஞ்சம் விற்றமின் குளிசை கொண்டு வா, போட்டுப் பார்ப்பம்."

அசுபதி அப்பாவுக்கு திருநெல்வேலிப் பரியாரியின் குடிநீர் அடுப்பில் வெந்துகொண்டிருந்தது. எரிந்து கொண்டிருந்த தென்னம்பாளைகளைச் சரிப்படுத்திவிட்டு அம்மா கூறினா: "நீ யோசிக்காதே எனக்கு நோ ஒன்றும் இல்லை. இது நின்றுவிடும். எனக்கு ஏழரைச் சனி கடைக்கூறு."

இரு நாட்களில் பாசக்குளத்தில் கிளினிக் நாள். அன்று அம்மாவை அழைத்துச் சென்று டாக்டர் காசிநாதனிடம் காட்டுவதென்று தீர்மானித்தேன். ஆனால் அதை நான் அம்மாவுக்குக் கூறியபோது, "பிள்ளைத்தாச்சியள் வாற இடத்துக்கு என்னைக் கொண்டுபோய்க் கூத்து ஆடாதே" என்று சொன்னா. "நான் இன்றுவரை ஒரு கிளினிக்குக்கோ, ஆஸ்பத்திரிக்கோ போகவில்லை. தம்பியும், கிளியும் பிறந்தது வீட்டிலைதான். தம்பிக்கு முன்னம் ஒரு பொடியன் பிறந்து துடக்கு வீட்டிலை செத்தது. அதுக்கு முன்னம் இரண்டு முறை வயிறு அழிஞ்சது எல்லாம் வீட்டிலைதான். ஊர்க் கிழவிதான் எல்லாம் பார்த்தது."

செல்வராணி கொல்லைப்புறமாகப் போய்க்கொண்டிருந்தாள்.

"கணக்குப் போட்டால் இவள் ஐஞ்சாவது" என்றா அம்மா.

நான் தொடர்ந்து அம்மாவுடன் அதிகம் பேசவில்லை. அன்று கோப்பாய் ஆஸ்பத்திரிக்குப் போய், அம்மாவைத்

திருப்திப்படுத்துவதற்காக கல்சியம் கலவையும், மல்றிவைட் குளிசைகள் முப்பதும் கொண்டுவந்து கொடுத்தேன். சண் முகமணிக்கும், செல்வராணிக்கும் அம்மாவின் சுகவீனத் தைப் பற்றிக் கூறி, கிளினிக்கில் அம்மாவைச் சோதிப்பிக்க வேண்டும் என்று கூறினேன். அவர்களுடைய முகங்களில் இருள் படர்ந்தது. கான்சர் என்ற சொல்லின் கோர அர்த்தம் அப்படி!

சண்முகமணி அடுத்த நாளே காலையில் வாடகைக் கார் கொண்டுவந்தார். யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக் குப் போக ஏற்பாடு. அப்போது அசுபதி அப்பாவுக்குச் சவரம் செய்யும் சுந்தரம் வந்தார். வீட்டிற்கு முன்னால் தெய்வேந்திரராசாவின் கார் நிற்கும் காரணத்தை ராணி யிடம் கேட்டு அறிந்துகொண்டார். அம்மா, ஆஸ்பத்திரிக் குப் போவதற்கு மண்ணிறப் பூக்கரை போட்ட ஒரு வெள்ளைச் சேலையைக் கட்டியிருந்தா. அவளைச் கண்டதும் சுந்தரம் கேட்டார்:

''அசுபதி அப்பா, இவ்வளவு காலமும் இழுத்துப் போட்டார். அவருக்கு முந்தி நீதான் போகப்போறாய் போலை கிடக்கு.''

''உத்தரிக்காமல் போட்டால் நல்லது'' என்றா அம்மா.

''எல்லாரும்தானே போறது. ஆஸ்பத்திரிக்குப் போகும்போது உது என்ன கதை?'' என்று கண்டிப்புடன் கேட்டார் சண்முகமணி.

ராணி அப்பாவுடன் வீட்டில் நின்றாள். அம்மாவும், சண்முகமணியும் காரில் ஏறிவிட்டார்கள். நான் போகும் வழியிலே சுகாதாரக் கந்தோரில் கொடுப்பதற்கு மூன்று நாட்கள் லீவு கோரி மனுப்பத்திரம் எழுதிக் கொண்டிருந்த தால் போகப் பிந்திவிட்டது. தெய்வேந்திரராசா கார் ஹோன் அடித்து அவதிப்படுத்தினார். நான் காரில் ஏறப் போனபோது செல்வராணி பேய் அறைந்த முகத்துடன் அவசரமாக வந்து என்னிடம் மெல்லக் கேட்டாள்:

''அக்கா, இட துகையிலை பல்லி விழுந்தால் என்ன?''

நான் பதில் கொடுக்காமல் காரில் ஏறினேன்.

''கிளி என்னவாம்?'' என்று கேட்டா அம்மா.

''ஒன்றும் இல்லை அம்மா.''

''என்ன விழுந்ததாம்?''

''கோப்பிப் பேணி.''

அம்மா சொன்னா: ''எந்த அவதியிலும், சுந்தரத்துக்கு கோப்பியும், வெத்திலையும் வைக்கவேணும். இப்ப ஒழுங்காக வாறதும் இல்லை.''

''இடியற்'' என்றார் சண்முகமணி.

ஆஸ்பத்திரிக்குப் போகும் வழியில் டாக்டர் காசிநாதனிடம், ஆஸ்பத்திரிப் பெண்நோய் நிபுணருக்கு ஒரு சிபார்சுக் கடிதம் வாங்கினார் சண்முகமணி. அதனால் பெண் நோய் கிளினிக்கில் நிபுணரைப் பார்ப்பது சுலபமாக இருந்தது. என்னையும் சண்முகமணி மருத்துவமாது என்று அறிமுகம் செய்ததால், அம்மாவைப் பரிசோதிக்கும்போது தன்னுடன் நிற்க அனுமதி தந்தார் நிபுணர். கைகளில் ரப்பர் உறை போட்டு யோனி மூலம் சோதனை செய்தபின் தனது வலது சுட்டு விரலில் இரத்தம் இருப்பதை எனக்குக் காட்டினார் நிபுணர்.

அம்மாவைப் பாசோதனைக் கட்டிலிலிருந்து இறக்கி ஒரு கதிரையில் உட்கார வைத்தேன். டாக்டர் கை கழுவும் போது அவர் அருகில் போய் நின்றேன். என்னைப் பார்த்து, ''கருப்பைக் கான்சர் — புற்று நோய்'' என்றார். தனது நெற்றியைச் சுருக்கி அதிலே கோடுகள் விழ, எனது முகத்தைப் பார்த்தபடி விளக்கினார்: ''என்ன அசந்து போனீர்? இது ஆரம்ப நிலை. நீர் மிட்வைஃப்; உமக்குத் தெரியும் ஒப்பரேஷன் அல்லது ரேடியம் சிகிச்சை மூலம் இதனை முற்றாக மாற்றமுடியும். இப்போது நீங்கள் வந்தது மிகவும் நல்லது. இந்த அம்மாவுக்கு ஒப்பரேஷன் செய்வோம். இன்று ஆஸ்பத்திரியில் அனுமதிப்போம், இந்தக் கிழமையே ஒப்பரேஷன் செய்யலாம்.''

''அம்மா, பயப்பட வேண்டாம்'' என்று டாக்டர் அம்மாவின் தோளில் தட்டிக்கொடுத்தார். அவளின் முகத்தில் ஒரு நம்பிக்கை மலர்ச்சி தோன்றியது.

டாக்டர் சண்முக மணியையும் அழைத்து எல்லா விவரமும் தெரிவித்தார். உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்க சண்முகமணி விருப்பம் தெரிவித்தார்.

''ஒப்பரேஷன் போது அம்மாவுக்கு இரத்தம் தேவைப்படும்' 'என்றார் டாக்டர்.

''கொடுக்கலாம்'' என்று பதிலளித்தார் சண்முகமணி. அவர் டிக்கெட்டில் நம்பர் போடுவதற்கு ஆஸ்பத்திரிக் கந்தோருக்குப் போனார். அத்துடன் இரத்த வங்கியில் இரத்தம் கொடுக்கும் விஷயமாகப் பேசி வருவதாகவும் கூறினார். நானும் அம்மாவும் கிளினிக் விறாந்தையில் ஒரு வாங்கில் உட்கார்ந்தோம்.

அப்போது, ''நீ தெய்வி இல்லே?'' என்று அம்மா ஒத்த வயதுள்ள ஒரு பெண் அம்மாவைக் கேட்டா. மெல்ல எழுந்து கை கூப்பி 'ஓம்' என்றா அம்மா. அப்போதுதான் அம்மாவின் பெயர் தெய்வானைப்பிள்ளை என்று ராணி எப்போதோ கூறினது எனக்கு ஞாபகம் வந்தது.

''உன்னை மட்டுக்கட்ட முடியவில்லை'' என்றா மற்றவ.

''தெரியாதே, வயது போட்டுது.''

''இப்பதாண்டி நல்லாய் இருக்கிறாய்.'' இந்தப் பேச்சைக் கேட்டு நான் திடுக்குற்றேன்.

அந்தக் கிழவி மேலும் அம்மாவைக் கேட்டா: ''அசுபதியன் இருக்கிறானா, செத்திட்டானோ''

அம்மா வாய் திறப்பதற்கு முன், நான் அந்தக் கிழவிக்குக் கூறினேன்: ''இந்தா அம்மா, அவன் இவன், எடிபிடி என்ற பேச்சுப் பேசப்படாது. இந்த வயதிலும் மற்றவர்களோடு மரியாதையாகப் பேச உங்களுக்குத் தெரியவில்லை. எங்களைக் கரைச்சல் பண்ண வேண்டாம்.''

நான் இப்படிப் பேசுவேன் என்று அவ எதிர்பார்க்க வில்லைப் போலும். முகம் அப்படியே விகாரமான முகமூடி போல ஆனது. அங்கே நின்றவர்களும், இருந்தவர்களும் எங்களைத் திரும்பிப் பார்த்தனர். 'ம்ம்ம்ம்' என்ற ஒரு தொனியுடன் குனிந்தவாறு அந்தக் கிழவி எங்களை விட்டுச் சிறிது தூரம் போய் நின்றா.

சில நிமிடங்களில் ஒரு கிழவன், அவர் வழுக்கைத் தலையை வெண் திருநீறும், பின்னால் பிறை சூடியது போல் வெண்மயிரும் அலங்கரிக்க, ஒரு ஈ. எல். நம்பர் ஒஸ்டின் காரைப் பத்திரமாக ஓட்டி வந்து அவ்விடத்தில் நிறுத்தினார். கிழவி அதில் ஏறினா. அந்தக் கிழவனின் முகம் எனது பழைய ஞாபகத்திலிருந்து வெளிவர மனத்தை முட்டியது.

''இவர்கள் யார் அம்மா?'' என்று கேட்டேன் நான்.

அம்மா அவரை ஒரு டாக்டர் என்று அறிமுகப்படுத்தி சில விவரங்களைக் கூறினா. நான் அவரை இனங்கண்டு கொண்டேன். அவர் எங்கள் தேயிலைத் தோட்டத்தின் பழைய டிஸ்பென்சர்.

சில காலம் அசுபதி அப்பா தனது குடும்பத்துடன் பருத்தித்துறையில் சீவித்து இருக்கிறார். அப்போது இந்த டாக்டரின் தோட்டத் துரவுகளை அசுபதி அப்பாதான் தனது சொந்த வேலைகளுடன் பராமரித்து வந்தார். மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்து கலக்கின இந்த டாக்டர், அங்கே நோயாளிகளிடம் 25 சதமும் 50 சதமும் வாங்கியதால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். பின்பு தான் மலைநாடு வந்து எங்கள் தோட்டத்தில் டிஸ்பென் சராக வேலை ஏற்றிருக்கிறார்.

''இவர் உண்மையான டாக்டர் இல்லை அம்மா'' என்று கூறினேன் நான். அதைத் தொடர்ந்து அவர் மக்களுடன் பழகிய விதத்தையும், காட்டிய அதிகாரத்தையும், அசிரத்தையையும் எனது தாயின் அகால மரணத்திற்கு ஓரளவு காரணமாக இருந்ததையும் சுருக்கமாகச் சொன்னேன்.

"அம்மா, தோட்டத்தில் வேலை பார்த்த இந்த டிஸ்பென்சரும், டீ மேக்கர் ஐயாவும் எங்களை நையாண்டி செய்வார்கள். எனக்கு இதனால் யாழ்ப்பாணத்தவர் என்றால் ஒருவித வெறுப்பு என்றேன். ஆனால், இப்போதுதான் தெரிகிறது, இவர்கள் ஒரு வர்க்க மனிதரென்று. இவர்கள் இங்கேயே செய்யும் அக்கிரமம் எவ்வளவு? அந்தக் கிழவி, கண்ணியமான வாழ்வு வாழும் உங்களை அழைத்துப் பேசிய விதம் எப்படி? மனிதரிலே மனித தெய்வங்கள் இருப்பதுபோல், இப்படியான மனித மிருகங்களும் இருக்குதம்மா."

அம்மா கீழே பார்த்து யோசித்தபடி இருந்தா. அவ என்னுடைய குட்டி விரிவுரையைக் கேட்டாவோ இல்லையோ சந்தேகம்தான். அவவுக்கு ஆஸ்பத்திரி அனுபவம் புதியது. அத்துடன் கான்சர் ஒப்பரேசன் பற்றிய சிந்தனை. வீட்டுக் கவலை வேறு. நான் தொடர்ந்து பேசவில்லை.

சூர்யகலாவுடன் சேர்ந்த பழக்கத்தினால் நானும் இப்போது அதிகம் பேசப் பழகிவிட்டேன்.

அம்மாவை வார்ட்டில் நிறுத்தி, நானும் அவவுடன் நின்றேன். அம்மாவுக்கும், எனக்கும் மதிய உணவுக்கு சாப்பாட்டுப் பார்சல் கொண்டு வந்து தந்தார் சண்முகமணி. அவர் வீட்டிற்குத் திரும்புவதற்கு முன், அம்மா 'தம்பி' என்று அழைத்தா. ஏதோ சில வார்த்தைகளை இரகசியமாகக் கூறினா. 'குமர்ப்பிள்ளை' என்ற ஒரு சொல் மட்டும் எனக்குக் கேட்டது.

# 15

நாங்கள் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குப் போயிருந்த போது, செல்வராணி வீட்டில் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்துடன் இருந்தாள் பதட்டத்துடன். அன்று அந்தியில், ஆஸ்பத்திரியில் தங்குவதற்குச் சண்முகமணி யுடன் அவள் வந்தாள். என்னை ஆஸ்பத்திரி வார்ட்டின் விறாந்தைக்கு அழைத்து வந்து, ''அக்கா, இடது கையில் பல்லி விழுந்தால் மரணம் என்று பஞ்சாங்கத்தில் போடப் பட்டிருக்கிறது'' என்றாள்.

எனக்கு இதைக் குறித்து என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவள் தொடர்ந்து கூறினாள்: ''நான் இன்று முழுவதும் இதைப் பற்றி யோசித்தேன். அம்மா வைப்பற்றி யோசித்தபோது, ஆகாயத்தில் ஒரு பல்லி சொல்லிச்சு. அதற்குப் பயன்-கீர்த்தி-என்று பஞ்சாங்கம் காட்டுகிறது.''

மரணமா, கீர்த்தியா என்பதை நிரூபிக்க, அவள், ஆரூட சக்கரத்திலே, கண்களை மூடித் தொட்டுப் பார்த் திருக்கிறாள். அது 'புத்திரோற்பத்தி' என்று காட்டிய தாம். இன்னும் ஒருதரம், அம்மாவின் ஒப்பரேஷனை மனத்தில் நினைத்து, கண்கள் மூடித் தொட்டிருக்கிறாள் 'இராஜபயம்.' என்று காட்டியதாம்.

ராணி கேட்டாள். ''அக்கா, இதில் எது சரி?''

எனக்குப் பஞ்சாங்கம் கூறும் பலவிதமான பலன்களில் நம்பிக்கை உண்டா, இல்லையா என்ற தீர்மானத்திற்கு நானே வரவில்லை. ஆகையால் நம்பிக்கையாக அறிந்த விஷயத்தை வைத்து அவளுக்குப் பதிலளித்தேன்.

"ராணி, டாக்டர் கூறுவதுதான் சரி, அம்மாவின் கருப்பைப் புற்றுநோய் ஆரப்ப நிலையில் இருப்பதாக அவர் கூறுகிறார். உடனடியாக ஒப்பரேஷன் செய்தால் நல்ல சுகம் வருமாம். ஆனபடியால் பயப்பட வேண்டாம்."

* * *

ஒப்பரேஷன் செய்து, கருப்பையை நீக்கிவிட்ட பின்பும் நிபுணர், கான்சர் ஆரம்ப நிலையில்தான் இருந்தது என்றும், அக்கம் பக்கம் கான்சர் பரவவில்லை என்றும் திடப்படுத்தினார் சண்முகமணி இதைக் கேட்டதும் மிகவும் சந்தோஷப் பட்டார். அவர் கூறினார்:

"ராசாத்தி, எனது தாயின் ஆயுளைக் காப்பாற்றி விட்டீர்கள். நீங்கள் எங்களுடன் இருந்திராவிடில், அம்மா கை மருந்துகளை உபயோகித்து, நோய் முற்றின நிலையிலேதான் அதை வெளியே சொல்லியிருப்பா. மலைநாட்டிற்கும், பாசக்குளத்திற்கும் பலவிதங்களில் தொடர்பு இருப்பதாக கூறுவீர்கள். உண்மை. அதிலும் எனது குடும்பத்தோடுதான் அதிக தொடர்பு உண்டு. இன்று அம்மாவுக்கு ஏற்றின இரத்தமும் மலைநாட்டு இரத்தம்தான்."

அவருடைய இந்தப் பேச்சில், நான் இதற்கு முன் அவரிடம் அவதானிக்காத உணர்ச்சி இருந்தது; நானும் சிறிது நேரம் அவருடைய மனப்பூரிப்பினால் மந்திரிக்கப் பட்டேன். சண்முகமணி என்னை அழைப்பது அபூர்வம்; கிட்டவந்து மொட்டையாகப் பேச்சுத் தொடங்குவார். ஒரு சில வேளைகளில் 'தங்கச்சியம்மா' என்று பெயர் சொல்லி அழைத்திருப்பார்.

தங்கச்சி—என்று என்னை அழைக்க மாட்டாரா என்று சில வேளைகளில் அன்பின் உரிமையில், நான் நினைத்ததுண்டு. இன்று, ராசாத்தி—என்று என்னை அழைத்தார். எனது தலையிலே ஒரு மகுடம் வைத்துள்ளார். அதன் பாரம் எனக்கல்லவா தெரியும்!

அம்மா மயக்க மருந்தின் ஆதிக்கத்திலிருந்து விடை பெற்று, கண்களைத் திறந்து அனுங்கும்போது, 'எப்படி அம்மா?' என்று கேட்டேன். 'நோகுது' என்றா. வார்ட் டாக்டர், அவவைச் சோதித்து விட்டு 'ஃபைன்' என்றார். 'நாடி நன்றாக இருக்கிறது. இரண்டொரு நாள் நோ இருக்கும் அம்மா' என்றார்.

நான் அன்று இரவும் அம்மாவுடன் ஆஸ்பத்திரியில் தங்குவதாக சண்முகமணியிடம் கூறினேன். "இல்லை; கிளி இங்கே நிற்கட்டும். வீட்டில் அப்பாவுக்குப் பழைய படி வயிறு ஊதி விட்டது. நீங்கள் அங்கே நின்றால் உதவி" என்றார். அம்மாவும் எனது கையை மெல்லப் பிடித்து ஏதோ சொன்னா: "என்னம்மா?" என்று குனிந்தவாறு கேட்டேன். 'போ பிள்ளை' என்றா அம்மா.

மற்ற நாட்களில் பஸ்ஸில் போகும்போது, என்னுடன் சண்முகமணி பேசமாட்டார்; ஏதாவது ஒரு சஞ்சிகையைப் படித்துக் கொண்டு இருப்பார். இன்றும் புத்தகக் கடையில் அவர் - சஞ்சிகை ஒன்றை வாங்கினார்; ஆனால், அதைப் படிக்காமல், என்னுடன் பல விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தார்-மலையப்ப தலைவர், ஆச்சிக் குட்டி, பெத்தாச்சி; அன்பு, தியாகம், களவு, உளவு—பேசுவதற்கும் அதிகம் இருந்தன.

இரு நாட்களுக்கு முன், இரத்த வங்கியில், சண்முக மணியின் இரத்தத்தைச் சோதித்த போது, அது அம்மாவின் இரத்தத்தோடு பொருந்தவில்லை. நல்ல வேளையாக அந்த நேரம், எங்கள் தேயிலைத் தோட்டத் தலைவர் மலையப்பன் இரத்த தானம் செய்ய வந்திருக்கிறார்.

அவருடைய இரத்தம் எல்லோருக்கும் கொடுக்கத்தக்க ஓ-இரத்த வகையைச் சேர்ந்தது. தலைவருடைய இரத்தம் தான் அம்மாவுக்கு ஏற்றப்பட்டது. சண்முகமணி கூறினார்: "உங்கள் தலைவர் ஓர் அற்புதமான மனிதர். அவர் யாழ்ப்பாணம் வரும்போதெல்லாம், ஆஸ்பத்திரியில்

இரத்த தானம் செய்திருக்கிறார். உங்கள் அண்ணை, வீட்டிற்கு வந்த போது அவரைப் பற்றிக் கூறினார். இரத்த வங்கியிலே தான் நேரில் கண்டேன்.''

எனக்கு இதைக் கேட்கப் பெருமையாக இருந்தது. மலையப்ப தலைவர், எங்கள் நன்மைக்காக எவ்வளவோ தியாகங்கள் செய்தவர்; நாளும் பொழுதும் எங்களைப் பற்றியே சிந்திப்பவர். சண்முகமணி கேட்டார்: ''மலையப்ப தலைவர் குடும்பஸ்தனா''

''அவருக்கென்று வீடும் இல்லை, தனிப்பட்ட குடும்பமும் இல்லை. என்னைப் போன்ற மலைநாட்டு மக்கள் அனைவரையும் அவர் தனது குடும்பத்தில் ஒருவராகக் கருதுவார்.''

பஸ் கஷ்டப்பட்டு ஓடிக்கொண்டிருந்தது. விக்கல், குலுக்கல், மடக்கல் இப்படியாக. நான் யோசித்துக் கொண்டிருந்தேன். எனது மனத்திலே மலையப்ப தலைவர். சண்முகமணியும் அவரைப் பற்றித்தான் சிந்தித்தார் போல் தோன்றுகிறது.

''இப்படியான ஒரு மனிதருக்கு, சந்ததி இல்லாமல் போவது துக்கமான விஷயம்'' என்றார் அவர்.

''பத்து வருடங்களுக்கு முன் அவர் ஒரு பெண்ணை விரும்பினாராம். அவள் இறந்து போனாள்'' என்று சொன்னேன் ''அவ்வளவு தான் அவர் காதல் வாழ்க்கை. அதன்பிறகு அவர் யாரையும் கலியாணம் செய்ய வில்லை.''

''அது எப்படி முடியும்!'' என்று கேட்டார் சண்முகமணி. ''மனதார ஒரு பெண்ணை விரும்பி அவள் கிடைக்காவிடில் அந்த வெற்றிடத்தை வேறு ஒருத்தி நிரப்ப முடியாது.''

சில நிமிடங்கள் நாங்கள் ஒன்றுமே பேசவில்லை. அதன் பின்பு அவர் கூறினார்:

''மனிதனின் குணத்தைப் பொறுத்தவரையில் ஓர் எல்லையில் இருப்பவர் மலையப்ப தலைவர்; மற்ற எல்லை

யில் இருப்பவர்களுக்கு நல்ல உதாரணம், எங்கள் வீட்டில் இப்போது இருக்கும் ஆச்சிக்குட்டி.''

நான் சிரித்தேன்.

அம்மா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அன்றே, வீட்டில் துணைக்கென்று ஆச்சிக்குட்டிப் பெத்தாச்சி, ஆவரங்காலில் இருந்து கொண்டு வரப்பட்டா. இது அம்மாவின் கட்டளை.

செல்வராணிக்கு இந்தக் கிழவியைக் கண்ணிலும் காட்டப்படாது. அவள் இரு நாட்களுக்கு முன் எனக்கு முறையிட்டாள்: ''அக்கா, இந்த மனிசி எங்களுக்கு மாமி முறை. அண்ணை அவவுக்கு எவ்வளவோ குடுத்திருக்கிறார். அப்படி இருந்தும் மிளகாய்த் தூளைக் களவு எடுத்து, தான்கொண்டு வந்த பைக்குள்ளை வைச்சிருக்கிறா. அதுதான் போகுது; எவ்வளவுதான் சாப்பாடு போட்டாலும், சனியன், கறிச்சட்டிக்குள்ளை கையை வைச்சுத் தின்னுது. வெட்கக் கேடு!''

சண்முகமணி சொன்னார்: ''கிளி உங்களுக்குப் பொழிப்பாக ஆச்சிக்குட்டியைப் பற்றிச் சொல்லியிருப்பாள். சொந்த மக்களிடையே, அவர்களுக்குக் கஷ்டம் வந்துள்ள நேரத்தில், பொருளை வாரிச் சுருட்டிக் கொண்டு போகும் பேர்வழிதான் ஆச்சிக்குட்டி. இப்படியானவர்கள் அதிகம் பேர் உண்டு.''

''எல்லா இடத்திலும் இருக்கிறார்கள்'' என்றேன் நான்.

என்னிடத்திலும் ஆச்சிக்குட்டிப் பெத்தாச்சி ஒரு சேலை கேட்டா; நான் கொடுக்கவில்லை. ஆனால், ஐந்து ரூபா வாங்கி விட்டா. இதை நான் யாருக்கும் கூறவில்லை. நாங்கள் இறங்குவதற்கு முந்திய பஸ் நிற்கும் இடத்தில் எதிர்பாராத விதமாக, பஞ்சும் நெருப்பும் புகழ் கந்தையா பஸ்ஸில் ஏறினார். எங்களைக் கண்டாரோ என்னவோ, பஸ் முன் ஆசனங்களில் குருமாருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் உட்கார்ந்தார். அவர் பஸ்ஸில் ஏறினது, எதிர்

பாராத ஒரு சம்பவமென்றும் கூறமுடியாது. எது நடக்கக் கூடாது என்று நாம் பிரார்த்திருக்கிறோமோ, அது உடனுக்குடனே நடப்பதை எத்தனை முறை அனுபவித்திருக்கிறோம்! சண்முகமணி எனது காதில் குசுகுசுத்தார். "இப்ப ஏறினது மனிதரில் இன்னும் ஒரு விதம்" என்னுடைய மெல்லிய சிரிப்பு, சண்முகமணியின் முகத்தில் பிரதிபலித்தது.

நாங்கள் வீடு சேரும்போது செக்கர் வானம் கறுத்து வந்தது. ஒழுங்கைகளில் மனித நடமாட்டம் குறைந்து விட்டது. நாய்கள் மட்டும் குரைத்தன. ஆகாயத்தில் ஒரு பட்டத்தின் விண்ணோசை நொய்ங்— என்று கேட்டுக் கொண்டிருந்தது.

எங்கள் வீட்டின் முன்னால், ஓர் ஆட்டுக்கிடாயுடன் ஒருவர் குந்தி இருந்தார். எங்களைக் கண்டதும் எழுந்து, வேட்டியின் சண்டிக்கட்டை அவிழ்த்தவாறு, "வாருங்கோ உங்களைத்தான்" என்றார்.

"என்ன விசேஷம் துரை அண்ணை! ஆருடைய ஆடு?" என்று கேட்டார் சண்முகமணி.

"அதை ஏன் தம்பி; பக்கத்து வீட்டுக்காரராலே, மனிசர் சீவிக்க முடியுதில்லை" என்றார் மற்றவர். "பொன்னன் முத்துத்தம்பியின்ரை ஆடு. எத்தனைமுறை சொல்லியும் அவன்ரை மனுசி ஆட்டை அவிழ்த்து எங்கடை வளவுக்கை விடுகிறாள். அது வளவிலை ஒன்றையும் வைக்கவிடுதில்லை."

அவர் சண்டிக்கட்டை மீண்டும் ஒருதரம் கட்டிக் கொண்டு சொன்னார்: "தம்பி நீர்தான் இதுக்குப் பரிகாரம் செய்ய வேணும். உன்னாணை தம்பி, அல்லாட்டி, ஆட்டை நான் கூறுபோட்டு விடுவன்."

சண்முகமணி வீட்டிற்குள் வராமல், அவருடன் போய்விட்டார். ஆடு எங்கள் வேலியில் ஒரு பூவரச மரத்தில் கட்டப்பட்டு, கத்திக்கொண்டு நின்றது.

நான் அசுபதி அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்து, ''அம்மாவுக்கு ஒப்பரேஷன் முடிஞ்சுது. இனி சுகம்'' என்று கூறினேன். 'ஆ' என்று கேட்டார் அவர்.

''அம்மாவுச்குச் சுகம். ஏழு நாட்களில் வருவா என்று கை விரல்களை விரித்துக் காட்டினேன்.'' அவர் மிகவும் சந்தோஷப்பட்டார்; அதை வெளியிடத்தான் பேச்சு வரவில்லை. 'சுகம்' என்று மட்டும் திருப்பிக் கூறினார். அவருடைய வயிறு வற்றி இருந்தது. ஆனால், சலம் கழிப் பதற்குச் சைகை காட்டினார். நான் சலப் போச்சியை எடுத்துக் கொடுத்தேன்.

ஆச்சிக்குட்டிப் பெத்தாச்சி அடுக்களையிலிருந்து ஒரு கை விளக்கோடு வந்தா. 'சுருட்டுக் கொண்டு வந்தனியே' என்று கேட்டா. நான் அவவின் வேண்டுகோளை மறந்தே போனேன். ''ஐயோ, இல்லைப் பெத்தாச்சி. நான் அவரை அனுப்பிக் கடையிலை வாங்கித் தாறேன்'' ஆச்சி வெடுக்கென்று சொன்னா:

''அவன் எனக்குச் சுருட்டு வாங்க வேண்டாம்.'' கை விளக்கு காற்றினாலோ, அவவின் மூச்சுப்பட்டோ அணைந்தது.

அவகேட்டா, ''அது சரி, புரியன் பெண்சாதி போலை திரிகிறியள். அவன் உன்னைக் கட்டுவானே?''

''என்னை யாரும் கட்டுவதற்கு நான் என்ன ஆடா மாடா ஆச்சி!'' என்று திருப்பிக் கேட்டேன்.

''அவன் உன்னைக் கட்ட, அவள்— தாய் விடாள்' என்றா ஆச்சிக்குட்டி. ''தெய்வானைப் பிள்ளை செத்த பிறகுதான் பெடியனுக்குக் கலியாணம்.''

அவ மேலும் சொன்னா: ''நீ ஏன் பீயும் மூத்திரமும் எடுத்துத் திரிகிறாய்? உன்ரை வேலையைப் பார்; போ!''

# 16

சில வாலிபர்கள் சண்முகமணியைத் தேடி வந்தார்கள். அவர்களில் சிலர் அக்கம் பக்கத்துக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள். சிலர் பாசக்குளத்தவர்கள். பால சிங்கம், சேனாதிராசா. ஆசைப்பிள்ளை மாஸ்டர் ஆகியோர் அதில் இருந்தனர். அவர்கள் ஒரு முக்கிய விஷயமாக வந்திருந்தனர். சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றக் கழகம் ஒன்றை அமைக்கப் போவதாகவும், அதற்குச் சண்முகமணி தலைவராக இருக்க வேண்டுமென்றும் அவர்கள் வேண்டினார்கள்.

''உங்கள் குறிக்கோள்கள் என்ன?'' என்று கேட்டார் சண்முகமணி.

''சிறுபான்மைத் தமிழருடைய முன்னேற்றத்திற்கு ஆவன செய்வது.''

''சிறுபான்மைத் தமிழர் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு ஒரு வட்டாரத்தை நியமிக்கப் போராடுவது.''

''சிறுபான்மைத் தமிழருக்கென்று ஒரு மகாவித்தியாலயத்தை அமைக்க அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வது.''

இப்படியாகவும், இவற்றின் அடிப்படையிலும் அவர்கள் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டு இருந்தனர்.

சண்முகமணி கூறினார் :

''நீங்கள் எடுத்துக்கொண்ட சில பிரச்சினைகள் மிகவும் முக்கியமானவை. அதில் சந்தேகம் இல்லை. நமது கிராமங்களில் வசிக்கும் மக்களுக்குச் சுகாதார வசதி, உயர்கல்விக்கு வசதி, குடிசைக் கைத்தொழில்களை நடத்துவதற்கு ஏற்பாடு, ஓய்வு நேரங்களில் படிப்பதற்கு, வானொலி

கேட்பதற்கு, நாடகம் பார்ப்பதற்கு, தேகாப்பியாசம், யோகாப்பியாசம் பயில்வதற்கு இப்படியாக எத்தனையோ வசதிகள் தேவை.''

அந்த இடத்தில் அப்போது அசாதாரண அமைதி நிலவியது. வாலிபர்கள் ஒரு உண்மையான மனிதனின் வாக்கைக் கேட்பதை உணர்ந்தார்கள். மிகவும் கவன மாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

''இவை எல்லாவற்றையும் பரிசீலனை செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் நம்மிடையே ஒரு ஸ்தாபனம் — ஒரு கழகம் இருப்பது எவ்வளவோ நல்லது'' என்று ஒப்புக் கொண்டார் சண்முகமணி. ''எனது ஆசீர்வாதமும், கிராம சேவகர் என்ற முறையில் எனது உத்தியோகச் சார்பு கொண்ட ஒத்துழைப்பும், இந்த முயற்சிக்கு எப்போதும் கிடைக்கும்.''

சண்முகமணியின் வேண்டுகோளின்படி நானும் இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்தேன். 'பிள்ளை' என்று அம்மா அழைக்கும் குரல் கேட்டது. நான் 'மன்னிக்கவும்' என்று விடைபெற்று உள்ளே சென்றேன்.

அம்மா ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு வந்து இரண்டு நாட்கள்தான் அவவுக்கும் எங்கள் அறையில் ஒரு புதிய கட்டில் வாங்கிப் போட்டிருந்தார் மகன். அவவுக்கு இப்போது நல்ல சுகம். ஆனால், கட்டிலில் பூரண ஓய்வு எடுத்தா. நான் அறைக்குப் போனபோது, அடுக்களை யில் கிளி நிற்கிறாள். 'உன்னை வரட்டாம்' என்றா. அடுக்களையில் ஒரு ட்ரேயில் வடையும், வாழைப்பழமும் இருந்தன. தேநீர் தயாராக இருந்தது. ''அக்கா, நல்ல பிள்ளை இதைக் கொண்டுபோய் அவர்களுக்குக் கொடு'' என்று வேண்டினாள், செல்வராணி. 'எனக்குப் போக வெட்கமாக இருக்கு. அந்தப் பொடியனும் இருக்கிறான்.'

''யார்?'' என்று கேட்டேன்.

PUBLIC LIBRARY JAFFNA

தனது முழங்கையால் எனது விலாவில் இடித்துவிட்டு, ராணி சொன்னாள் ; "அவன்தான் அக்கா சேனாதி." சிரித்தாள் அவள். "தெரியாதது போல் கேட்கிறாய்"

வடை, வாழைப்பழத்தையும், நேநீரையும் நான் பரிமாறினேன். சண்முகமணி அவர்களுக்குச் சொன்னார் : "உங்களில் ஒருவரைத் தலைவராக நியமியுங்கள். பாலசிங்கம் இந்தப் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர்."

பாலசிங்கம் கூறினார்: "சேர், இப்படியான முற்போக்கு முயற்சிகளுக்கு நான் எனது முழு ஆதரவையும் சேவையையும் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளேன். ஆனால் நான் என்னை ஒரு சிறுபான்மைத் தமிழன் என்று எண்ணுபவன் அல்ல. அப்படி என்னையே நான் தாழ்த்திக் கொண்டு, ஒரு பதவியை ஏற்கத் தயாராக இல்லை. அந்தப் பெயர் பலகை எனக்கு வேண்டாம்."

சண்முகமணி உடனே கூறினார் — "தம்பி, எதை யோசித்துச் சொல்ல இருந்தேனோ. அதை நீயே சொல்லி விட்டாய்."

"பாருங்கள்" என்றார் பாலசிங்கம், "நமது நாட்டில் எண்ணிக்கையில்தமிழரனைவரும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். இது புள்ளி விபரவியல் உண்மை. ஆனால், தமிழரிடையே உள்ள உளுத்துப் போன சில கோட்பாடுகளால், மேலும் பலர் அடக்கப்படுவதும், தாழ்த்தப்படுவதும், பழிக்கப்படுவதும் உலகம் அறிந்த ஒன்று.ஆகையால், நாமே சாதி என்ற சலசலப்புக்கு அர்த்தமோ, அந்தஸ்தோ அளவுகோலோ உண்டாக்கி மேலும் அந்த அபத்தத்தை நீடிக்க வேண்டாம்."

பாலசிங்கம் எழுந்து, ஜன்னல் ஊடாகத் துப்பிவிட்டுச் சொன்னார் :

"உண்மையில் சேர், என்னை யாரும் மனித மதிப்புக்கு ஒவ்வாத முறையில் ஏதாவது லேபல் போட்டு அழைத்தால் அடிப்பேன்."

நான் சிரித்தேன், பாலசிங்கம் என்னைப் பார்த்துக் கூறினார். ''சத்தியமாக அம்மா, அடித்துக் கால்களை உடைப்பேன்.''

உண்மையில் நான் சிரித்தேன், பாலசிங்கம் கூறியவற்றிற்கு அல்ல. சில நாட்களுக்கு முன், நானும் ஜோசப் அம்மாவும் கிளினிக் வேலை முடிந்ததும். டாக்டர் காசிநாதனுடன் அவர் காரில் போய்க்கொண்டிருந்தோம். அப்போது டாக்டர் கூறியதை, இப்போது நினைத்த போது எனக்கு என்னை அறியாமலே சிரிப்பு வந்தது.

டாக்டர் காசிநாதனும், ஜோசப் அம்மாவும் யாழ்ப் பாணத்துச் சாதிக் கோளாறைப் பற்றித்தான் பேசிக் கொண்டு வந்தனர். அப்போது டாக்டர் சொன்னார்:— ''மிஸஸ் ஜோசப்; யாழ்ப்பாணத்துச் சாதி பேசும் சாத் தான்களுக்கு பாசக்குள மக்கள் மட்டுமல்ல, குறைந்த சாதி. நீங்கள், நான் எங்களுடைய மிட்வைஃப் எல்லோரும் குறைந்தவர்கள் தான். நீங்கள், வேதக்காரி 'தங்கச்சி யம்மா' வடக்கத்தையாள், நான் சிவியான், எங்களுடைய சுகாதார அத்தியட்சகர் கைக்குளன்...''

சிரித்தபடியே டாக்டர் தொடர்ந்தார்... ''ஆசுபியோன் கந்தையா மட்டும் உயர்ந்த சாதி வெள்ளாளன். ஆனபடியால்தான் மிட்வைஃப் மனோன்மணியின் கருப் பையில் வளரும் அவருடையஉயர்ரக சரக்கை அவருடைய மருமகன் தனது பெயரில் பதியப் போகிறான்.'' காரின் பின் சீற்றில் இருந்த நான், இதைக் கேட்டுச் சிரித்தேன், இந்த டாக்டர்கள் பக்சையாகச் சொல்வார்கள்.

இன்று அதை மனதில் படம் போட்டுச் சிரித்தேன். பாலசிங்கம் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. எதிர் பாராத விதமாக, நான் சம்பந்தப்படுத்தி நினைத்தது போல சண்முகமணியும் டாக்டர் காசிநாதனைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தார் என்று தெரிய வந்தது. சண்முகமணி கூறினார்:

''எங்கள் எம். ஓ. எச். டாக்டர் காசிநாதன் பாசக்குள மக்கள் மேல் மட்டுமல்ல, கவனிக்கப்படாத மக்கள் அத்தனை பேர் மேலும் அன்பு கொண்டு, எங்கள் முன்னேற்றத்திற்கு ஆணித்தரமான ஆலோசனைகளைத் தருபவர், ஒரு நாள் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது அவர் கூறியவற்றை உங்களுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.''

அவர் சொன்னார்: ''உலக நாடுகளைப் பற்றிப் பேசும்போது கூட, முன்னர் எல்லாம் சில நாடுகளை முன்னேற்றம் குறைந்த நாடுகள் என்றும் கூறிவந்தார்கள். குறைந்த முன்னேற்றம் என்பது கூட இந்த நாடுகளுக்கு இழுக்கு என்று கருதியதால் இப்போது இந்த நாடுகளை முன்னேற்றம் அடைந்துவரும் நாடுகள் என்று அழைக்கிறார்கள் பார்த்தீர்களா? ஒரு நாட்டையும், அதன் மக்களையும் அழைக்கும் பெயரில் எவ்வளவு கவனம் காட்டப்பட வேண்டும்.''

டாக்டர் காசிநாதன் நாம் சிந்திக்க வேண்டிய இன்னும் ஒரு விஷயத்தைக் கூறினார். நமது உடலில் ஒரு உறுப்புக்கு, உதாரணமாக நமது கைக்கு, வியாதியோ விபத்தோ ஏற்பட்டால் உடனடியாகச் சிகிச்சை செய்து அதற்குச் சிறிது ஓய்வு கொடுக்கத்தான் வேண்டும். ஆனால், அந்த உறுப்புக்கு அதிக காலம் பிளாஸ்டர் போட்டு அதை ஒதுக்கியும், அப்புறப்படுத்தியும், பாதுகாத்தும் வந்தால் அந்தப் பாகம் காலப்போக்கில்மெலிந்து, நலிந்து சூம்பி ஒருபோதும் இயங்க முடியாமல் போய்விடும். முழு உடலுக்கும் அந்த உறுப்பு பிரயோசனம் அற்றதாகவும், பாரமுள்ளதாகவும் போய்விடும். வியாதி கண்ட உறுப்பை விரைவில் செயற்படுத்த பயிற்சி செய்யும் பிஸியோதிரபி தான் நவீன வைத்தியமுறை. ஆகையால், தமிழ்ச் சமூகத்திலே, சாதிச் சாத்தான்களினால் விபத்துக்குள்ளான உறுப்பினருக்கு ஒதுக்கலோ, பாது

காப்போ வேண்டாம். சுகாதாரம், கல்வி, தொழில் வசதி போன்ற சமூக நிவாரண சிகிச்சைதான் வேண்டும்—''

சண்முகமணி எங்கள் டாக்டர் தெரிவித்த கருத்துக் களை விவரமாகக் கூறிய போது, பிரசங்கம் ஒன்றைக் கேட்ட உணர்வுடன், அங்கே இருந்தவர்கள் கை கொட்டி ஆரவாரப்பட்டார்கள். தாங்கள் இருந்தது ஒரு சிறு வீட்டின் விறாந்தை என்பதை மறந்து போனார்கள். எனினும், இந்தக் குட்டி விரிவுரையின் விளைவாக, சிறு பான்மை என்ற சொல், அவர்கள் கழகத்தின் பெயரில் நீக்கப்பட்டு வேறு ஒரு பெயரை யோசிப்பதாக ஒத்துக் கொண்டார்கள்.

* * * * * *

பாலசிங்கம்கூறினார். ''நண்பர்களே! தமிழ்மக்களுக் கேற்பட்டுள்ள பிரிவுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முக்கிய காரணங்களில் ஒன்று, இந்தச் சாதி வியாதி. மற்றது நம்மிடையே தலைமைப் பதவிகளுக்கும், வால் பதவிகளுக்கும் ஏற்படும் போட்டிகள். இவற்றினால் ஒற்றுமையாக எங்களுடைய ஒரு பிரச்சினையிலாவது தீர்வுகாண ஒரு சில காலமாவது எங்களால் இயங்கமுடிவதில்லை. ஆகையால், எனது வாழ் நாளிலே நான் எந்தக் கழகத்திலாவது, எந்தக் கூட்டு முயற்சியிலாவது பதவி ஏற்பதில்லை என்று தீர்மானித்து விட்டேன். ஆனால், எமது நண்பர், கிராம சேவகராகவே இருந்து நமக்கு உதவ விரும்புவது போல் நானும் ஒரு கிராமத் தொண்டனாகவே இருந்து பணியாற்ற விரும்புகிறேன். இதனால். மற்றவர்கள் போட்டி பொறாமைக்கு இலக்காகாமல் உண்மையான சேவை செய்ய முடியுமென நம்புகிறேன்.

எனினும், ஒரு கழகத்திற்கு ஒரு தலைவர் அதன் நிர்வாக அமைப்புக்குத் தேவை என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆகையால், எங்கள் எல்லோரிலும் பார்க்க வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவரும், படித்தவரும், எம்மில் பலரைப் படிப்பித்தவருமான

ஆசைப்பிள்ளை மாஸ்ரரை நான் இந்தத் தலைமைப் பதவிக்குப் பிரேரிக்கிறேன்.''

இந்தப் பிரேரணையை ஏகமனதாக ஆமோதிப்பது போல், அங்கே உள்ளவர்கள் அத்தனை பேரும் கை கொட்டி ஆர்ப்பரித்தனர். அதைத் தொடர்ந்து அனைவரும் குதூகலத்துடன் காணப்பட்டனர். பீடியும் சிகரெட்டும் புகைக்கத் தொடங்கினர். தமக்குள்ளே சொந்த விஷயங்களைப் பேசினர்.

சண்முகமணி கேட்டார்: ''சேனாதிராசா, அடுத்ததாக என்ன நாடகம் போடப் போகிறீர்கள்?''

''மனக்குரங்கு'' என்று பதிலளித்தார் சேனாதிராசா.

''மனக்குரங்கா?'' வினவினார் சண்முகமணி. ''ஆமாம். மனக்குரங்கைக் கட்டிப் போடப் போகிறீரா? அல்லது பாசக்குளத்தின் மாமரங்களிலை அவிழ்த்து விடப் போகிறீரா?''

எல்லோரும் சிரித்தனா. எனக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

பாலசிங்கம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். ''சேனாதி இது ஒரு நல்ல நாள். நல்ல விஷயங்களை ஆராய்ச்சி செய்து களைப்புற்றிருக்கிறோம். ஒரு பாட்டுப் பாடும்.''

இதையும் ஆமோதித்து மற்றவர்கள் ஆர்ப்பரித்தனர்.

சேனாதிராசா கீழே பார்த்து யோசித்துக்கொண்டிருந்தார்.

இந்த வேளையில் மாஸ்ரர் எழுந்து, ''எப்படி அம்மா?'' என்று கேட்டார். திரும்பிப் பார்த்தேன். எனக்குப் பின்னால், அம்மா மெல்ல நடந்து வந்து எனது கதிரையோடு நின்றா. நான் எழுந்து அவவுக்குக் கதிரையைக் கொடுத்தேன்.

சண்முகமணி முகமகிழ்வோடு சொன்னார்; ''பார்த்தீர்களா, நான் உங்களுக்குத் தெரிவித்த, டாக்டர் காசிநாதனின் கூற்றுக்கு எனது அம்மா நல்ல உதாரணம்.

99116

அம்மாவுக்கு வயிற்றிலை புற்றுநோய் இருந்து அதற்கு ஒப்பரேஷன் செய்ததால் நோய் போய்விட்டது. இனி அவ தன்னை ஒரு நோயாளி என்று கருதி, பாய்தான் தஞ்சம் என்று இருக்காது எங்களுடன் சேர்ந்து விட்டா. அவவேண்டுமானால் பாசக்குளத்தில் நோயாளிகள் சங்கத் தலைவி ஆகலாம்.''

முதலில் சிரித்தவர் ஆசைப்பிள்ளை மாஸ்ரர்தான். அவர் சொன்னார். ''தலைவனும் வேண்டாம், தலைவியும் வேண்டாம். சேனாதி, அம்மாவும் கேட்க ஒரு பாட்டைத் தொடங்கும்.''

சேனாதிராசா எல்லோருக்கும் அறிமுகமான தமிழ்ப் பொப் பாட்டை கணீரென்ற குரலில் பாடினார்.

''சின்னமாமியே,
உன் சின்ன மகள் எங்கே?
பள்ளி போனாளோ?
படிக்கப்போனாளோ?
சின்னமாமியே......''

நண்பர்கள் தமது கால்களால் தரையிலே தாளம் போட்டனர். அம்மா சிரித்துக்கொண்டிருந்தா. கதவுத் திரையை மெல்ல நீக்கியவாறு கண்கள் மட்டும் தெரிய செல்வராணியும் பாட்டைக் கேட்டுக்கொண்டு நின்றாள்.

* *

அம்மா வீடு திரும்பிய சந்தோஷத்தைக் கொண்டாடுவதற்கு நாங்கள் மூவரும் நல்ல ஒடியல் கூழ் காய்ச்சிக் குடிப்போம் என்று கூறி, சண்முகமணி காலையில் இறாலும் நெத்தலி மீனும் கொண்டு வந்தார். வீட்டில் பலாக் காயும், பயற்றங்காய்ப் பிடியும் இருந்தன. முன் விறாந்தையில் மகாநாடு நடந்ததால் கூழ் குடிப்பதை இரவுக்கு ஒத்திப் போட்டோம். கூழ் ஆறிப் போச்சு. கூழ் குடிக்க ஆய்ந்த பலா இலைகள் அம்மியின் மேல் கிடந்தன.

விறாந்தை மகாநாடு முடிந்த பின்பும் வெகு நேரமாக பாலசிங்கமும் ஆசைப்பிள்ளை மாஸ்ரரும் சண்முகமணி யுடன் அவருடைய அறையில் பேசிக்கொண்டிருந்தனர்.

செல்வராணியும் நானும் கூழைப் பழையபடி சுட வைத்து விட்டு, இருவரும் ஒவ்வொரு வாங்கியில் குந்தி யிருந்து கோலிய பலா இலையில் வார்த்துக் குடித்துக் கொண்டிருந்தோம். எனக்குப் பெரிய இறால்களாகத் தெரிந்து எடுத்துப் போட்டாள் ராணி. 'அண்ணைக்கும் வையடி' என்றேன். நான் அத்துடன் அவளிடம் ஒரு கேள்வி கேட்டேன். இது முக்கியமான கேள்வி தான்.

''ராணி உனக்குச் சேனாதிராசா மேல் விருப்பமா?''

''விசரே!'' என்று வெடுக்கெனக் கூறினாள் அவள்.

''அக்கா, எனக்கு அவர் மேலை விருப்பும் இல்லை, வெறுப்பும் இல்லை. அவர் ஆரோ, நான் ஆரோ.''

மூக்கைத் தனது பாவாடையில் துடைத்துவிட்டு, உறைக்கும் வாய்க்குள்ளே காற்றை இழுத்து மூச்சை ஊதிய படி சொன்னதை விளக்கினாள்:

''அக்கா, நாங்கள் கடை நடத்திய போது என்னு டைய கையை இழுத்துக் கொஞ்சினான் என்று எனக்கு வெறுப்பும் இல்லை. இப்போது அவருடைய பாட்டையும் நடிப்பையும் இரசிக்கிறேன் என்பதற்காகத் தனிப்பட்ட விருப்பமும் இல்லை; நான் அவரை கலியாணம் செய்து கொள்ள விரும்புகிறேனா என்பது உனது கேள்வியின் அர்த்தமானால், அதற்கு— இல்லை— என்பதுதான் எனது திட்டவட்டமான பதில்.''

''நான் அப்படிக் கேட்டது தப்பில்லைத்தானே ராணி?'' என்று கேட்டேன் நான்.

''தப்பில்லை அக்கா'' என்றாள் அவள். ''என்னு டைய விருப்பு வெறுப்புகளை நீ கேட்காமல் வேறு யார்

கேட்பது? இப்படியான விஷயங்களை மனம் திறந்து நான் வேறு யாருடன் பேச முடியும்? உனக்குத் தெரியும் அக்கா, எனக்கும் சேனாதிக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை.''

நான் வருந்தினேன். அவளிடம் நான் இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு எந்தவிதமான நியாயமும் இருக்கவில்லை. அவர்களுக்குத் தேநீர் கொண்டு போய்க் கொடுக்க வெட்கப்பட்டாள். சின்னமாமிப் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தாள் என்பதற்காக என்ன கேள்வி கேட்டேன்.

ராணி எவ்வளவு அழுத்தமாகப் பதில் தந்தாள்.

பூனை அவளுடைய காலில் தனது வாலை உரைஞ்சி ஆக்கினை பண்ணிக் கத்தியது. அவள் இரு இறால் மூஞ்சைகளை எடுத்து அதற்குப் போட்டாள் அடுக்களை வாசலில் நின்ற நாய் எட்டி ஒரு காலை பயத்துடன் வைத்தது. அகப்பைப் பிடியால் அதன் காலில் அடி போட்டு விட்டு ராணி சொன்னாள்: ''அக்கா, நான் என்னுடைய கலியாணத்தைப் பற்றி ஒரு போதும் சிந்திக்கவில்லை. காலம் வரும்போது அம்மாவும் அண்ணையும் அதற்கு வழி செயவார்கள் தானே. என்னுடைய இப்போதைய ஒரே ஆசை, அண்ணைக்கு நல்ல மனைவி வேண்டும் என்பதுதான். அண்ணை உயர்ந்த கொள்கைகளை உடையவர்; அவர் தொழில் செய்வதற்கும், சேவை செய்வதற்கும் நேரகாலம் கிடையாது. அவருடன் இதற்கெல்லாம் ஒத்துழைக்கக் கூடிய ஒரு பெண் அவருக்கு வாய்த்தால் தான் அவர் சந்தோஷமாக இருப்பார்.''

ராணி ஒரு நிமிட யோசனையின் பின், எனது கண்களைப் பார்த்துக் கேட்டாள்: ''ஆசை அக்கா, நான் உன்னிடம் எப்ப கேட்கலாம் என்று இருந்த ஒரு கேள்வியைக் கேட்கலாமா?''

அப்போது அடுக்களை வாசலிலே சண்முகமணி வந்து நின்றார். அவர் முகத்தில் கவலைபடிந்திருந்தது. என்னிடம்

ஒரு தந்தியை நீட்டியவாறு கூறினார்:— "உங்களுடைய அண்ணா தந்தி அடித்திருக்கிறார். உங்கள் மச்சானைக் கண்டி பெரியாஸ்பத்திரியில் அனுமதித்திருக்கிறார்களாம். உங்களை உடனடியாக வரும்படி தந்தியில் இருக்கு."

தந்தியை வாங்கியவாறு அடுக்களையில் இருந்து வெளியே வந்து, பலாவிலையை வீசிவிட்டு என் அறைக்குப் போனேன். கண்ணீர் என் பார்வையைக் குழப்பியது. அம்மா அப்போது முன் விறாந்தையில் இருந்து மெல்ல மெல்ல வந்து கொண்டிருந்தா. எனக்குப் பின்னால் வந்த ராணி கேட்டாள்:— "எந்த மச்சான் அக்கா?"

"எனக்கு ஒரே ஒரு மச்சான்தான் ராணி. இங்கே வந்து போனவர்; வேலுசாமி மச்சான்."

"இதற்கு முன் அவருக்கு ஏதாவது வியாதி இருந்ததா?" என்று கேட்டா அம்மா.

"இல்லை அம்மா."

"அழாதே" என்றா அவ, "எங்களுடைய காலம்தான் உன்னையும் அலைக்குது."

மச்சானுக்கு எந்தவிதமான வருத்தமும் இருக்கவில்லை என்பதுதான் என்னுடைய நம்பிக்கை. அவர் தோட்டத்தில் கஷ்டப்பட்டு உழைப்பவர் அத்துடன் யூனியன் வேலைகளுக்காக அதிகம் பிரயாணம் செய்பவர். உணவைக் கவனியாதவர். என்னதான் நடந்திருக்குமோ? நாவலப்பிட்டி ஆஸ்பத்திரியில் சேர்க்காது, ஏன் கண்டி பெரியாஸ்பத்திரியில் அனுமதித்தார்கள்? என்னுடைய மூளை குழப்பம் அடைந்தது. அன்றைய இரவு நித்திரை இன்மை, சிறிய கனவுகள், திடுக்காட்டம் இப்படியாக மாறி மாறிக் கழிந்தது.

காலையில் கோண்டாவில் ஸ்டேசனில் ரெயில் ஏறினேன். துணைக்கு யாரையாவது அனுப்புவதற்குச் சண்முகமணி ஏற்பாடு செய்ய இருந்தார். அது தேவையில்லை என்று கூறினேன். அண்ணாவுக்கு என்னைக்

கண்டி ஸ்டேசனில் சந்திக்கும்படி தந்தி கொடுக்குமாறு வேண்டினேன். அத்துடன் அக்டோர் 21ம் தேதியிலிருந்து இரு கிழமைகள் லீவுக்கு மனுப் பத்திரம் எழுதி அவரிடமே கொடுத்தேன், சுகாதாரக் கந்தோரில் கொடுக்கும்படி.

''அப்ப தீபாவளிக்கு இங்கே நிற்க மாட்டாய். ஏன் அக்கா?'' என்று கேட்டாள் செல்வராணி.

எனக்கு அழுகை வந்தது.

ஜனவரி மாதம் வந்த நான், இங்கே இந்தக் குடும்ப பாசத்தினால், ஒன்பதரை மாதங்கள் வீட்டுக்குப் போகும் யோசனையே இல்லாதிருந்தேன். இப்படி ஒரு அவதியிலும், கவலையிலும் திரும்புவேன் என்று நான் எதிர்பார்க்கவில்லை. சண்முகமணி கூறினார்:

''கவலைப்படாதீர்கள். மிஸ்டர் வேலுசாமி தனிப்பட்ட மனிதன். சிறிய வருத்தமானாலும் ஆஸ்பத்திரியில் இருந்துதானே குணமாக வேண்டும். உங்களை, உதவிக்கு அழைத்திருக்கிறார்கள்.''

இந்தச் சமாதான விளக்கம் எனது பிரயாணத்திற்கு ஓரளவு நிம்மதி தந்தது.

# 17

நான் கண்டி பெரியாஸ்பத்திரிக்குப் போனபோது, வேலுசாமி மச்சான், சத்திர சிகிச்சைப் பேராசிரியரின் வார்ட்டில் 14ம் நம்பர் கட்டிலிலே படுத்தவாறு பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். கால்மாட்டிலே வேறு சில பத்திரிகைகள் கிடந்தன. நான் போனதை அவர் காண வில்லை. நான் எண்ணியதற்கும் இப்போது காண்பதற்கும்

உள்ள வேற்றுமை எனக்கு மனச்சாந்தியை அளித்தது. அவரின் வலது கால் பெருவிரலை மெல்லப்பிடித்தேன். பத்திரிகையை மார்பில் போட்டு விட்டு என்னைப் பார்த்த தும் குறும்புச் சிரிப்புடன் நெற்றியைச் சுருக்கி ஒருவித ஆச்சரிய முகபாவனையைக் காண்பித்தார். நான் அவருக்குப் பக்கத்தில் போய் நின்று அவருடைய நெற்றியைத் தொட்டுப் பார்த்தேன்.

''உசிர் இருக்குதா என்று பார்க்கிறியா?'' என்று கேட்டார் அவர்.

என் கண்கள் கலங்கின. சேலையால் கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

''ஏன் அழுறே. நான்தான் உசிரோடு இருக்கிறேனே?''

''கஷ்டமான வேளையிலும், குறும்புப் பேச்சு போகலை.''

''என்ன கஷ்டம் பிள்ளை; இப்போ எல்லாம் சரி. உன்னைப் பார்த்ததும் இப்படிப் பேச வந்திச்சு.''

வேலுசாமி மச்சான் சில காலமாக வலது பக்கத்திலே ஹேனியா — குடல் இறக்கத்தால் அவதிப்பட்டிருக்கிறார். ஆனால், அதை அவர் யாருக்குமே தெரிவிக்கவில்லை. அவர் குணம் அப்படித்தான். இரண்டு நாட்களுக்கு முன் ஹேனியாவில் சிக்கல் ஏற்பட்டுத் தாங்க முடியாத வலியால் வேதனைப்பட்டிருக்கிறார். கொத்மலையில் எங்கள் தோட்டத்திலிருந்து காரில் நாவலப்பிட்டி ஆஸ்பத்திரிக்கு வந்து, அங்கிருந்து அம்புலன்சில் கண்டிக்கு அனுப்பப் பட்டிருக்கிறார். நேரத்தைத் தாமதிக்காது அன்று இரவு ஒப்பரேஷன் செய்துவிட்டார்கள். சண்முகமணி கூறியது போல், நான் வந்தால் உதவியாக இருக்கும் என்றுதான் எனக்குத் தந்தி கொடுத்திருக்கிறார் அண்ணா.

நான் வார்ட்டில் நின்றபோது அங்கே தலைவர் மலையப்பன் வந்தார். மச்சானுடன் சில விஷயங்களைப் பேசினார். நான் இருவரையும் பார்த்துக் கொண்டு எட்ட

நின்றேன். அவர்கள் இருவருடைய தோற்றங்களில் எவ்வளவு வித்தியாசம். மலையப்ப தலைவர் மச்சானின் வயதுடையவராகவே இருக்கலாம்; ஆனால், அவர் இளமையாகவும், மச்சான் 45 வயது கடந்தவர் போலவும் தோன்றினார்கள். தலைவர் எப்போதும் மிக இலட்சண மாகவே உடுப்பவர். மச்சானோ, நான் பலமுறை கூறியும் உடுப்பில் கவனம் காட்டுவதில்லை. அத்துடன் மூன்று நாட்களாகச் சவரம் செய்யப்படாமல் இருந்தது அவர் முகம். நான் அவரைக் கடைசியாக — யாழ்ப்பாணத்தில்— கண்டதன் பின் அவருடைய மேல் வாய்ப் பற்களில் ஒன்று விழுந்து விட்டது.

மலையப்ப தலைவர் எனக்குக் கூறினார்:

''சேவுகப்பெருமாள் கொத்மலையில் நிற்கிறான். இன்று வரமாட்டான். நாவலப்பிட்டியில் வேலை பார்த்த மருத்துவ மாது ஆரியவத்தி இப்போது கண்டி மாநகர சபை மருத்துவ மாதாவாக வேலை செய்கிறாள். நீ அவளுடன் தங்கலாம்.''

''ஆகட்டும் சேர்'' என்றேன் நான்.

அவர் கேட்டார்: ''யாழ்ப்பாணத்திலே கொலரா நோய் காணப்பட்டதாம். உனக்குத் தெரியுமா?''

''இல்லை சேர்.''

''உனக்குத் தெரிய வேண்டுமே. ஊர்காவற்றுறையிலே மூன்று பேர் இறந்து போனார்கள். இப்போ யாழ்ப்பாண டவுனைச் சேர்ந்த குருநகரிலும், கோப்பாய், கிளிநொச்சி போன்ற இடங்களிலும் நோய் கண்டிருப்பதாக வானொலியில் அறிவிச்சாங்க.''

எனக்கு கொலரா நோயைப் பற்றிக்கூட சரியான விவரம் தெரியவில்லை. ''அப்படியா?'' என்று மட்டும் கேட்டு வைத்தேன். அசடாக இருந்தால், தலைவர் கண்டிப்பான ஒரு வாத்தியாரைப் போல ஏசுவார்.

மலையப்பதலைவர் வார்ட் நேர்சுடன் மச்சான் விஷயமாக ஏதோ பேசிக்கொண்டு நின்றார். நான் மச்சானிடம் விடை பெறுவதற்கு அவர் பக்கம் போய் நின்றேன். எனது இடது கையைப் பற்றித் தனது அகலமான கைக்குள் சிறைப்படுத்திச் செல்லமாக, ஆனால் பலமாக, அமுக்கினார். உயிரே போய் வந்தது. கையை அவர் விட்ட போது, பொல்லாத அந்த மனிதனின் ஆலிங்கனத்தில் இருந்து என் முழு உடலுமே விடுதலை பெற்றது போன்ற உணர்வு ஏற்பட்டது.

''அழுகையைக் காணோம்?'' என்று கேட்டார். சிரித்தேன்.

கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் கோயிலுக்குப் பின்னால் உள்ள ஓர் ஒழுங்கையில் ஆரியவத்தி ஒரு வீட்டின் வாடகை அறையில் இருந்தாள். அவளுடன் அன்று தங்கினேன். அந்த வீட்டு அம்மாவிடம் கூறி எனக்கும் இரவு உணவை அங்கேயே ஏற்பாடு செய்தாள் ஆரியவத்தி. சாப்பாட்டின் பின் நான் ஆஸ்பத்திரியிலிருந்து கொண்டு வந்த மச்சானின் வேட்டியையும் பெனியனையும் குளியல் அறையில் தோய்த்து உலரப் போட்டேன். நான் அறைக்குத் திரும்பின போது ஆரியவத்தி கூறினாள்:

''இப்போது வானொலியில் செய்தி கேட்டேன். யாழ்ப்பாணத்தில் கொலரா பரவுகிறதாம். கோப்பாய் வட்டாரத்திலும் இருவர் இறந்து போனார்களாம். சுகாதார ஊழியர்களுக்கு லீவு கொடுக்க மாட்டார்கள். கொடுத்த லீவுகளை ரத்துச் செய்து, லீவில் நிற்பவர்களை உடனடியாகத் தமது வட்டாரங்களுக்குத் திரும்புமாறு அறிவிப்பு விடுத்திருக்கிறார்கள்.'' நான் அப்படியே கட்டிலில் இருந்து யோசித்துக் கொண்டிருந்தேன், ஆரியவத்தி ஓர் ஆலோசனை கூறினாள்: ''தங்கச்சியம்மா. நீ எப்படி உடனே திரும்புவது? உனது மச்சான் குணமடைய ஒரு கிழமை ஆகும். ஒரு ஆயுள்வேத வைத்தியரிடம் மெடிக்கல் சாட்சிப் பத்திரம் வாங்கி அனுப்பிவிட்டு நில்.''

அன்று இரவும் இந்தக் குழப்பத்தால் எனக்குச் சுகமான நித்திரை வரவில்லை. ஒரே கட்டிலில் என்னுடன் படுத்திருந்த ஆரியவத்தி குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

அடுத்தநாள் நான் மதியவேளையில் அண்ணாவைச் சந்தித்தேன். அவர் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தார். சண்முக மணி அனுப்பிய தந்தி அன்று காலையில்தான் வந்து சேர்ந்ததாகக் கூறினார். மச்சான் சொன்னார்:

''நம்ம தபால் கந்தோரிலே தந்தி கொடுத்துவிட்டு வருவதிலும் பார்க்க, அதைக் கையோடேயே கொண்டு வந்தால் நிச்சயமாக கிடைக்கலாம்.'' நான் அவருடைய கால் பெருவிரலைச் செல்லமாகக் கிள்ளினேன். சண்முக மணியின் தந்தியுடன் டாக்டர் காசிநாதன், கோப்பாய் சுகாதாரக் கந்தோரிலிருந்து அனுப்பிய தந்தியும் வந்தது. அதில் என்னை உடனடியாகப் பாசக்குளம் திரும்பும்படி இருந்தது.

ஆயுள்வேத வைத்தியரிடம், பொய் வைத்திய சேர்ட்டிஃபிக்கேற் எடுக்கலாம் என்று ஆரியவத்தி கூறிய ஆலோசனையை நிராகரித்தேன். பொய்ச்சாட்சி கோருவதன் குற்றம் ஒரு புறம் இருக்க. மச்சான் ஓரளவு சுகமாக இருக்கும் வேளையில், பாசக்குள மக்களுக்கு இந்த இக்கட்டான நேரத்தில் சேவை செய்யாது தப்பப் பார்ப்பது எனக்கு என்றும் மனவருத்தம் தருவதாக இருக்கும். எங்களுடன் நின்ற தலைவர் மலையப்பன் சொன்னார்: ''நீ உடனடியாகப் போவதே நல்லது. இலங்கையின் மற்றப் பாகங்களில் இருந்தும் சுகாதார ஊழியர்கள் அங்கே அனுப்பப்படுகிறார்கள். உன்னுடைய சேவை உனது மக்களுக்கு மிக அவசரமாகத் தேவைப்படும்.''

அன்றும் ஆரியவத்தியுடன் தங்கினேன். அடுத்த அதிகாலையிலேயே, அண்ணா என்னைக் குருநாகலுக்குப் பஸ்ஸில் அழைத்துப்போய், யாழ்தேவி ரயிலில் ஏற்றி

விட்டார். மச்சான் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டதாகத் தந்தி வந்தது முதல் மூன்று இரவுகளும், இரு பகல்களும் நான் அனுபவித்த மன உளைச்சலுக்கு, இந்தப் பிரயாணத்தின் போதும் ஆளானேன். மச்சான் பூரண குணம் அடையும் மட்டும், நான் லீவுக்கு மனுப்போட்ட இரு கிழமைகளும் அவருடன் இருந்து உதவி செய்ய முடியவில்லை என்ற ஏக்கம் ஒருபுறம். கோப்பாய் வட்டாரத்தில் காணப்பட்ட கொலரா, வாந்தி பேதி, எனது பாசக்குளத்தையும் தாக்கி யிருக்குமோ என்ற பீதி மறுபுறம். யோசனைகளுக்குக் குறைவேது?

நான் மச்சானிடம் விடை பெற்றபோது அவர் திட மான ஒரு வேண்டுகோளை விடுத்தார்:—

''பிள்ளை, நீ அரசாங்கத்திலே வேலை பார்த்தது போதும். டிசம்பரோடு ஒரு வருடம் முடியும். அந்த அனுபவம் நல்லதுதான். ஜனவரியோடு நம்ம தோட்டத் துக்கு வந்து விடு. தோட்டத்திலே மருத்துவச்சி இல்லாமல் தொழிலாளிகள் மிகவும் கஷ்டப்படுகிறாங்க. போன மாசம் மூன்றாம் லயத்திலே ஆராயி பிரசவத்தின்போது செத்துப் போனா. தோட்டத்திலே, உனக்கு வேலை எந்த நிமிஷமும் காத்திருக்கு.''

நான் தோட்டத்திலே சேவை செய்வதற்காகவே மருத்துவ மாதுப் பயிற்சியில் சேர்ந்தவள். அதற்காகவே மிகவும் கஷ்டப்பட்டு, மச்சான் என்னைப் படிப்பித்தவர். அவருடைய வேண்டுகோளை மதிப்பதும், தோட்டத்து மக்களுக்கு எனது திறமையை அர்ப்பணிப்பதும் எனது கடமையாகும். ஆனால் பாசக்குள மக்களுடன் நான் இரண்டறக் கலந்து விட்டேன். அந்தப் பாசத்தில் இருந்து விடுபடுவது இலேசான காரியம் அல்ல. அத்துடன் சண்முகமணி தனது கிராம முன்னேற்ற சிரமதான முயற்சியில் எனக்கும் ஒரு பாகம் தந்திருக்கிறார். அவர்

என்னைப் பாசக்குளத்தின் ஓர் அங்கமாகவே கருதுகிறார். சிந்திக்கச் சிந்திக்க ஒரே குழப்பமாக இருந்தது.

ரயிலிலே கொலராவைப் பற்றிப் பலவிதமாகப் பேசிக் கொண்டிருந்தனர். அரை குறையாக விஷயத்தை தெரிந் தவர்களும், ஒன்றுமே தெரியாதவர்களும் சர்ச்சிக்கும் இந்த ரயில் பிரயாண பொழுது போக்குக் கருத்து வெளி யீடுகளுக்கு நான் அரை குறையாகவே காதுகொடுத்தேன்; ஆனால், கோப்பாய் வட்டாரத்தில் நேற்று இறந்த இருவரும் பாசக்குளப் பகுதியினர் என்று ஒருவர் தெரி வித்த செய்தியைக் கேட்டுத் திடுக்குற்றேன்.

அவர்கள் யாராக இருக்கும்? யாராக இருந்தால் என்ன? நான் நேசிக்கும் மக்களில் இருவர் கொலரா வுக்குப் பலியாகி விட்டார்கள்; அவ்வளவு தான்.

# 18

கோண்டாவில் ஸ்டேஷனை யாழ்தேவி அடைந்த போது பிற்பகல் இரண்டு மணியாகிவிட்டது. எனது உடலும் உள்ளமும் மிகவும் களைப்புற்று இருந்தன. ஸ்டேஷனுக்கு அருகில் இருந்த தேநீர்க் கடைக்கு முன் நின்ற ஒருவரை விசாரித்தபோது, நேற்று இறந்தவர்களில் ஒருவர் பாபர் சுந்தரம் என்றும், மற்றது ஒரு சிறுபிள்ளை என்றும் அறிந்தேன். சுந்தரம் வயோதிபரல்ல; இளமை யான உடற்கட்டு உள்ளவர். கொலராவின் தன்மை அப்படி. எனக்குப் பதில் தந்தவர் சொன்னார்—''இராத் திரியும் ஒரு குமர்ப்பிள்ளை செத்துப்போனாள். செத்த வீடு நடக்குது'' கூறியபடி என் முன்னால் ஒரு ஏவறை விட்டார். புளிச்ச கள் நாறியது. அவர் கூறியதைக் கேட்டதும் எனக்கு ஒருவிதமான, என்னால் விவரிக்க

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகரசபை
யாழ்ப்பாணம்



முடியாத மயக்கம் ஏற்பட்டது, மனோவலிமையால் சமாளித்தபடி எனது கையைத் தூக்கியவாறு பாசக்குளம் நோக்கி நடந்தேன்.

இலேசாகக் கேட்ட பறைஒலி, மெல்ல மெல்ல அதிகரித்து எதிர்நோக்கி வந்தது. பட்டாசின் வெடிகளும் கேட்டன. பிரேத ஊர்வலம் ஒழுங்கை முடக்கில் திரும்பித் தெருவை அடைந்ததும், தண்டிகைப் பாடையை என்னால் பார்க்க முடிந்தது. அவ்விடத்தில் இருந்த ஒரு சிறு கடையின் முன்னால் சில பெண்களும், பிள்ளைகளும் நின்றனர்; நான் கடைப் படியில் ஏறி பையை நிலத்தில் வைத்துவிட்டு அப்படியே நின்று பார்த்தேன். சூர்யகலாவின் அப்பா, கொள்ளிக் குடம் ஏந்தி வருவது தெரிந்தது. நான் ஓர் அடி பின்னால் வைத்தேன். பெண்கள் பேசுவதும் கேட்டது. எனது தோழி சூர்யகலாதான், கடைசி முறையாக அவளுடைய கிராமத்தின் வீதி வழியாகப் போய்க்கொண்டிருந்தாள்.

அங்கே நின்றவர்கள் என்னை ஒரு வாங்கில் கிடத்தினர். எனது முகத்தில் நீர் தெளித்தனர். ஒரு பிளேயின் சோடா போத்தலைத் திறந்து, கிளாசில் ஊற்றித் தந்தார் கடைக்காரர். கடல் கொந்தளித்தது போல், அந்தச் சிறிய கிளாசிலே ஒரு நிமிடம் நுரை தள்ளியது. வேதனையைச் சமாளிக்க, எனது நெற்றியின் கன்னப் பகுதிகளை நன்றாக இறுக்கி அழுத்தினேன். வாங்கில் சிறிது நேரம் இருந்தேன். பறையும் பாடையும் தூரப் போய்க் கொண்டிருந்தன.

இன்னும் ஒரு பறை வரும் சத்தம் கேட்டது. என்னுடன் இருந்த ஒரு பெண்ணிடம், "வேறுயார் செத்ததம்மா?' என்று கேட்டேன்.

"ஆசைப்பிள்ளை வாத்தியாரின் பெரியதாய்" என்றா.

கடைக்காரர் சொன்னார்: "பெரியதாய் அல்ல. மாஸ்ரருக்குத் தூரத்துச் சொந்தம். மனுசிக்கு நூறு வயதிருக்கும். கிழவி வயது வந்து செத்தது."

ஒழுங்கை முடக்கில் பிரேதம் திரும்பியது. தண்டிகைப் பாடையின் மேலே ஒரு குடை சுழன்றுகொண்டிருந்தது. ஒரு வாலிபன் கடைக்காரருக்குச் சொன்னான்: "வயது வந்து செத்தது என்கிறியள். கிழவி வாந்தி பேதியிலை செத்தது என்றுதானே எல்லாம் செய்யினம்."

"ஆர் செய்யினம்?"

"சுகாதாரப் பகுதி."

அந்த நேரத்தில் பிரேத ஊர்வலத்தை ஹோர்ன் அடித்து அதிகாரத்துடன் விலக்கிக்கொண்டு ஒரு வான் வந்தது. அதில் பீயோன் கந்தையா இருந்தார். என்னைக் கண்டதும் வானை நிறுத்தச் சொல்லி, என்னிடம் கூறினார்: "நீ வந்திட்டாயோ என்றுதான் பார்க்கப் போனோம். நாலு மணிக்குக் கந்தோரிலை கொலராக் கூட்டம் இருக்கு. சன சமூக நிலையத்தில் ஊசிபோடுற ஆட்கள் நிற்கினம். நீ அவர்களுடைய வானில் வரலாம்."

அந்த வானைத் தொடர்ந்து ஒரு புதிய வோக்ஸ் வாகன் வான் பிரேத ஊர்வலத்தை முந்திக்கொண்டு சென்றது. அந்த வானிலே, முன் சீற்றில் சாரதியுடன் ஒரு நீக்ரோ இருந்தார். பின்னால் இருந்தவர்களைக் கண்டு கொள்ளமுடியவில்லை. "கொழும்பிலை இருந்து பல டாக்டர்மார் வந்திருக்கினம். நேற்றும் இந்தக் காப்பிரியும் ஒரு வெள்ளைக்காரனும் வந்து போனார்கள்" என்றார் கடைக்காரர்.

"வெள்ளைக்காரனல்ல, தாய்லாந்துக்காரனாம். பார்க்க சீனனைப் போலை" என்று திருத்தினான் வாலிபன்.

பிரேதம் கடையைத் தாண்டியது அவ்விடத்தில் பறைச்சமா நடந்தது. வாலிபன் சொன்னான். "கிழவி ஆசைப்பிள்ளை மாஸ்ரருக்குச் சொந்தம் இல்லை. அவர் மற்றச் சவத்தோடு போறார்."

கடைக்காரர் கூறினார்: "கிழவி சாப்பாட்டுக்கு இல்லாமல் சீரழிஞ்சது. இப்ப பார் பாடைச் சோடனை யையும் சுழலுகிற குடையையும்."

வாலிபன் சிரித்தபடி ஒத்துப் பேசினான். "நேற்றைக்குச் சுந்தரத்தின்ரை செத்த வீட்டிலை சுகாதார பரிசோதகர் நல்ல பேச்சுக் கொடுத்தார். சக்கூசு கட்ட மாட்டியள். செத்தால் மட்டும் நூறு இருநூறு கடன் வாங்கிச் செலவழிப்பியள் என்று தும்பு பறக்க ஏசினார்."

"உண்மைதானே" என்றார் கடைக்காரர், மூக்குப் பேணியில் தேநீரைக் கடகடவெனக் கலக்கியவாறு.

எனது பையைத் தூக்கியவாறு முகத்தை கைலேஞ்சியால் துடைத்துவிட்டு, மெதுவாக வீடு நோக்கி நடந்தேன். போகும்வழியில் டாக்டர் காசிநாதன், பரிசோதகர் இமானுவல், கொக்குவிலுக்குப் புதிதாக வந்த மருத்துவமாது அன்னமுத்து ஆகியோர் வந்து கொண்டிருந்தனர். அவர்களுடன் பிரமிளாவும் தலையில் மருந்துப் பெட்டியைக் காவியபடி ஒரு சிறு பையனும் வந்தனர். பிரமிளாவைக் கண்டதும் எனக்கு அடக்க முடியாமல் அழுகை வந்தது. கைலேஞ்சிக்குள் அழுது தீர்த்தேன்.

டாக்டர் சொன்னார்: "தங்கச்சியம்மா, நாளைக்கு நீர் எங்களுடன் வீடுகளுக்குப் போகவேண்டும். கொக்குவில் மருத்துவமாது நாளைக்கு வீரபத்திர கோவிலடியில் ஊசி போடப் போகலாம்."

டாக்டரும் பரிசோதகரும் மிகவும் களைப்புற்றுக் காணப்பட்டனர். டாக்டர் ஓயாமல் இருமிக்கொண்டே பேசினார். பிரமிளா எங்கேயோ பாாத்தபடி அழுது கொண்டே நின்றாள். தலையில் மருந்துப் பெட்டி காவி வந்த பையன் சிரித்துக்கொண்டு நின்றான். அவனுக்கு இப்படித் தலையிலே மருந்துக் குளிகைகளையும் கொலரா சோதிக்கும் பஞ்சு, மருந்து இவற்றையும் கொண்ட பெட்டியைக் காவி, உத்தியோகத்தர்களுடன் போவது ஒரு வேடிக்கை.

நான் வீடு போய்ச் சேர்ந்ததும் 'அக்கா, கலா இறந்து போனாள்' என்று அழுதவாறு என்னை வந்து அணைத்துக் கொண்டாள் செல்வராணி. எனது அறைக்குச் சென்று நானும் எனது மனப்பாரத்தைக் குறைக்கும் வண்ணம் மீண்டும் அழுதேன். ஒருசில மாதங்கள் தாம் சூர்யகலா என்னுடன் பழகினாள். ஆனால், கிளினிக்கிலும் சரி, வீட்டு உலாவிலும் சரி, என்னுடன் அவள் இணைந்த அந்நியோன்யத்தில் பல வருடங்கள் பழகியவள் போல் ஆகிவிட்டாள். அவளுடைய சிந்தனை, சாதுர்யம், எதையும் சாதிக்கக்கூடிய மனம் பாசக்குள மக்களுக்கு இல்லாமல் போய்விட்டதே! இந்த இளம் வயதில் அவள் இறந்தது பாசக்குளத்தில் நிரப்பமுடியாத ஓர் இழப்பு.

சண்முகமணி வீடு திரும்பும்போது ஏழுமணி இருக்கும். அப்போது நானும் அம்மாவும் ராணியும் பின் விறாந்தையில் பேசிக்கொண்டிருந்தோம். அசுபதி அப்பா சாய்மனைக் கதிரையில் இருந்தவாறு எங்கள் பேச்சைக் கேட்டார். ஒருதரம் தனது முகத்தைத் தடவிக் காட்டி விட்டுக் கையை விரித்தார். "ஓம் அப்பா, சுந்தரம் செத்துப் போனார். அதற்கு என்ன செய்வது?" என்று சொன்னாள் ராணி.

சண்முகமணி வீட்டின் ஊடாக வரவில்லை. வீட்டைச் சுற்றி முற்றத்துக்கு வந்தார். என்னைக் கண்டதும் "மச்சான் எப்படி?" என்று கேட்டார்.

"சுகம்" என்று சுருக்கமாகப் பதிலளித்தேன், எழுந்து நின்றவாறு.

"என்ன வருத்தம்?"

"ஹேனியா."

"ஒப்பரேஷன் செய்ததா?"

"ஆம்."

அவர் நேரே கிணற்றடிக்குப் போனார். ராணி ஒரு துவாயும் சாரமும் கொண்டு போய்க் கொடுத்தாள். அத்துடன் ஓர் அரிக்கன் லாந்தரையும் கொண்டுபோய்க் கிணற்றுக் கட்டில் வைத்துவிட்டு வந்தாள்.

அம்மா சொன்னா; "காலமை அப்பம் தின்றுவிட்டுப் போனவன், இன்னும் ஒன்றும் இல்லை."

சண்முகமணியிடம் இருந்து, கொலரா பரவியதைப் பற்றிய சில விவரங்களை நான் அறிந்துகொண்டேன். காரைநகரைச் சேர்ந்த விக்காவில் என்ற கிராமத்தில், ஒரு செத்தவீட்டுக்குச்சுந்தரம், சூர்யகலாவின் அப்பா, இன்னும் சிலர் போய்வந்திருக்கின்றனர். இவர்களில் நான்கு பேருக்கு வாந்திபேதி ஏற்பட்டு, சுந்தரம் இறந்து போனார். சூர்யகலாவுக்குத் தகப்பனிடம் இருந்துதான் நோய் தொற்றியது. அவளுக்கு நாட்டு மருந்து வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் ஒருவருக்கு நோய் வந்து குணமாகியது. ஆனால், அவருடைய பேரப்பிள்ளை இறந்துபோனாள். அவள்தான்— நான் என்றும் மறக்க முடியாத அந்தத் தோற்றம்— ஆலமரத்தின் பின்னால் ஓடி ஒளித்த கலியாணப் பெண்! "ஆஸ்பத்திரியில் இன்னும் இருவர் இறந்துபோனார்கள். இருவரும் ஆண்கள். கொலராவினால் இதுவரை பாசக்குளத்தில் இறந்தவர்கள் ஐந்து பேர். ஆனால், பலருக்கு வாயாலும் வயிற்றாலும் போய்க்கொண்டிருக்கிறது" என்றார் சண்முகமணி.

நான் பார்த்த இரண்டாவது பிரேத ஊர்வலத்தைப் பற்றிச் சண்முகமணியிடம் கேட்டேன். அவர் கூறினார்;

"கிழவி வயது வந்து செத்தது. எண்பது வயது இருக்கும். கிழவிக்கு ஒரு கிழமையாக வயிற்றாலை போகவே இல்லையாம், ஆனால், இந்த நாட்களில் இறந்ததால் வாந்திபேதி என்ற மாதிரித்தான் பாதுகாப்பு முறைகள் நடக்கின்றன.

செல்வராணி சொன்னாள்: "அக்கா, இந்த நாட்களில் தலையிலை பனங்காய் விழுந்து செத்தாலும் வாந்திபேதி என்றுதான் தீர்மானிப்பார்களாம்."

'ஏய்' என்று மகனை அழைத்தார் அசுபதி அப்பா. சண்முகமணி அவரைத் திரும்பிப் பார்த்தபோது, தனது முகத்தைத் தடவி, கையை விரித்தார். அம்மா சொன்னா: "குஞ்சுகுறுமாக்கள்எல்லாம் செத்துப்போச்சு; அப்பாவுக்கு பாபர் சுந்தரம் செத்ததுதான் மறக்க முடியாத கவலை."

சண்முகமணி தகப்பனைப் பார்த்துச் சிரித்துவிட்டு, எனக்குச் சொன்னார்— "சுகாதாரப் பகுதி நல்ல வேலை செய்யுது. கொக்குவில், கோண்டாவில் மருத்துவமாதர் இங்கே வேலை செய்ய அனுப்பப்பட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாண மலேரியா, காசநோய்த் தடுப்பு இயக்கங்களிலிருந்து உத்தியோகத்தர்களும் வந்து, பலவிதமான கொலராத் தடுப்பு வேலைகள் செய்கின்றனர். இன்று காலை மாத்தறைப் பகுதியிலிருந்து வந்த இரு பரிசோதகர்கள் கிணறுகளில் மருந்து கரைக்கும் வேலையில் ஈடுபட்டனர்."

எனக்கு இவற்றையெல்லாம் கேட்கும்போது சூர்யகலாவின் நினைவுதான். இந்தக் கிராமத்துக்கு அவளைப் போல் தொண்டு செய்யக்கூடியவள் இனி எப்போது பிறப்பாளோ!

சண்முகமணி தொடர்ந்து விவரங்களைக் கூறிக்கொண்டிருக்கும் போதே நான் தூணில் சாய்ந்தபடி தூங்கியிருக்க வேண்டும்.

# 19

''இராத்திரி லக்குமி கிழவி செத்துப் போச்சு: வாந்திபேதிதான்'' என்றார் சண்முகமணி. அவர் காலை வெளுக்க முன்பே எழுந்து, பேச்சி அம்மன் கோவிலடிக்குப் போய் வந்திருக்கிறார். காலை நான்கு மணியளவில் கூக்குரல் கேட்டதாம்.

ஏழு மணிக்கு, கிளினிக் வைக்கும் இடத்தில் சுகாதார ஊழியர்கள் கூடினோம். அரை மணி நேரத்தில், சுகாதார வைத்திய அதிகாரி ஐயாவும் சிலரும் ஒரு வானில் வந்து இறங்கினர்.

டாக்டர் காசிநாதனும், இமானுவல் ஐயாவும், நானும் வீடு வீடாகப் போய் மக்களுடைய மலம் சோதிக்க ஏற்பாடு. சனசமூக நிலையத்திலும் வாசிகசாலையிலும் கொலராத் தடுப்பு ஊசி போடும் வேலைக்குக் கொக்குவில் கோண்டாவில் மருத்துவமாதுகளும், இரு பரிசோதகர்களும் நியமிக்கப்பட்டார்கள். மலேரியாத் தடுப்புக் கந்தோரில் இருந்து வந்த ஒருவர்) வீடுகளில் யாருக்காவது வயிற்றாலை போகிறதா என்று அறிய அனுப்பப்பட்டார். இரு சிங்கள சுகாதார பரிசோதகர்களும், ஆசைப்பிள்ளை மாஸ்ரரும், இன்னும் இரு தொண்டர்களும் கிணறுகளுக்கு மருந்து கரைக்கச் சென்றார்கள். ஜோசப் அம்மா, பாசக்குளத்தில் மட்டுமல்ல, கோப்பாய் வட்டாரத்தில் மற்ற இடங்களிலும் நடைபெறும் ஊசிபோடும் வேலையைக் கண்காணிக்கப் போனா. சில நிமிடங்களில்,

ஊழியர்கள் அனைவரும் தமக்கு நியமிக்கப்பட்ட வேலைகளுக்குப் பிரிந்து போய்விட்டார்கள்.

டாக்டர் காசிநாதனுக்கு இந்தக் கூட்டு முயற்சி திருப்தி அளித்தது. அவர் சொன்னார்: "கொலராபோன்ற தீவிர தொற்று நோயின் தடுப்பு வேலை, போர் புரிவதற்குச் சமானம். தளபதியுடன் எல்லோரும் ஒத்து இயங்க வேண்டும்.

இரவு மழை பெய்திருந்தது. ஒழுங்கைகளில் சேறும் சகதியுமாக இருந்தது. சில இடங்களில் அழுக்கு நீர்தேங்கி நின்றது. நேற்று மருந்துப் பெட்டி காவிய பையன் இன்றும் வந்து சேர்ந்தான். மருந்துப் பெட்டியின் ரெற்ராசைக்ளின் குளிகைகள் கொண்ட ரின்கள், மலம் அனுப்புவதற்கு விசேஷ திரவம் கொண்ட சிறு போத்தல்கள், மலக்குடலில் இருந்து மலம் பரிசோதனைக்கு எடுப்பதற்கான சின்னஞ் சிறிய பந்தங்கள் போல் பஞ்சு சுற்றப்பட்ட சிறு ஈர்க்குகள் ஆகியன இருந்தன.

பேச்சி அம்மன் கோவிலடிக்கு நாங்கள் வந்தபோது பிரமிளா எங்களுடன் சேர்ந்தாள். டாக்டர் காசிநாதன் அவளைக் கண்டதும்எனக்குக்கூறினார்:"பிரமிளா நேற்று ஒரு மருத்துவ மாது செய்யக்கூடிய உதவியை எங்களுக்குச் செய்தாள். எங்களுடன் வந்த உலக சுகாதார ஸ்தாபன நிபுணர்கள் இருவரும் அவளை மிகவும் புகழ்ந்தார்கள். இந்தப் புகழுரையைக் கேட்டு, பிரமிளாவின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றவில்லை. தோன்றியிருந்தால்அவளுடைய மோகனச் சிரிப்பை நாம் அனுபவித்திருக்கலாம்."

"முதலில், இரவு இறந்தவர் வீட்டிற்குப் போய், பிரேதத்தையும் தொடர்புடையவர்கள், அனைவரையும் பரிசோதனை செய்வோம்" என்றார் டாக்டர்.

JAFFNA

பரிசோதகர் இமானுவல் சொன்னார்: "சேர், நேற்றுப் போல் இன்றும், நாலு பொலிஸ்காரர், சனசமூக நிலையத்தில் வந்து நிற்கிறார்கள். அவர்களில் ஒருவரைக் கூட்டிப் போனால், மலப் பரிசோதனை செய்ய உதவியாயிருக்கும்."

டாக்டர் இருமித் துப்பிவிட்டுச் சொன்னார்: "நான் பொலிசைப் பாசக்குளத்துக்கு வரவழைக்கவில்லை. கொலராத் தடுப்பு வேலைகளுக்கு ஏதாவது எதிர்ப்பு இருந்தால், சமாளிக்கவே இவர்களை அனுப்பிவைக்கிறார்கள். இங்கே எதற்கும் எதிர்ப்பு இல்லையே. நேற்று வந்த பொலிஸ் சனசமூக நிலையத்தை உபயோகித்த விதத்தைப் பற்றித் தான் புகார் வந்திருக்கிறது. மீன் முட்களை மேசை லாச்சிக்குள் போட்டிருக்கிறார்களாம்."

"பொலிஸ் என்றால் அப்படித்தானே சேர்" என்றார் இமானுவல். "அதே வேளையில், அவன்கள் இருக்கிறபடியால்தான் இவன்கள் அடங்கி இருக்கிறான்கள்."

டாக்டர் காசிநாதன் கேட்டார்: "மிஸ்டர், இமானுவல், நாம் வைத்திய சேவை செய்யும் மக்களிடம் ஒத்துழைப்புப் பெறுவதற்கு நேற்று வந்தபொலிஸ் தேவையா? நாங்கள் இவர்களை அடக்க வரவில்லை; சேவை செய்ய வந்திருக்கிறோம். ம்ம், நீர் பேசவில்லை. உம்முடைய காக்கி யூனிஃபோம் பேசுகிறது" உணர்ச்சி வசப்பட்டு பேசியதாலோ, என்னவோ டாக்டர் காசிநாதன் இருமித் தள்ளினார்.

லக்குமி கிழவியின் செத்த வீட்டில் ஏராளமான ஆட்கள் குழுமியிருந்தனர். எங்களைக் கண்டதும் பறையும் அடித்தது; சில பெண்கள ஒப்பாரியும் வைத்தனர். சவம் வீட்டுத் திண்ணையில் ஒரு பாயில் கிடத்தப்பட்டிருந்தது. சவத்திற்கு அண்மையில் யாரும் போகாதவாறு, கயிற்றினால் ஓர் அடைப்புப் போடப்பட்டிருந்தது.



99116

இமானுவல் ஐயா காலையிலேயே வந்து, இந்தப் பாது காப்பு வேலையைச் செய்திருக்கிறார். லக்குமி இறந்த விவரத்தை டாக்டர் ஐயா கேட்டு எழுதியபோது, அவவுக்குக் கடந்த இரு நாட்களாகக் கஞ்சித்தண்ணிபோல் வயிற்றோட்டம் இருபது தரத்திற்கு அதிகமாக இருந்த விஷயம் தெரியவந்தது. இதை யாருக்கும் கூறாமல் கிழவியை வைத்திருக்கிறார்கள். அந்த வளவில், இன்னொரு குடிசையில் வசித்த ஒரு பையனுக்கும் நீர் போன்ற பேதி இருக்கிறது. அவன் நேற்றுக் காலை யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குப் போனபோது அங்கே அவனை வார்ட்டில் நிறுத்தி விட்டார்கள்.

சவத்தின் மலவாசல் மூலம் பஞ்சு சுற்றப்பட்ட ஈர்க்கு ஒன்றை வைத்துத் தள்ளி மலத்தைப் பரிசோதனைக்குஎடுத் தார் டாக்டர் காசிநாதன். ஈர்க்கைச் சிறு துண்டாக உடைத்து, மலம் தோய்ந்த பாகத்தை ஒரு போத்தலில் வைத்தார் டாக்டர். போத்தலில் ஒட்டப்பட்டிருந்த வெள்ளைக் கடதாசியில், ஒரு நம்பரையும், லக்குமியின் பெயரையும் பிரமிளா எழுதினாள்.

இப்படியாக அங்கே இருந்த அத்தனை பேருடைய, மலக் குடலில் இருந்து மலத்தைப் பஞ்சில் தோய்த்து எடுத்துத் தனித் தனிப் போத்தல்களில் வைத்தோம். பரி சோதனையின் பின்பு ஒவ்வொருவருக்கும் ரெற்ராசைக் ளின் குளிகைகள் மூன்று நாட்களுக்குப் போதிய அளவு கொடுத்தார் டாக்டர்.

சவத்தைக் குளிப்பாட்ட டாக்டர் அனுமதிக்கவில்லை. அவர் முன்னிலையிலேயே பெட்டிக்குள் சவம் வைக்கப் பட்டு, பெட்டி மூடப்பட்டது. அதைச் 'சீல்' பண்ணினார் இமானுவல் ஐயா. பொதுக் கிணற்றை அடுத்துள்ள ஒரு வெறும் காணித்துண்டில் பாடை உருவாகிக் கொண்டி ருந்தது.

சுகாதார அத்தியட்சகர் கந்தோரில் இருந்து ஒரு வான் வந்து சனசமூக நிலையத்தின் முன்னால் நின்றது. அதில், கொழும்பிலிருந்து வந்த தொற்று நோய் வல்லுநர் டாக்டர் பெரேராவும், உலக சுகாதார ஸ்தாபன நிபுணரான தாய்லாந்துக்காரரும் வந்தனர். அவர்களுடன் சில வீடுகளுக்குப் போனோம்.

ஒரு குடிசை வீட்டில்— திண்ணையில் ஏழு எட்டுப் பெண்கள் பேசிக்கொண்டிருந்தனர். முற்றத்தில் ஈர மண்ணைக் குவித்துச் சில பிள்ளைகள் மண் வீடு கட்டி விளையாடினர். அவர்களுக்குப் பக்கத்தில் படுத்திருந்த மூன்று நாய்கள், எங்களைக் கண்டதும் எழுந்து குரைத்துக் கொண்டு ஓடின. ஒரு சிறு பையன் இமானுவல் ஐயாவுக்குச் சொன்னான் :

''நாங்கள் கக்கூசு கட்டுகிறோம்,'' டாக்டர் காசிநாதன் சிரித்துவிட்டு, ஒரு வித அந்நியோன்யமான குரலில் பெண்களைக் கேட்டார் :

''என்ன எல்லாரும் மகாநாடு வைக்கிறியள். என்ன விசேஷம்?''

''மத்தியானச் சாப்பாட்டுக்கு என்னவழி என்று யோசிக்கிறம் ஐயா'' என்று சொன்னாள் ஒரு பெண். ''வேறு என்னத்தைப் பற்றி நாங்கள் பேசறது.''

தாய்லாந்து டாக்டர் எனக்குப் பக்கத்தில் நின்றவர், ஆங்கிலத்தில் என்னிடம் கேட்டார் : ''அவர்கள் என்ன கூறுகிறார்கள்?''

எனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் பதிலளித்தேன் :

''அவர்களுக்குப் பசிக்கிறதாம்.''

டாக்டர் காசிநாதனிடம், தாய்லாந்தவர் கேட்டார் : ''அவர்கள் கொலராவைப் பற்றி சிந்திக்கவில்லையா?''

எங்கள் டாக்டர் மொழி பெயர்ந்தார் : ''பெரிய டாக்டர் ஐயா கேட்கிறார்; இப்ப ஊரிலை பரவி இருக்கிற கொலரா என்கிற வாந்திபேதி நோயைப் பற்றி, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று.''

''கொலரா, எங்கை ஐயா இருக்கு? சனங்கள் சாப்பிட இல்லாமல் சாகுதுகள்'' என்றாள் ஒரு பெண்.

இன்னும் ஒருத்தி சொன்னாள் : ''கூப்பன் மாத்தான் ஐயா இதுக்குக் காரணம். அதிலை ஏதோ கலக்கிறான்கள்.''

''பேதி நோயும் இருக்குதையா'' என்றாள் அவர்களில் கொஞ்சம் படித்தவள் போல் காணப்பட்ட ஒரு பெண். ''இராசாத்தி சாப்பிட இல்லாமலே செத்தவள்? இரவு இரவாக ஓயாமல் போன கழிச்சலோடு செத்தவள் தானே'' இராசாத்தி என்று அவள் குறிப்பிட்டது சூர்ய கலாவை என்று அறிந்தேன். அவர்கள் கூறியதை டாக்டர் காசிநாதன் தாய்லாந்து டாக்டருக்குப் பொழிப்பாகக் கூறினார். கேட்டவர், தனக்கே உரித்தான ஒரு சினப் புன்னகை மூலம் தனது ஆச்சரியத்தைக் காட்டினார்.

''உணவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்தக் காலத்திலே, கொலரா பரவியது மிகவும் கவலைக்கிடமான விஷயம்தான்'' என்றார் டாக்டர் பெரேரா.

''எத்தனையோ வீடுகளில் ஒரு வேளையாவது சரியாகச் சாப்பிடுகிறார்களில்லை'' என்றார் இமானுவல் ஐயா. ''இந்தக் கிராமத்தில் ரொட்டி விநியோகம் கூடத் தினமும் இல்லை.''

அங்கே இருந்த பெண்களைப் பரிசோதனை செய்ய ஆயத்தமானோம். அங்கே ஒரு கட்டிலோ, வாங்கோ இருக்கவில்லை. அத்துடன் உள்ள ஒரே ஓர் அறை இருண்டு இருந்தது. அடுக்களையும் ஒருவர் நிமிர்ந்து கால் நீட்டிப் படுக்க முடியாத சிற்றிடம்தான். பக்கத்தில் இருந்த

வீட்டின் ஒரு பகுதி கல்லினால் கட்டப்பட்டதாக இருந்தது. இமானுவல் ஐயா பெண்களைக் கேட்டார்:

''அந்த வீட்டிலை வாங்கும் இருக்கு. அங்கே சோதனை செய்வது சுகம். எங்கே ஒருவரையும் காணவில்லை.''

அவர்களில் பேதிநோய் இருப்பதாக ஒப்புக் கொண்டவள், எழுந்து சொன்னாள்; ''அது எங்கடை வீடு தான் ஐயா. அங்கே வசதிபானால் வந்து சோதி யுங்கோ. நாங்கள் எல்லாரும் ஒரே ஆட்கள் தான்.''

கல் வீட்டில் சில கதிரைகளும் இருந்தன. விறாந்தை யில் இருந்த வாங்கை அறைக்குள் எடுத்துப் போட்டோம், அப்போது ஒரு வாலிபன் சைக்கிளில் வந்து சேர்ந்தான். அவனை அறிமுகம் கண்டு கொண்டு இமானுவல் ஐயா கேட்டார்: ''பரராசசிங்கம், இது உன்னுடைய வீடோ?''

''ஓம் ஐயா.''

''சரி, அக்கம் பக்கத்து வீடுகளிலை உள்ள ஆட்களை யும் கூட்டிவா. இங்கேயே மல சோதனை செய்வது சுகம்'' என்று கட்டளையிட்டார் பரிசோதகர்.

''பாதிப் பேர் தோட்ட வேலைகளுக்குப் போய்விட் டார்கள்'' என்றான் பரராசசிங்கம்.

''இருக்கிறவர்களைக் கூட்டிவா.''

டாக்டர் பெரேராவும் தாய்லாந்து டாக்டரும், அந்த விறாந்தையின் சுவரிலே தொங்கின இருபதுக்குமேற்பட்ட கண்ணாடிப் பிரேம் போட்ட படங்களைப் பார்த்துக் கொண்டு நின்றனர். தாய்லாந்துக்காரர் கொடுத்த நீண்ட சிகரெட்டைப் புகைத்தவாறு, கதிரையிலிருந்து டாக்டர் காசிநாதனும் அந்தப் படங்களைப் பார்த்தார். ஒரு படத்தை டாக்டர் எழுந்து நின்று உற்றுப் பார்த்தார். அந்தப் போட்டோவில் சிவாஜிகணேசன் ஒரு கதிரையில்

இருக்க அவரின் பக்கத்தில் பரராசசிங்கம் நின்றான். டாக்டர் திரும்பி, அவர் முகத்தில் கேள்விக் குறி பிரதி பலிக்க பரராசசிங்கத்தைப் பார்த்தார்.

அவனுடைய தாய் சொன்னா : ''படம் பார்க்கிற வைத்தியம் தான் ஐயா இந்த வீட்டிலை. இவன் இந்தியா போன போது சிவாசியோடை எடுத்த போட்டோப் படம்தான் இது. இஞ்சை கொஞ்சப் பொடியன்களுக்கு இதுதான் வேலை.''

நான் அறைக்குள் பெண்களை ஒவ்வொருவராக அழைத்து, வாங்கில் சரியச் செய்து பஞ்சுத் தலை யுடைய ஈர்க்குகள் உபயோகித்து மலவாசல் மூலம் மலம் எடுத்தேன். போத்தல்களில் ஈர்க்குத் துண்டுகளை நான் வைத்ததும் பிரமிளா அவற்றின் மேல் அவரவர் பெயர் களை எழுதினாள். ஆண்களை இமானுவல் ஐயா சோதித் தார்.

லக்குமிக் கிழவியின் பிரேதம் ஒழுங்கை வழியாகப் போய்க் கொண்டிருந்தது. விறாந்தையில் நின்று தண்டிகைப் பாடையைப் பார்த்த தாய்லாந்து டாக்டர் கேட்டார் :

''பணக்கார வீட்டுப் பிரேத ஊர்வலமோ?''

பறை ஆவேசத்துடன் ஒலித்தது.

பிரேதத்தின் பின்னால் வந்த ஒருவர், சாராய நாற்றம் வாயில்வீச, இமானுவல் ஐயாவுக்குச் சொன்னார்: ''பனை வளவிலை ஒரு பொடிக்கு வயித்தாலை போகுது; தாய் ஒரு விசரி. பார்த்தால் நல்லது'' அவர் அந்தச் செய்தி யைத் தெரிவித்தது நல்லதாய்ப் போயிற்று. பனைவளவுப் பிள்ளை உண்மையில் சாகக் கிடந்தது; படுத்திருந்த தடுக்கு கந்தைச் சீலை எல்லாம் மல நீர் தோய்ந்து இருந்தது. தாய்

PUBLIC ... JAFFNA

அப்போதுதான் வாய் நிரம்பக் கரியுடன் பல் மினுக்கிக் கொண்டு நின்றாள். அவள் உடுத்திருந்த சேலையும் குழந்தையின் மலத்தால் நனைந்து இருந்தது. குழந்தை யையும் அவளையும் சுற்றி இலையான் மொய்த்தது.

டாக்டர்கள் பார்ப்பதற்கு நான் குழந்தையைத் தூககிப் பிடித்தேன். டாக்டர் காசிநாதன் கூறினார்: ''மோசமான நிலைதான். உடனடியாக இநதப் பிள்ளையை ஆஸ்பத்திரிச்கு அனுப்பாவிடில் இறந்து போகும்.'' தாய்லாநது டாக்டர் ஒரு போட்டோ எடுத்தார்.

குழந்தையைப் பிரமிளாவிடம் கொடுத்து, அவள் தூக்கிப் பிடிக்க, நான் மல பரிசோதனைச்கு ஈர்ச்கு வைக்க முயன்றேன். அப்போது நீராக வெளியே அடித்த மலம் எனது தாவணியை நன்றாக நனைத்துவிட்டது. தாவணி யைக் கழற்றி, முற்றத்தில் இருந்த, மண் குடத்திலிருந்து தண்ணீரை இமானுவல் ஐயா வார்க்க, முந்தானைச் சேலையை ஓரளவு கழுவினேன். அவ்விடத்திற்கு வந்த தாய்லாந்து டாக்டர் நனைந்த சேலைப் பாகத்தைத் தாவணியாகப் போடாமல், இடுப்பைச் சுற்றிக் கட்டும்படி சைகையுடன் யோசனை தெரிவித்தார். நானும் அவர் கூறியபடி செய்தேன்; பேச்சி!

அவர் அப்போது என்னைப் பார்த்து 'நைஸ்' என்றார்.

''என்னவாம் அக்கா?'' என்று கேட்டாள் பிரமிளா.

''வடிவாக இருக்காம்.''

எனது முகத்தைப் பார்த்து அவள் உதட்டுக்குள் சிரித் தாள். இந்த விபத்தை நான் எதிர்பார்க்கவில்லை. எனது ரவிக்கைகளில் மிகவும் இறுக்கமான ஒன்றையே அன்று

அணிந்திருந்தேன். தாய்லாந்துக்காரர் அதன் பின்பு. என் நெஞ்சையே பலமுறை பார்த்தார். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

அந்த நேரத்தில் அவசரமாக ஒருவர் வந்து டாக்டர் காசிநாதனிடம் கூறினார்: ''சேர், கிணறுகளுக்கு மருந்து கரைக்கப்போன ஒரு பரிசோதகருக்கு நாய் கடிச்சுப் போட்டுது. சனசமூக நிலையத்தில் இருக்கிறார்.''

''பிளடி டோக்ஸ்'' என்றார் டாக்டர். ''இந்தக் கிராமத்தில் நாய்களுக்கு மட்டும் குறைவில்லை.''

செய்தி தெரிவித்தவருடன் வந்த இன்னொருவர் சொன்னார்: ''சும்மா, அது தன்பாட்டுக்குக் கிடந்த நாய் ஐயா, அவர் சப்பாத்துக் காலாலை உதைஞ்சார்; நாய் விடுகுதே? இஞ்சை மனிச சாதிக்கல்லோ ரோசமில்லை.''

நாய் கடிபட்டவரையும், கொலரா கண்ட குழந்தையையும், அதன் தாயையும் வானில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்ப ஏற்பாடு செய்தனர். நான் எங்கள் டாக்டருக்குக் கூறினேன்; ''சேர், நானும் போற வானில் வீட்டுக்குப் போய், உடுப்பை மாற்றிக் கொண்டு வருகிறேன்.'' நனைந்த சேலைப் பகுதியைப், பழையபடி தாவணியாகப் போட்டுக் கொண்டேன். 'பாய் பாய்' என்று என்னை வழியனுப்பி வைத்தார் தாய்லாந்துக்காரர்.

# 20

அடுத்த நாளும் காலை ஏழரை மணிக்கு, எங்கள் கிளினிக் கட்டடத்தில் எல்லோரும் கூடினோம். உண்மையில், அன்று தீபாவளி அரசாங்க விடுமுறை நாள்; ஆனால், கொலரா காரணமாக விடுமுறைகள், சனி, ஞாயிறு ஓய்வுகள் எல்லாம் சுகாதார ஊழியர்களுக்கு ரத்துச் செய்யப்பட்டுள்ளன. கொலரா என்ற நவீன நரகாசுரன், எங்கள் கிராமத்தில் அட்டூழியம் செய்யும் போது, தீபாவளியைப் பற்றி யார் சிந்திப்பது? எங்கள் வீட்டில் அசுபதி அப்பா மட்டும், மகன் வாங்கிக் கொடுத்த கோடி வேட்டியை உடுத்திருந்தார்.

அன்று இமானுவல் ஐயாவுக்கு 101 டிகிரியில் காய்ச்சல் காய்ந்தது கடந்த சில நாட்களாக அதிக வேலை செய்ததாலும், மழையில் நனைந்ததாலும் அவர் மிகவும் களைப்புற்றிருந்தார். அத்துடன் தடிமனாலும் வருந்தினார்.

வானில் டாக்டர் காசிநாதனும், நீக்ரோ டாக்டரும் வந்து சேர்ந்தனர். நீக்ரோ டாக்டர் ஆபிரிக்காவில் கானாவைச் சேர்ந்தவர் என்றும் தற்போது உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென் கிழக்குப் பிராந்தியத்தில் கடமையாற்றுகிறார் என்றும், கொலரா பற்றிய ஆராய்ச்சிகள் பல செய்தவரென்றும் அறிந்தேன். அவர், டாக்டர் காமரா கோனாற்றே என்று அறிமுகப்படுத்தப் பட்டார்; டாக்டர் கோனாற்றே என்றே எங்கள் டாக்டர் அவரை அழைத்தார். கருங்காலி உடல், கம்பீரமான உயரம், சம்பிகள் போன்ற சுருள் தலைமயிர், கருங்கல்

அம்மி போன்று பொழிந்த முகம், கனத்த உதடுகள், கரகரத்த கடுமையான குரல் — டாக்டர் நோனாற்றே இவர் இரண்டு நாட்களுக்கு முன் இங்கே வந்து போனவர். கொலரா காவிகள் பற்றிய ஆராய்ச்சி செய்கிறார்.

பிரமிளா சொன்னாள்: "அக்கா பார்க்கப் பயங்கர மாகத் தோன்றினாலும், இவர் மிகவும் நல்ல மனிதர். தாய்லாந்து டாக்டர்போல் ஆசாமி அல்ல"

பிரமிளா எதைக் குறிப்பிடுகிறாள் என்பதைப் புரிந்து கொண்டேன். அவள் தோளில் இடித்து பகிடியை ஆமோதித்துச் சிரித்தேன்.

டாக்டர் காசிநாதன், இமானுவல் ஐயாவை ஓய்வு எடுக்கச் சொல்லியும், அவர் கேட்கவில்லை. அவர் சொன்னார்: "வேண்டுமானால் சேர், நான் இன்று வீடு களுக்கு வரவில்லை. யாழ், குடா நாட்டை விட்டு வெளியே போறவர்களுக்குப் பேர்மிற் எழுதுவதை நான் இங்கி ருந்தே செய்கிறேன். ஊசி போட்டுக்கொண்ட பலர் கிளிநொச்சிக்குப் போக இருக்கிறார்கள்."

பரிசோதகர் இமானுவலின் கடமை உணர்ச்சி நாம் எல்லோரும் அறிந்த விஷயம்தான். அன்று அவர், டிஸ்பி ரின் போட்டுக்கொண்டு, கிளினிக் அறையில் இருந்து பேர் மிற் கொடுக்கும் வேலையை ஏற்றுக்கொண்டார். ஆகையால், எங்களுடன் வீடு வீடாகச் சென்று மல பரிசோதனை செய்வதற்கு, மலேரியாத் தடுப்பு இயக்கத்தி லிருந்து வந்த சித்திவிநாயகம் நியமிக்கப்பட்டார்.

முதலாம் நாள் எடுத்த மல பரிசோதனை முடிவுகள் சில வந்திருந்தன. சுந்தரம், சூர்யகலா, கண்மணி, (சிறு பிள்ளை) ஆகியோரது வியாதி கொலராதான் என்பதை அவை நிரூபித்தன. அத்துடன் பாசக் குளத்தில் இருந்து போய், யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் இறந்த வல்லி கதிரவன், அருளம்பலம் இருவருக்கும் இருந்ததும் கொலராதான் என்பது முடிவு. சூர்யகலா இறந்த அன்று

இறந்த கிழவிக்கு கொலரா நோய் இருக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டது. வயிற்றோட்டம் இருந்த இன்னும் எட்டுப் பேருடைய மலமும் கொலராக் கிருமிகளைக் காட்டியது. அது மட்டுமா? வயிற்றோட்டமோ வேறு எந்த அறிகுறிகளோ இல்லாமல், சுகமாகத் திரிந்த ஆறு பேருடைய மலத்திலும் கொலராக் கிருமிகள் இருந்தன. இந்த ஆறுபேரில் நமக்கு ஏற்கனவே தெரிந்தவர்கள், பேச்சி அம்மன் கோவில் ஐயரும், அவர் மனைவியும், லக்குமிக் கிழவியின் மருமகளும் ஆவர்.

டாக்டர் கோனாற்றே, இநதப் பரிசோதனை முடிவுகளைப் பார்வையிடும்போது கூறினார்: "நோயின் அறிகுறிகள் ஒன்றுமே இல்லாமல் சுகதேகிகள் போல் இருப்பவர்களுக்கு மலத்தில் கொலரா கிருமிகள் இருந்தால் அவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். ஏனெனில், அவர்கள் மற்றவர்களுக்கு நோயைப் பரப்பக்கூடும். இவர்கள்தான் நோய் காவிகள். ஆகவே, இந்த ஆறு பேரையும் நாம் மிகவும் கவனத்துடன் கண்காணிக்க வேண்டும்."

இரு டாக்டர்களுடன் நானும் பிரமிளாவும் சித்தி விநாயக ஐயாவும் வீட்டு உலாவுக்குப் புறப்பட்டோம். வழக்கமாக மருந்துப்பெட்டி காவும் பையன், அன்றும் வந்து எங்களின் பின்னால் பெட்டியைக் காவிவந்தான். அவனுக்குத் தினமும் ஒரு ரூபா கொடுத்தார் எங்கள் ஐயா.

எந்த வீடுகளுக்குப் போக வேண்டும்? யாரைச் சோதிக்க வேண்டும்? என்ற ஒரு பட்டியலைத் தயாரித்துக் கொண்டு வந்தார் டாக்டர் கோனாற்றே. இந்தக் கிராமத்தில் பல வருடங்கள் வேலைசெய்து அனுபவம் பெற்றவர் போல் வீடுகள், மக்கள் ஆகிய விபரங்களைத் தெரிந்திருந்தார் சித்திவிநாயகம் ஐயாவுக்கு, டாக்டர் காசிநாதர் கூறினார்: "பாருங்கள், மிஸ்றர் சித்திவிநாயகம்! உங்கள் மலேரியாத் தடுப்பு இயக்கம் பாசக்குள கிராமத்தைப் பற்றித் தயாரித்த மக்கள் பட்டியலை எடுத்து, தனக்கு

வேண்டிய விபரங்களைத் தயாரித்துக்கொண்டார் டாக்டர் கோனாற்றே. ஆராய்ச்சி செய்வதென்றால் இதுவல்லவா முறை. எங்களில் சிலருக்கு இப்படியொரு பட்டியலிருப்பதே தெரியாது. குடிசன மதிப்பு இலாகா வெளியிடும் பிரசுரங்கள் இருப்பது தெரியாது. நாங்கள் செய்யும் வேலைகளெல்லாம், குருடன் ஒருவன், கள்வனை இருட்டில் துரத்துவது போல்தான்.''

தமிழில் தான் கூறியதைப் பொழிப்பாக, டாக்டர் கோனாற்றேக்கும் ஆங்கிலத்தில் கூறினார் காசிநாதன் ஐயா. கோனாற்றே சிரித்தார். சித்திவிநாயகம் ஐயாவைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினார். அவர் சொன்னார்: ''உண்மையில் என்னை ஸ்ரீலங்காவுக்கு வருமாறு தந்தி வந்ததும் நான் உங்கள் நாட்டைப் பற்றிய ஒரு நூலை வாங்கிப் படித்தேன். ஒரு நாட்டைப்பற்றி அறியாமல், அந்த நாட்டில் வேலைபார்க்கக் காலெடுத்து வைக்கலாமா?''

டாக்டர் கோனாற்றே சிரித்தபடி ஒரு சவால் விட்டார்: ''உங்களுடைய கலியாண வைபவ விவரங்கள் தொடக்கம் சாவீட்டுச் சடங்கு பற்றிய சங்கதி வரை எல்லாம் படித்திருக்கிறேன். வேண்டுமானால் யாராவது என்னைக் கேட்டுப் பரீட்சித்துப் பாருங்கள்.''

பிரமிளா தனது வாயை, கோலிய தனது கையால் ஒரு பாகம் மறைத்து, எனக்கு இரகசியமாக ஒரு விஷயம் சொன்னாள்.

''இந்தக் குறும்புப் பெண் என்ன செய்கிறாள்?'' என்று கேட்டார் கோனாற்றே ஐயா.

''எங்கள் கலியாண வீட்டில் மணமகள் என்ன நகைகள் அணிவாளென்று உங்களுக்குத் தெரியுமா என்று கேட்கிறாள் பிரமிளா.''

பிரமிளாவின் முகத்தைச் செல்லமாகத் தட்டிவிட்டு அவர் சொன்னார்: ''பாரும் மிஸ்! நீர் கலியாணப் பெண்ணாகப் போகும்போது, உமக்கு எந்தவிதமான நகையும்

வேண்டாம். உம்முடைய இந்த ஸ்வீற் சிரிப்பே உம்மை அலங்கரிக்கப் போதும் ''

பிரமிளா விறுவிறுவென புளிய நிழலில் இருந்து முன்னால் நடந்தாள். எங்கள் கூட்டம் அவளைப் பின் தொடர்ந்தது.

பனைவளவில் இருந்து அழுகுரல் கேட்டது. நாங்கள் நேற்று ஆஸ்பத்திரிக்கு அனுப்பிய குழந்தை அங்கே இறந்துவிட்டது. பிணத்தை அரசாங்கச் செலவிலேயே அடக்கம் செய்யத் தாய் கொடுத்துவிட்டாள். விசரி— என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட அவள், என்னைக் கண்டதும் சொன்னாள்: ''எனக்கு இருந்த ஒரே ஒரு செல்வமும் போட்டுது.'' அவளுடைய கையைப் பிடித்தவன், குழந்தை வயிற்றில் இருக்கும்போதே அவளைக் கைகழுவிவிட்டதாக அறிந்தோம். அவளின் மலத்தை அன்றும் பரிசோதனைக்கு எடுத்தோம்.

அன்று மூவருக்குப் பேதிநோய் கண்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது. முதலாவதாக இந்தப் புதிய நோயாளிகளைப் பரிசோதிப்பது என்று தீர்மானித்தார் டாக்டர் காசிநாதன். ஆனால், முதல் நோயாளி வீட்டிற்குப் போனபோதே அங்கே ஒரு நாடகம் நடந்தது.

பரிசோதகர் இமானுவலுக்காக அன்றைய வேலையை ஏற்ற சித்திவிநாயகம் ஐயா மலக்குடல் பரிசோதனை செய்ய மறுத்துவிட்டார். மறுத்தது மட்டுமல்ல, வீட்டின் படலையிலேயே நின்றுவிட்டார். வளவுக்குள் வரவில்லை. தான் மலேரியாத் தடுப்பு இயக்கத்தின் யாழ் டவுண் பகுதியில் இரத்தம் மட்டும் சோதிப்பவர் என்றும், மல பரிசோதனை—அதுவும் இந்த முறையில் மலம் எடுப்பது— தெரியாது என்றும் கூறினார். டாக்டர் காசிநாதன் அவருக்குக் கூறினார்: ''மிஸ்ரர் விநாயகம்! மலக்குடல் பரிசோதனை உமக்குத் தெரியாவிட்டால் அதை நான் செய்கிறேன். நீர் வந்து உதவி செய்யும்.'' ஆனால் சித்தி விநாயகம் ஐயா படலைக்கு வெளியே வெற்றிலையைக்

குதம்பியபடி நின்றார் அவர் அங்கே நின்ற ஒருவருக்குக் கூறியது எங்களுக்கு அரைவாசி கேட்டது: ''நான் கந்த சஷ்டி விரதம் பிடிப்பவன்...'' டாக்டர் காசிநாதன் கேட்டார்: ''மிஸ்ரர் விநாயகம் கடந்த மூன்று நாட்களாக நீர் வீடுகளில் நோயாளிகள் இருக்கிறார்களா என்று பார்க்க அனுப்பப்பட்டவர். வளவுகளுக்குள் நுழையாமல் நோயாளிகளை எப்படிப் பார்த்தீர்?''

அப்போது அங்கே நின்ற ஒருவர், டாக்டர் ஐயாவுக்கு இரகசியமாகக் கூறினார்: ''அவர் வீடுகளுக்குள் போறதில்லை ஐயா. வேலிக்கு மேலாகக் கேட்டு எழுதிக் கொண்டு போறவர். இவர் சாதித் திமிர் பிடிச்ச ஆள். நான் யாழ்ப்பாண நகரசபைத் தெருக் கூட்டுப்பாட்டியைச் சேர்ந்தவன் இவர் அங்கேயும் எங்கள் சாதிக்காரர் பக்கம் போகமாட்டார்.''

டாக்டர் ஐயாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. கொலரா காவிகளைப் பார்க்க வந்தவர், ஒரு சாதி காவியைக் கண்டு கொண்டார்!

''பிளடி இடியற்'' என்று கத்தினார் டாக்டர் காசிநாதன். படலைக்கு வெளியே வந்து சித்தி விநாயகம் ஐயாவைப் பார்த்துப் பேசினார்.

''பிளடி இடியற், நீ ஒரு அரசாங்க ஊழியன்'' அவர் தொடர்ந்து சொன்னார்.

''வெளிப்படையாகச் சாதியைச் சாதிக்கும் ராஸ்கல்களிலும் பார்க்க நீ ஆபத்தானவன். நீ ஒரு சாதிகாவி,''

''டாக்டர் காசிநாதன்!'' என்று ஆத்திரம் கொண்ட குரலில் பத்திரம் காட்டினார் விநாயகம் ஐயா,''ஒரு உத்தியோகஸ்தரிடம் பேசும் முறையல்ல இது. ''கெற் அவுற்'' என்றார் டாக்டர்.

''சரி, நான் உம்மைப் பார்த்துக்கொள்கிறேன்'' என்றவாறு விநாயகம் ஐயா போய்விட்டார். பார்க்கப் போனால் இது ஒரு பாரதூரமான சண்டை, டாக்டர்,

மூச்சு மேலும் கீழும் வாங்க. சிறிது நேரம் இருமித் துப்பினார்.

கோனாற்றே ஐயா, இந்தச் சம்பவத்துக்கு அதிகம் கவனம் கொடுக்காதவர் போல் அந்தக் குடிசையையும் அதன் சூழலையும் சென்று பார்வையிட்டார் திண்ணையில் இருந்த இரு பிள்ளைகளைத் தூக்கிப் பார்த்தார்; ஒரு வயோதிபரின் முதுகில் தட்டிக்கொடுத்தார் அந்த வீட்டில் ஒருவருக்கு இரவு பத்துத் தடவை நீராக மலம் கழித்திருக்கிறது. அவரைக் கோப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதித்து விட்டார்கள். நாங்கள் வீட்டிலிருந்தவர்களைப் பரிசோதனை செய்தோம்.

அன்றைய பரிசோதனைகள் முடிவுற பின்னேரம் மூன்று மணியாகிவிட்டது. அனைவரும் எனது வீட்டைத் தாண்டிப்போக நேர்ந்தது. வீட்டு வாசலில் நின்ற சண்முக மணி, டாக்டர்கள் இருவரையும் சோடா அருந்திப் போகுமாறு பணிவுடன் அழைத்தார். பிரமிளாவை நோக்கி, ''உன்னை நான் ஸ்பெஷலாக அழைக்கவேண்டியதில்லை அல்லவா?'' என்றார்.

# 12

செல்வராணி வழக்கம்போல் ஒரு ட்ரேயில் புதிதாகத் திறக்கப்பட்ட ஒரு பிஸ்கட் பக்கட்டும், சுப்பல் வாழைப்பழச் சீப்பும் கொண்டுவந்து வைத்தாள். சண்முக மணி இரு சோடா போத்தல்களையும் இரு கிளாஸ்களையும் கொண்டு வந்தார். நானும் பிரமிளாவும் உள்ளே போய் விரும்பியபடி குடித்து வந்தோம்.

டாக்டர் கோனாற்றே கேட்டார்: ''மிஸ்ரர் மணி, குளிர்ந்த பானம் அருந்துவதற்கு என்று அழைத்தீர். இது மதிய போசனம் ஆயிற்றே!''

சிரித்தார் சண்முகமணி. "மிகவும் களைப்புற்று இருக்கிறீர்கள். இது ஒரு சிற்றுண்டி. கொலராவால் பீடிக்கப்பட்ட பிரதேசம் இது. இவை யாருடைய கையும் படாத உணவுகள்" என்றார் அவர். டாக்டர் கோனாற்றே பிஸ்கட் ஒன்றைக் கடித்தவாறு கூறினார்: "ஓ! அதை மறந்துவிடும். துப்புரவாக உணவு தயாரிக்கும் இடத்தில் உண்பதில் எனக்கு எவ்வித துன்பமுமில்லை. நான் உலகின் பல பகுதிகளில் கொலரா, பெரியம்மை, பிளேக் இப்படியான தீவிர நோய்கள் பரவிய இடங்களில் வேலை செய்திருக்கிறேன். போதிய பாதுகாப்புடன் இருக்க வேண்டும். அவ்வளவுதான். குஷ்டரோக ஆஸ்பத்திரி ஒன்றில் ஐந்து வருடங்கள் வேலை செய்தவன் நான்."

வாழைப்பழச் சீப்பை நன்கு கழுவிய பின்பே ட்ரேயில் வைத்திருந்தாள் செல்வராணி. வாழைப்பழம் ஒன்றை உரித்தபடி டாக்டர் கோனாற்றே கூறினார்: "நீங்கள் படித்தவர்கள். சுகாதார முறைகளை ஒன்றும் தவறாமல் கடைப்பிடிக்கிறீர்கள். நாம் பொது மக்களுக்கும் இதை எடுத்துரைக்க வேண்டும்."

அம்மா வந்து வாசலில் நின்றா. அவளை அறிமுகப்படுத்தினார் டாக்டர் காசிநாதன். டாக்டர் கோனாற்றே எழுந்து, கைகூப்பி வணங்கித் தமிழில் 'வணக்கம்' என்றார். அவர் உபயோகித்த முதல் தமிழ்ச்சொல் அது தான்.

டாக்டர் காசிநாதன், சுருக்கமாகச் சண்முகமணி குடும்பத்தைப் பற்றியும், நான் அங்கே வசிப்பதைப் பற்றியும் அவருக்குக் கூறினார். கடந்த சில ஆண்டுகளாகச் சண்முகமணியின் அப்பா, பாரிசவாதம் வந்து நடக்க முடியாமலும் நன்கு பேசமுடியாமலும் இருப்பதைக் கூறியதும், டாக்டர் கோனாற்றே, "அவரை நான் பார்க்க முடியுமா?" என்று கேட்டார்.

செல்வராணி கதவுத் திரைச் சீலைக்குப் பின்னால் நின்றவள், ஓடிப்போய்ப் பின் விறாந்தையில் கிடந்த

பெட்டி, குட்டான்களையும், மூத்திரப் போச்சியையும் அப்புறப் படுத்தினாள். அப்பாவுக்கு அவள் சேட் அணிய அவதிப்பட்டிருக்கும்போது சண்முகமணியும் டாக்டர்கள் இருவரும் அவ்விடம் வந்தார்கள். கோனாற்றே ஐயா சொன்னார்; ''தகப்பனாரைக் கஷ்டப்படுத்த வேண்டாம்.''

அசுபதி அப்பாவின் முன்னால், தனது கம்பீரமான உயரத்தை வளைத்து நின்று அவர் கூறினார்:

''தகப்பனாரே நான் உங்கள் கிராமத்தில் கொலராத் தடுப்பு வேலை செய்கிறேன். ஒருவாரம் நிற்பேன். உங்கள் மகன் மிஸ்ரர் மணி மிகவும் சிறந்த கிராமசேவகர்... அவர், தந்த பனானா பழங்களில் மூன்று உண்டேன். எனக்கு அப்போது எனது தேசம் ஞாபகம் வந்தது. என்னுடைய தகப்பனாரும் ஆபிரிக்காவில் உங்களைப்போல் தான் வருத்தமாக இருக்கிறார்.'' டாக்டர் காசிநாதன், இதை எல்லாருக்கும் தமிழில் கூறும்போது அசுபதி அப்பாமிகவும் சந்தோஷமான நிலையில் கேட்டுக் கொண்டிருந்தார்.

அவ்விடத்தில் போடப்பட்ட கதிரையில் அசுபதி அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்தார் டாக்டர் கோனாற்றே. இன்னுமொரு கதிரையில் உட்கார்ந்த டாக்டர் காசிநாதன் கூறினார்:''இந்தக் கிராமத்தில் தீபாவளி கொண்டாடுகிற ஒரே ஆள், நானறிய அசுபதி அப்பாதான்.'' எல்லோரும் சிரித்தனர். டாக்டர் இருமினார். அம்மா கேட்டா:

'நீங்கள் டாக்டர்களே இருமிறியள். அப்ப படியாத நாங்கள் எப்படி நோய்வராமலிருப்பது?''

உண்மையில் சில நாட்களாக டாக்டர் காசிநாதன் மிகவும் இளைத்திருந்தார். ஆனால், தற்காலிக இந்த இருமல் அவரது சிகரெட் புகைக்கும் பழக்கத்தை எவ்வளவோ குறைத்துவிட்டதை அவதானித்து, ஓரளவு திருப்தியடைந்தேன். அவர் என்னுடைய எஜமான்.

ஆனால், எஜமான்-சேவகி என்ற தொடர்பு மட்டும் இல்லாமல், அவர் மேல் ஒருவர் அன்பும் கரிசனையும் வைக்கும் அளவிற்கு மற்றவர் நலனையும் கண்காணிக்கும் பண்பு அவருடையது.

''ஊரிலை கொலராவின் நிலைமை எப்படி?'' என்று டாக்டர் காசிநாதனைக் கேட்டா அம்மா. கேள்வியைக் கேட்டு அறிந்துகொண்டு டாக்டர் கோனாற்றே, தனது கைமுஷ்டிகளைக் குத்துச் சண்டைக்காரரைப் போல் பிடித்தவாறு சொன்னார்: ''கொலராவை ஒரே ரவுண்டில் விழுத்திவிட்டோம். கொலரா இனித் தலை நிமிர்த்த முடியாது.''

அம்மா சிரித்தபடி கட்டிலில் இருந்தா.

மழை இலேசாகத் தூறியது தூரத்தில் இடி முழக்கமும் கேட்டது. டாக்டர்களின் வான் இன்னும் வரவில்லை: கொலராத் தடுப்பு ஊசி போடும் கூட்டத்தினர் அதிலே சுகாதாரக் கந்தோருக்குப் போய்விட்டனர். டாக்டர்கள் இருவரும் பழையபடி முன் விறாந்தைக்குப் போய் அங்கே வானை எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்தனர். பிரமிளாவும் நானும் எனது அலுவலக அறையில் இருந்தோம். டாக்டர்கள் பேசுவது கேட்டது-

டாக்டர் கோனாற்றே சொன்னார்: ''டாக்டர் காசி! கொலரா உங்களுக்குப் பிரச்சினை அல்ல. எதிர்பாராத விதமாக கொலரா தோன்றிப் பரவியதால், ஆரம்பத்தில் அதைக் கண்டுகொள்ளத் தவறிவிட்டார்கள். அதனால் தான் மரணங்கள் சில ஏற்பட்டன. இனிமேல், சிலருக்கு இந்த நோய் வந்தாலும், மரணம் நேராது. நோய்க்காவிகளை நாம் கண்டுகொண்டு, அவர்களுக்குச் சிகிச்சை செய்தால் கொலரா ஒரு தற்காலிகத் தொல்லைதான். அதைமுற்றாக ஒழித்துவிடலாம்.''

டாக்டர் கோனாற்றே சிறிது நேரச் சிந்தனையின் பின் தொடர்ந்து கூறினார். ''தமிழர்கள் சாதி என்ற

பெயரில், கணிசமான ஒரு பகுதித் தமிழர்களைத் தாழ்த்துவதும் நிராகரிப்பதும்தான் எனக்கு ஆச்சரியம் தருகிறது. நீங்கள் படித்தவர்கள், பெரிய நாகரிகம் உள்ளவர்கள், பண்புள்ளவர்கள்,பயபக்தியானவர்கள்-அப்படி இருந்தும், மனிதனைப் பிறவியிலேயே குறைந்தவன் என்று கூறும் அளவிற்கு எப்படி மனம் படைத்தவர்களாக இருக்கிறீர்கள்? எனக்கு விளங்கவில்லை. உங்களின் இளைஞர்கள் இந்தச் சமூக விகற்பத்தை எப்படி ஏற்றுக் கொள்கிறார்கள்? உங்களில் இளைஞரே இல்லையா?'' டாக்டர் காசிநாதன் பதில் தந்தார். ''நீங்கள் கேட்பது சரி, எங்கள் மத்தியில் வாலிபர் இல்லை என்றுதான் ஒப்புக்கொள்ள வேண்டும். நவீன காலத்திற்கு ஏற்ற இளைஞர் எம்மிடையே இருந்திருந்தால், ஒரு கிழமையிலேயே இந்தச் சாதிப்பிரச்சினை ஒழிந்திருக்கும்.''

டாக்டர் கோனாற்றே கூறினார்: ''டாக்டர் காசி! நான் இங்கிலாந்தில் படித்தபோது,நிறபேதத்தை எதிர்த்து ஒரு பெரிய ஊர்வலத்தை நடத்தினோம். அதில் என்னுடைய நண்பர்களான சிலோன் தமிழர்கள் பங்குபற்றினர். பிறப்பிலே ஏற்படும் எந்தவிதமான வேறுபாட்டையும் வைத்து, மக்கள் பாதிக்கப்படலாகாது என்று அவர்களில் ஒருவர், ஹைட்பார்க் மூலையில் பேசினார். உண்மையில் நிற அக்கிரமத்திலும் பார்க்கக் கொடியதும்விளங்காததும் உங்கள் இந்தச் சாதி விஷயம்.''

''என்னுடைய அபிப்பிராயமும் அதுதான்'' என்றார் எங்கள் டாக்டர். 'மிசவும் துக்கமான விஷயம்; வெட்கப்படவேண்டியது. பிறவிக் குருடர்கள் கூடச்செய்யாத தவறைப் படித்தவர்கள் செய்யலாமா? நிற பேதத்தில் கூட கண்களுக்கு நிற வித்தியாசம் தெரிகிறது. வெள்ளையர்கள் தாங்கள் தான் உயர்சாதி என்று கூறக்கூடும். அப்படியே கறுப்பர்கள் தாங்களே உயர்ந்தவர் என்று கூறலாம். ஆனால், இங்கே எந்தவிதமான வித்தியாசத்தையும் காண முடியாதே!''

டாக்டர் கோனாற்றே கக்கத்தில் சுரண்டபட்டவர் போல் சிரித்தார், அவர் சொன்னார்:

''காலையில், அந்த மனிதனின் வெளி நடப்புக்குப் பின் நீங்கள் கூறியது என் ஞாபகத்திற்கு வருகிறது. எங்கள் தோழி பிரமிளாகூட ஒரு லோ காஸ்ற் என்பது தமிழர்களின் கணிப்பு என்று கூறினீர்கள்... தமிழர்கள்! தமிழர்கள்!! தமிழர்கள்!!! உலக அழகிகள் போட்டிக்கு தமிழர்களின் பிரதிநிதியாகப் போகவேண்டியவள் உங்கள் கணிப்பில் குறைந்த சாதி!''

சிறிதுநேரம் யாரும் பேசவில்லை. மின்னல்—முழக்கம்; மின்னல் நீண்ட இடைவெளிக்குப் பின் முழக்கம். மின்னல் தூரப்போய்க் கொண்டிருந்தது. எங்கேயோ ஒரு பனை விழும் ஓசை கேட்டது.

''வாற வருடம், இங்கே, உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு கூடப்போவதாக ஒரு பிரமுகர் நேற்று எனக்குச் சொன்னார்'' என்று பேச்சை ஆரம்பித்தார், டாக்டர் கோனாற்றே. ''மிகவும் நல்லது.''

தனது பேர்சைத் திறந்து, அதில் எழுதிவைத்திருந்த ஒரு துண்டைப் படித்தார்,

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' துண்டைப் பேர்சில் வைத்துவிட்டுச் சொன்னார்; ''அப்படியானால், இந்தப் பாசக்குளமும் தமிழரின் ஊர்தானே? பாசக்குள மக்களும் தமிழர் கேளிர்தானே! எப்படி என்னுடைய லொஜிக்; தமிழ் ஆராய்ச்சி?''

எனது அலுவலக அறையை விட்டு விறாந்தைக்கு வந்தேன். பேச்சின் சுவாரஸ்யம் என்னை அங்கே இழுத்தது, அரை குறையாக விளங்கியும் கூட. பிரமிளாவும் எனக்குப் பின்னால் வந்தாள். செல்வராணி கதவுத் திரைச் சீலையைப் பிடித்தவாறு நின்றாள்.

டாக்டர் கோனாற்றே, மிகவும் குதூகலமான வேடிக்கை விரும்பும் மனநிலையில், பிரமிளாவைப்பார்த்து விட்டுச் சொன்னார் :

''நான் மட்டும் இளம்பிரமச்சாரியாக இருந்திருந்தால், பிரமிளாவைக் கலியாணம் செய்ய என்ன தியாகமும் செய்திருப்பேன். கண்ணை எனக்குச் சிமிட்டியபடி, பிரமிளாவிடம் அவர் கேட்டார்: ''ஏன், நீயும் என்னைக் கலியாணம் செய்து கொள்ள ஒத்துக் கொள்வாய் அல்லவா?''

ஓம் என்பது போல் தலை அசைத்தாள். அவரும் நாங்களும் சிரித்தோம்.

மழை பெய்துகொண்டிருந்தது. அகாலமாக இருண்டு விட்டது. லைட் போட்டபடி, டாக்டர்களின் வான் வந்து நின்றது. சண்முகமணியும் அம்மாவும் முன்விறாந்தைக்கு வந்தார்கள். டாக்டர் கோனாற்றே போவதற்கு முன் அம்மாவைப் பார்த்து, கண்களில் குறும்பு வீசியபடி சொன்னார்: 'தாயே, உங்கள் மகன் மிஸ்ரர் மணியும், எங்கள் மருத்துவப் பெண்மணி மிஸ் தங்கச்சியம்மாவும் பிரமச்சாரிகள் என்று அறிகிறேன். நான் அடுத்த முறை ஸ்ரீலங்கா வரும்போது, அவர்களைக் கணவனும் மனைவியுமாகக் காணவேண்டும்.''

பொல்லாத மனிதர் அவர்!

''அதுக்கென்ன'' என்றா அம்மா.

செல்வராணியும் பிரமிளாவும் அடுக்களைக்கு ஓடினார்கள்.

நான் சண்முகமணியைப் பார்க்க முயலவில்லை.

PUBLIC ... JA...

# 22

பாசக்குளத்தில் கொலராவின் சோக நாடகம் நான்கு கிழமைகள் தான் நடைபெற்றது. அதில் ஏழு பேர் இறந்து போனார்கள்; இருபது பேருக்கு நோய் இருந்தது.

பத்திரிகைகளில் படிக்கும் புள்ளி விவரங்களுக்கும் செய்திகளுக்கும், நேரிலே அனுபவிக்கும் நிகழ்ச்சிகளுக்கும் இடையே எவ்வளவு வித்தியாசம். அல்லாவிடில் மற்றப் பகுதிகளில் இறந்த அநேகரைவிட, பிறநாடுகளில் கொலராவால் இறக்கும் நூற்றுக்கணக்கானோரை விட, ஏன் பாசக்குளத்தின் ஏழு மரணங்கள் எமக்கு இவ்வளவு சோர்வும். சோகமும் தரவேண்டும்? சூர்யகலாவின் தனி மரணம், ஏன் என் மனதில் ஒருவெற்றிடத்தை உண்டாக்க வேண்டும்?

அதே வேளையில், ஒரு பேருண்மையையும் உணர்கிறேன். என்னைப் போல சர்வசாதாரண ஒரு மனித சன்மத்தின் இதயத்தில் இப்படியான வெற்றிடங்கள் பல வருடங்கள் நிரம்பாமல் இருக்கலாம். ஆனால், ஒரு சமூகத்தில் தனி ஒருவரின் மறைவால் ஏற்படும் வெற்றிடம் அதிக காலம் நிரம்பாமல் இருப்பதில்லை; அந்தச் சமூகத்தின் சமுதாய நோக்கு சந்தேகத்திற்கு இடமின்றிப் பக்குவம் அடைந்திருந்தால், தனி மரணங்கள், அதன் முன்னேற்றத்தை நிறுத்துவதில்லை. அங்கே, வெறும் நிழல்களாக இருந்தவர்கள் நிதர்சனமாவதையும், இறந்தவர் கொள்கைகளுக்கு வலுவும் பொலிவும் ஊட்டுவதையும் காண்கிறோம்.

இதற்கு, இந்தச் சிறிய பாசக்குளத்தில் ஒரு சின்ன உதாரணம் உண்டு. அது நான் மட்டும் அனுபவித்த ஓர் உண்மையாகவும் இருக்கலாம். எதிர்காலத்தில் இந்த ஊரிலே ஏற்படக்கூடிய சமூகச் சீர்திருத்தங்களின் பெரும் நாயகியாக சூர்யகலாவைக் கற்பனை செய்திருந்தேன்; அன்று அவளுடைய பிரேத ஊர்வலம் போன போது எனது கற்பனைக் கோட்டை பொடியாகி அந்தச் சவப் பெட்டிக்குள் அடங்கிய உணர்வே ஏற்பட்டது. ஆனால், இன்று அதே கற்பனையின் புனர் வாழ்வைக் காண்கிறேன், பிரமிளா என்ற பெண் மூலம். சந்தேகமின்றி பாசக்குளத்தின் சமூகப் புனர்வாழ்வுக்குத் தொண்டு செய்யக்கூடிய பொறுப்பு வாய்ந்தவள் பிரமிளா.

ஆமாம்-சமுதாய வாழ்வில் நல்ல மனிதரின் மரணம் ஏமாற்றம் தரப்படாது; அவர்களின் வாழ்வு அர்த்தம் உடையதாக இருந்திருந்தால் அந்த மரணம் முன்னேற்றப் பாதையிலே இன்னும் ஒரு படிக்கல்; அவ்வளவு தான்.

இந்த உண்மை என் மனத்தை ஆட்டிக்கொண்டிரா விடில், பாசக்குளத்திற்கு மட்டும் அல்ல, நமது நாட்டிற்கே ஏற்பட்ட இன்னும் ஓர் இழப்பு, எனது சித்தம் சிதறும் அளவிற்கு என்னைச் சித்திரவதை செய்திருக்கும். ஆனால், சொந்த உணர்வையும் நேச நினைவையும் பொறுத்தவரையில், என் கவலை அடங்க எவ்வளவு காலமாகுமோ? எங்கள் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் காசிநாதனின் மரணம் அத்தகையது.

அன்று எங்கள் வீட்டில், டாக்டர் கோனாற்றேயுடன் ஓர் ஆனந்தமான நிலையில் அவரைக் கண்டபின் காணும் பாக்கியத்தை இழந்து விட்டேன். அடுத்த நாள், பாலசிங்கம் பைத்தியம் பிடித்து அலைவதாகக் கேட்ட அவர், பாசக்குளம் வந்திருக்கிறார். பாலசிங்கத்தை மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் மன நோயாளிகள் வார்ட்டில்

அனுமதித்திருக்கிறார். ஆனால், நான் அவரைச் சந்திக்க வில்லை. அதன் பின்பு கொழும்பு போய்விட்டார் என்று அறிந்தேன்.

சித்திவிநாயகம் ஐயாவைக் காரசாரமாக ஏசியதால் சாதி அபிமானிகள் சிலரின் நாட்டாண்மைத் தலையீட்டினால், பாசகுளத்தில் இருந்து திடீரென மாற்றப்பட்டு விட்டார் என்று பேசிக்கொண்டார்கள். தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தப்பட்டார் என்றும் வதந்தி பரவியது. ஆனால், அதிகம் சிகரெட் புகைத்ததன் காரணமாக மூச்சுச் குழாய் புற்று நோய்க்கு ஆளாகி, சிகிச்சைக்குக் கொழும்பு சென்று அங்கே இறந்து போனதுதான் உண்மை.

அவருடைய மரண அறிவிப்பை வானொலியில் கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். பாசக்குளத்திலிருந்து சண்முகமணியும், ஆசைப்பிள்ளை மாஸ்டரும் செத்த வீட்டிற்குப் போனார்கள். எங்கள் சுகாதாரக் கந்தோருடன் சம்பந்தப் பட்டவரில் கொழும்பு போன ஒரே ஆள் பீயோன் கந்தையாதான். அவர் பிரேதத்துக்கு ஒரு மல்லிகை மாலை அணிந்ததாகவும். அப்போது உணர்ச்சி வசப்பட்டுக்கதறியதாகவும் சண்முகமணி அப்பாவுக்குக் கூறும்போது அறிந்தேன்.

மனத்திலே எதிர்பாராத சாவும் நோவும் மட்டுமா போராட்டத்தை நடத்துகின்றன? இனம் தெரியாத அன்பும், நம்பிக்கையும் தரக்கூடிய வேதனைக்கு எல்லை ஏது? டாக்டர் சோனாற்றே வந்து போன அன்று இரவு, நான் எதிர்பார்த்த சம்பாஷணை நடந்தது. ஆனால், நான் கனவிலும் காணாத விதமாக அது என் நெஞ்சைத் தாக்கியது.

நான் அந்த வீட்டிலே வசித்ததனால், நானும் சண்முகமணியும் கலியாண வயதுச் சோடி என்பதனால், இரு

வரும் ஒரு கிராமத்தில் ஒன்றாகப் பணிபுரிவதற்குத் தொழில் முறையில் இணைந்தவர்கள் என்பதனால், இன்னும் நல்லவர்கள் மனத்தில் தோன்றும் சில பொருத்தமான காரணங்களால், என்னையும் அவரையும் தாம்பத்திய வாழ்வில் ஒன்று சேர்த்து ஆசீர்வதிக்க, அன்பு பொழிய, அழகு பார்க்கச் சிலர் விரும்பியதில் வியப்பில்லை.

கண்டவுடன் என்மேல் காிசனம்கொண்ட கோனாற்றே ஐயா முதல், நாளும் பொழுதும் சினிமாச் சோடி பார்க்கும் பாணியில் எங்களை நோக்கிய செல்வராணிவரை, இந்த எண்ணம் சிலருக்கு இருந்தது. அவர் நேரடியாகக் கேட்டார். அவள் பலமுறை மறைமுகமாகத் தெரிவித்தாள். அவளும் அப்போதாவது நேரடியாகக் கேட்டிருந்தால், இப்போதைய நிலை ஏற்பட்டிருக்காது. எனது உண்மை நிலையை எப்பொழுதோ தெரிவித்திருப்பேன்.

அம்மாவும் செல்வராணியும் வந்து, அம்மாவின் கட்டிலில் உட்கார்ந்தனர். நான் எனது கட்டிலில் சாய்ந்து சொக்கன் எழுதிய, 'செல்லும் வழி இருட்டு', என்ற நாவலைத் தட்டிப்பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய வழி எனக்கு எப்பொழுதுமே இருட்டாக இருந்ததில்லை. எந்த விதமான இருட்டுச் சூழலிலும் போகவழி காணக் கூடிய அறிவு ஒளியில் எனக்குப் பூரண நம்பிக்கை; இது வரை திருப்திகரமான வெற்றி கூட. ஆனால், வெளிச்சம் அதீத பிரகாசமானால், சில பொருட்களின் பரிமாணம் தெரியாமல் போய்விடுவதும் உண்டல்லவா? அந்த நிலையில் நான் இப்போது இருந்தேன்.

அம்மா சம்பாஷணையை ஆரம்பித்தா— ''காப்பி டாக்டர், வேடிக்கையானவரே.''

நான் நாவலை என் நெஞ்சின் மேல் வைத்து, அவ வைப் பார்த்தேன்.

அம்மா சொன்னா: ''பிள்ளை, நாங்கள் உனக்குச் சொல்ல நினைச்சதை அவர் கடவுளைப்போலை சொல் லிப் போட்டார். என்ரை மனத்திலும் பட்டிட்டுது; தம்பிக்கு உன்னைச் செய்யலாம் என்று தான் விருப்பம். நீ ஓம் என்றால், வயது போக முந்தி அவருடைய விஷய காரியத்தை முடித்துப் போட்டு, பார்க்கலாம்.''

என் கண்களை நீர் மூடியது; பதில் தர என் நா அசையவில்லை. நெஞ்சில் குழப்பம் முட்டியது; சரிந்து படுத்தேன்; உரக்க அழாமல் இருக்க முடியவில்லை. நான் வெகு நேரம் முகம் குப்புறப் படுத்திருந்தேன். யோசிப் பதற்கு ஒன்றும் இல்லை. என்ன சொல்வது?

தலையை நிமிர்த்திப் பார்த்தேன். அம்மா அங்கே இல்லை; செல்வராணி கீழே விழுந்து விட்ட எனது நூலை எடுத்துப் பார்த்துக்கொண்டு இருந்தாள். சண்முக மணி எங்கள் அறை வாசலில் நின்றவர்; அசைந்து போவது தெரிந்தது.

செல்வராணி அந்தக் கட்டிலில் நித்திரையாகி விட் டாள். நான் எழுந்து கொல்லைப்புறம் போய் வந்தேன். அம்மா பின் விறாந்தையில், அசுபதி அப்பாவின் சாய் மனையில் சாய்ந்திருந்தா.

சண்முகமணியின் அலுவலக அறையில் விளக்கு எரிந் தது. நான் போய் மெதுவாகக் கதவைத் தட்டினேன்; கதவு தட்டும் போதே திறந்தது. அவர் முன்னால் நின் றேன்.

'ஏன் அழுதனீர்?'

மேலும் கேட்டார்—'விருப்பமில்லையா?' கீழே பார்த்தபடி நின்றேன். மணி பதினொன்று அடித்தது.

'தங்கச்சியம்மா' என்று அழைத்தார். "ஒரு முக்கிய மான விஷயத்தை அம்மா உன்னிடம் கேட்டா. அதற்கு உடனடியாகப் பதில் தர முடியாவிட்டால் யோசித்துக் கூறுங்கள்." நான் அவர் முகத்தைப் பார்த்துப் பதில் கூறி னேன்.

"அம்மாவும் நீங்களும், என்னை நல்ல மனது வைத்து மன்னிக்க வேண்டும். நான் வேலுசாமி மச்சானைக் கலி யாணம் செய்யப்போகிறவள்."

என்னால் தொடர்ந்து பேச முடியவில்லை. அவர், கதிரையில் சமாதி வைத்திருக்கும் சவம் போல் மாறின தைப் பார்த்தேன். அவ்விடத்தில் நிற்கவே பயமாக இருந்தது.

* *

காலையில் வழக்கம் போல், கிணற்று வக்கில் நீர் நிரம்பி இருந்தது. குளித்து விட்டு வந்தேன். அடுக்களைக் குள் நுழைந்தேன்.

"அம்மா"

"இரும் பிள்ளை"

புகைந்து கொண்டிருந்த அடுப்பை ஊதி, நெருப்பு சுவாலிக்கும் போது, அமமா சொன்னா: "தம்பி எல்லாம் சொன்னான். காலமை துவக்கம் விசரர் பைத்தியக்காரர் போலை திரிகிறான்."

"நான் என்ன அம்மா செய்ய?" என்று கேட்டேன். வாக்காலும் மனத்தாலும் நான் எப்பவோ மணமான வள்."

99116

கண்களை முந்தானையால் துடைத்துவிட்டு, அம்மா தட்டுக்களில் இடியப்பம் பிழிந்து கொண்டிருந்தா.

நான் கூறினேன் : ''அம்மா எங்களுடைய வீட்டுச் சங்கதியை உங்களுக்கு ஒரு அளவுக்குச் சொல்லி இருக்கிறேன். மச்சான் இல்லாது போனால் நானும் அண்ணாவும் இந்த நிலையில் இருக்க மாட்டோம். அவர் அன்புக்கு நான் அடிமையாகி விட்டவள். எதிர்காலத்தில் அவருடைய சொந்த வாழ்வில் பங்குபற்றி அவருக்குத் துணையாக இருக்க வேண்டும் என்று மனத்தில் நினைத்துவிட்டேன்.''

ஒரு பீங்கானிலே ஐந்து இடியப்பம் வைத்து, சுட வைத்த பழைய மீன் குழம்பை அதில் ஊற்றித் தந்தவாறு, அம்மா சொன்னா : ''தாரமும் குருவும் தலைவிதி வசம்!''

## 23

எனது அண்ணாவுக்கும் செல்வராணிக்கும் கலியாணம் அடக்கமான முறையில் நடந்தது.

அண்ணா, வேலுசாமி மச்சானுடன் பாசக்குளம் வந்த அன்றே, அவள் மேல் பற்று வைத்துவிட்டார். எனக்கு எழுதும் கடிதங்களில் எல்லாம் அவளின் சுகத்தைக் கேட்டு எழுதுவார். தனது சுகத்தை அவளுக்குத் தெரிவிக்கும்படி வேண்டுவார். அவளுக்குச் சில அறிவுரைகளைக் கூறும்படி எனக்கு எழுதுவார். எனது பெயருக்கு வரும் கடிதம், உண்மையில் எனக்கா, ராணிக்கா என்றுகூட நான் எண்ணியது உண்டு. இப்படியாகத் தனது மனதில்

இருந்ததை மறைமுகமாக ஓரளவு தெரிவித்துவிட்டார். அவளை நானும் நேசிக்க வேண்டும் என்பது அவர் விருப்பம்.

சின்ன வயதில் அண்ணா எங்கள் அம்மாவுக்குக் கூறுவார் : "தங்கச்சிதான் எனக்குப் பெண் பார்க்க வேண்டும். என்னுடைய மனைவி தங்கச்சியோடு சேர்ந்து வாழக்கூடியவளாக இருக்கவேண்டும்."

அவருடைய இந்த ஆசை எவ்வளவு திருப்திகரமாக நிறைவேறியிருக்கிறது. அண்ணா இங்கே வந்து ராணியைக் காண்பதற்கு முன்பே, அவள் மேல் காதல் கொண்டவள் நான். ஒரு நாள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், நான் அவளுக்குக் கூறினேன் :

"அக்கா, அக்கா என்று என்னைக் கூப்பிடுகிறாய். மச்சாள் என்று கூப்பிடும் காலம் வரும்."

ஒரு விஷயம் ஓரளவு நிச்சயமாகுமுன், நான் இப்படிப் பேசுபவள் அல்ல. ஆனால், அன்று வாயில் வந்ததைக் கூறிவிட்டேன். ராணி அதைப் பொருட்படுத்தாதவள் போல் இருந்துவிட்டாள். உண்மையில், அதன் பின்புதான் சண்முகமணிக்கும் எனக்குமிடையே ஒரு தொடர்பை அவளும் மனமார யோசித்தாள் என்று நினைக்கிறேன். நான் சொன்னதை அவள் வேறுவிதமாகப் புரிந்திருக்கிறாள்.

இந்தக் கலியாணத்தை நாங்கள் ஆடம்பரம் இல்லாத முறையில் நடத்தியதற்குக் காரணம், பாசக்குளத்தின் சூழ்நிலையில் எங்கள் வீட்டு நிலைவரமும் மனநிலையும் தான்.

ஒரு மாத காலத்திற்குள் பல பிரேத ஊர்வலங்கள் போன கிராமத்து வீதியில், பெரிய கலியாண ஊர்வலத்தை நடத்தவும், பறையும் கூக்குரலும் கேட்டுக்கொண்டிருந்த இடத்தில் தவிலும் நாதஸ்வரமும் ஒலிக்க

வும் சண்முகமணி விரும்பவில்லை. சடங்குகள் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடந்தன.

கல்யாண நாள் அன்று அசுபதி அப்பாவுக்கு 102ல் காய்ச்சல் இருந்தது. சல அடைசல் காரணமாக இருந்த காய்ச்சல் தணிய மூன்று நாட்கள் எடுத்தன.

சில நாட்களாக சண்முகமணியின் முகத்தில் சந்தோஷம் இல்லை. அவர் எனக்குக் கூறினார் ; ''தாம்பத்திய வாழ்வைப் பொறுத்தவரையில் நானும் இனிமேல் ஒரு மலையப்பன்தான். நீ இல்லாத அந்த வாழ்வை நான் விரும்பவில்லை.''

''ஏன் அண்ணா அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''பின்னை?''

''என்னையும் உங்கள் தங்கை போல் கருத முடியாதா?''

''இல்லை.''

''ஏன்?''

''நான் உன்னைக் காதலித்தேன்.''

''தெரியும் அண்ணா அளவில்லா அன்பு வைத்தீர்கள்.''

அவர் என்னவெல்லாமோ சொல்ல விரும்பியவர் போல் காணப்பட்டார். ஆனால். ஒன்றும் தொடர்ந்து பேசவில்லை.

இன்னும் ஒரு நாள் தாயுடன் பேசிக்கொண்டிருக்கும் போது அவர் கூறினார் : ''நான் தாரம் இழந்தவன்'' என்று.

அவர் கண்களை நீர் திரையிட்டது. அம்மா கேட்டா— ''ஏன் தம்பி உப்பிடிக் கதைக்கிறாய்?''

அவர் அவ்விடத்தை விட்டுப் போய்விட்டார். போகும் போது சொன்னார் : ''என்னுடைய சிரிப்பு போய் விட்டது; அவ்வளவுதான்.''

கலியாண வீட்டிற்கு வேலுசாமி மச்சான் வரமுடியவில்லை. அவருக்கு அந்த நாட்களில் அப்பெண்டிசைற்றி

சுக்குத் திடீரென ஒப்பரேஷன் நடந்தது. எங்களுக்கு எல்லாம் முடிந்த பின்புதான் அறிவித்தார். மலையப்ப தலைவரிடம் ஒரு கடிதம் கொடுத்தனுப்பியிருந்தார்.

''பிள்ளை, இதைப் பற்றி யோசித்துக்கொண்டு இருக்காதே. கலியாணத்தை ஓடி ஆடி நடத்து. இப்போது எனக்கு நல்ல சுகம். ஒப்பரேஷன் செய்விப்பது இப்போது எனக்குச் சிம்பிள் விஷயம். உடலிலே பாகம் பாகமாக வெட்டி எடுக்கிறாங்க. இருதயம் மட்டும் பத்திரமாக இருக்கு.''

ம்ம்! என்ன சஷ்டம் வந்தாலும் மச்சானின் சிரிப்பு மட்டும் அவரைவிட்டுப் போகாது.

இரு கிழமைகளில் மச்சான் மூன்று நாட்கள் லீவில், பாசக்குளம் வந்து போனார். புதுத் தம்பதிகளுக்கு ஒரு ட்ரான்சிஸ்டர் ரேடியோ பரிசளித்தார். அவர் அங்கே நிற்கும் போதே, டிசம்பர் முடிவில் நான் அரசாங்க சேவையில் இருந்து ராஜினாமா செய்வதாகக் கடிதம் அனுப்பி விட்டேன். மச்சான் சொன்னார்: ''பிள்ளை, ஜனவரி முதலாம் தேதியிலேயே நீ தோட்டத்தில் வேலை செய்வது நல்லது.''

மச்சான் கொத்மலை திரும்பும்போது, சண்முகமணியும் பத்து நாட்கள் லீவில் அவருடன் சென்றார். அவர் இதற்கு முன் மலைநாடு போனதில்லை. மச்சானுடன் சண்முகமணி போனது எனது மனத்திலே நிம்மதியையும் நிறைவையும் தந்தது. விரோதியைக்கூட தனது நண்பனாக்கக்கூடிய அற்புத மனிதர் எனது மச்சான்.

அண்ணாவுக்கு யாழ்ப்பாணத்திற்கு உத்தியோக மாற்றம் கிடைத்தது. சமூக சேவைப் பகுதியில் கிளாக்காக இருந்தவர் நலம் பேணும் உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணம் வந்தார். பாசக்குளத்தில் தனது வீட்டில் இருந்துதான் யாழ்ப்பாணக் கச்சேரியில் இருந்த அவருடைய வேலைப் பகுதிக்குப் போய் வந்தார்.

அவ்வப்போது சமூக சேவை வானில் உத்தியோக விஷயமாகப் பாசக்குளத்திற்கு வருவார். தான் புகுந்த இந்தக் கிராமத்துக்கு வந்த சில நாட்களிலேயே சில திட்டங்களை வகுத்தார். மேலதிகாரிகளின் ஆதரவு இந்தத் திட்டங்களுக்குக் கிடைக்கும் என்று கூறினார். அண்ணா மேலும் சொன்னார் : ''கொலரா செய்த பாதிப்பின் ஞாபகம் மறையமுன்னம், பாசக்குளத்துக்குச் சில சமூக நல வேலைகளைச் செய்யமுடியும். இப்போது மற்றவர்களின் அனுதாபம் உண்டு. இந்த நல்லெண்ணம் அதிக நாள் இருப்பதில்லை.''

* * *

எனது பிரயாணப் பெட்டிகள் முன் விறாந்தையிலிருந்தன. பாலசிங்கமும் பிரமிளாவும் ஒன்றாக என்னை வழியனுப்ப வந்திருந்தார்கள். அம்மா சொன்னார் : ''ஒரு வருசம் போனதே தெரியவில்லை. நீ மூந்த நாள் வந்ததுபோல் இருக்கு.''

சண்முகமணி சொன்னார் ; ''தங்கச்சி எங்களுடன் எத்தனையோ வருடங்கள் சீவித்ததுபோல் இருக்கிறது...''

நான் கோண்டாவில் ஸ்டேஷனுக்குப் போவதற்குத் தெய்வேந்திரராசாவின் கார் வந்து நின்றது. பெட்டிகளைக் காரில் வைத்தார் சண்முகமணி.

சமூக சேவைப் பகுதி வான் ஒன்று வந்து அண்ணாவை இறக்கிவிட்டுப் போனது. செல்வராணி அவர் கொண்டு வந்த உத்தியோக ஃபைல்களை வாங்கிக் கொண்டாள்.

அம்மாவுக்கு நான் சொன்னேன் : ''அண்ணா உங்கள் ஊர்க்காரர் ஆகிவிட்டார். அவர் இந்தக் கிராமத்துக்கு எவ்வளவோ செய்யக்கூடியவர்.''

உள்ளே சென்று அசுபதி அப்பாவின் பாதங்களைத் தொட்டு வணங்கினேன். அப்பா கண்களில் நீர் ததும்ப, ''போட்டு வா பிள்ளை'' என்றார். □



# தங்கச்சியம்மா

நந்தி என்ற புனை பெயரில் சென்ற 40 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் நாவல், சிறுகதை, மருத்துவக் கட்டுரை நூல்களை எழுதிப் பாராட்டுப் பெற்ற டாக்டர் செ. சிவஞானசுந்தரம் மருத்துவத் துறையிலும் புகழ் பெற்றவர். இலங்கையிலும் இங்கிலாந்திலும் மருத்துவம் கற்று யாழ்ப்பாண மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராகக் கடமை புரிபவர். ஐ. நா. சபை சார்ந்த உலக சுகாதாரக் கழகத்தின் சார்பில் பயிற்றுநராக வட கொரியா, பங்களாதேஷ், மலேசியா, சிம்பாவே, தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலும் பணிபுரிந்தவர்.

*தங்கச்சியம்மா* என்ற இந்த நாவல் புதுமையானது. கற்பனைச் சம்பவங்கள் குறைந்தது. சமூக சேவையை அடித்தளமாகக் கொண்டது. சமுதாய உணர்வு மிக்கது. மருத்துவத்துறையிலும் அறிவூட்டுவது.

மலையகப் பகுதியைச் சார்ந்த *தங்கச்சியம்மா* மருத்துவ மாதாகப் பயிற்சி பெற்று யாழ்ப்பாணம் சார்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் குக்கிராமத்தில் பணி யாற்றுகிறாள். அவளது கடமை உணர்வும் சமூக சேவையும் யாவரையும் கவர்கிறது. கிராமத்தில் காலரா நோய் பரவுவதும் தடுப்பு முறைகளும் மரணத் துன்பமும் சோமசெட் மோம் சீனாவில் கண்ட காலரா கொடுமை பற்றிய நாவலையும் அல்பேட் காமுவின் காலரா நாவலையும் நினைவூட்டுகிறது. காலராவைக் கட்டுப்படுத்த உலக சுகாதாரக் கழகம் சார்ந்த டாக்டர்களும் கிராமத்திற்கு வந்து பணிபுரிவதும் நாவலோடு சிறப்பாகப் பின்னப் பட்டுள்ளது.

புதுமையான, சமூக சேவையை அறிவுறுத்தும் சமுதாய உணர்வுமிக்க நாவல்.

*செ. கணேசலிங்கன்*

*முன்னுரையிலிருந்து*

Wrapper printed by : AR prints, 375/8, Arcot Road, Madras-600 024, INDIA